# சமூக அறிவியல்

## பகுதி - 1

## வகுப்பு VII

**Social Science**
**Part 1**
**Std VII**
**Tamil Medium**

கேரள அரசு
பொதுக் கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி (SCERT) கேரளம்

**2024**

ST-501-1-SOC. SCI.-(T)7-VOL-1

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன்பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமைகொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.

என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.

எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

# 7

# சமூக அறிவியல்

*Prepared by*
**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695012, Kerala
Website : www.scertkerala.gov.in, e-mail : scertkerala@gmail.com
Typeset and design by : SCERT
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of General Education, Government of Kerala

அன்பான நண்பர்களே!

சமூக அறிவியல் என்பது சமூக வாழ்க்கை, கல்வி மேம்பாடு ஆகியவற்றை நிலைநிறுத்துவதற்கு அடிப்படையான ஒரு கற்றல் பிரிவாகும். கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்டு சமூகத்தை முன்னோக்கி வழி நடத்தவும் புதிய காலமும் சுற்றப்புறங்களும் ஏற்படுத்தும் சூழ்நிலைகளைக் கடந்து செல்வதற்கும் சமூகப்பாடங்கள் உதவ வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டம் கூறியுள்ள அடிப்படை உரிமைகளை அறிவியல் சிந்தனையுடன் செயல் படுத்தவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதற்குத் தேவையான காரணிகளைக் கண்டறியவும் சமூக அறிவியல் பாடம் நமக்கு உதவி செய்கிறது.

ஒதுக்கப்பட்ட அனைத்து சமூகப் பரிவினரையும் ஏற்றுக்கொள்ளும் மன நிலையை வளர்ப்பதற்கும், நாட்டின் மேம்பட்ட கலாச்சாரம் மற்றும் மதச்சார்பற்ற மரபுகளைப் பாதுகாப்பதற்கும் சமூகத்தைப் பற்றிய தெளிவான கண்ணோட்டம் நமக்கு இருக்க வேண்டும். புவியியலின் சிறப்பியல்புகளைக் கண்டறியவும், இயற்கையைப் பாதுகாக்கவும் விவசாய வளர்ச்சியை மேம்படுத்தவும் தேவையான அறிவு ஒரு சமூக அறிவியல் மாணவனுக்கு இருக்க வேண்டும்.

திருத்தப்பட்ட பாடத்திட்ட கட்டமைப்பு 2023 – ல் கூறியுள்ள இது போன்ற புதிய கண்ணோட்டங்களை உட்படுத்துவதன் மூலம் 7 – ம் வகுப்பில் சமூக அறிவியல் பகுதி – 1 உங்கள் வாழ்க்கையின் வெற்றிக்கு வழிவகுக்கும் என்று நம்புகின்றேன்.

சமூகத்தை மேலும் ஆற்றல் மிக்கதாக மாற்றவும் மனித மதிப்புகளை மேம்படுத்தவும் இந்தப் பாடப் புத்தகம் நிச்சயம் உங்களுக்கு உதவும் என்று நம்புகிறேன்.

அன்புடன்,

**முனைவர். ஜெயபிரகாஷ் ஆர்.கெ**
இயக்குநர்,
எஸ்.சி.இ.ஆர்.டி.

# Textbook Development Team

## Advisor

**Dr. K.N. Ganesh**
Chairman, Kerala Council for Historical Research

## Chairperson

**Dr. Baiju K.C.**
Vice Chancellor (In-Charge) Central Unitversity, Kasaragod

## Experts

**Dr. P.P. Abdul Razak**
Associate Professor (Rtd.), Department of History, P.S.M.O. College, Thirurangadi

**Dr. Anish V.R.**
Assistant Professor, Department of Political Science, S.A.R.B.T.M. Govt. College, Quilandy

## Members

**Anas N.S.**
Research Scholar, N.S.S. College Nilamel

**M. Johnbai**
M.V.H.S.S. Arumanoor, Thiruvananthapuram

**Johnson T.Y.**
C.S.I.H.S.S. For Deaf, Valakom

**Krishnan Kuriya**
AEO (Rtd.), Kannur South

**Musthafa Mattathoor**
Teacher Educator, Govt. Institute of Teacher Education, Malappuram

**T.S. Nisha**
S.N.V.U.P.S. Maruthamanpally, Kollam

**Nisha M.S.**
P.H.S.S., Mezhuveli, Pathanamthitta

**Premjith Sureshbabu**
Artist

**Priya S.S.**
G.V.H.S.S., Mithirmala, Thiruvananthapuram

**Rajan P.P.**
Trainer, B.R.C., Malappuram

**Rajan Kulangara**
Irigannoor H.S.S., Vadakara, Kozhikoode

**Saikumar P.**
A.M.L.P.S. Kaliyattumukku, Malappuram

## Tamil Version

## Experts

**Dr. Jeyakrishnan P.**
Professor & Head, Dept. of Tamil., University of Kerala.

**Dr. Manickaraj. K**
Associate Professor Dept. of Tamil, Govt. Women's College, Thiruvananthapuram

## Members

**Alice Mary S.,** HM, GHS Yellapathy.
**Amutha M.,** HSA, GVHSS Munnar.
**Velankanni I.,** PD Teacher (Tamil), GUPS Kannimallay.
**Victoria M.,** UPST (Tamil), VUPS Korandakad.
**Jothilakshmi A.,** UPST (Tamil), GHSS Devikulam.
**Geetha B.,** UPST (Tamil), GVHSS Munnar.

## Academic Coordinator

**Dr. Anil D.**
Research Officer, SCERT Kerala

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்தியாபவன், பூஜப்புரை, திருவனந்தபுரம், 695 012

# உள்ளடக்கம்


1. இடைக்கால இந்தியா ........ 7-24
2. இடைக்கால இந்தியா : கலாச்சார இயக்கங்கள் ........ 25-38
3. அரசியலமைப்பு : வழியும் வழிகாட்டியும் ........ 39-53
4. அநீதியிலிருந்து நீதிக்கு ........ 54-67
5. நமது பூமி ........ 68-81
6. இந்தியத் துணைக்கண்டம் ........ 82-93
7. உணவு உற்பத்தியிலிருந்து உணவுப் பாதுகாப்பு வரை ........ 94-110


இந்தப் புத்தகத்தில் கற்றலை எளிமையாக்க சில குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.


அதிக வாசித்தலுக்கு மதிப்பீடு செய்ய தேவையில்லை.


கற்றல் செயல்பாடுகள்


தொடர் செயல்பாடுகள்


நாம் வாசிக்கலாம்

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

இந்திய மக்களாகிய நாம். இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும் அமைந்ததொரு குடியரசாக நிறுவவும்.

அதன் குடிமக்கள் அனைவரும்

சமுதாய, பொருளியல், அரசியல் நீதி,
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் தன்னுரிமை,

சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் சமன்மை
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்.

அவர்கள் அனைவரிடையேயும்
தனிமனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
உடன்பிறப்புரிமையினை வளர்க்கவும்

உள்ளார்ந்த உறுதியுடையராய்,

நம்முடைய அரசமைப்புப் பேரவையில், 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை ஏற்று, இயற்றி, நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.



1

# இடைக்கால இந்தியா



*படம் 1.1*



*படம் 1.2*

மேலே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுநோக்கவும். இவை இடைக்கால இந்தியாவில் ஆட்சி செய்த இரண்டு அரச வம்சங்களின் வரலாற்றுச் சின்னங்களாகும்.

இதில் முதல் படம் உங்களுக்குத் தெரிந்திருக்குமல்லவா? சுதந்திர தினத்தன்று நமது பிரதமர் இங்கு தேசியக்கொடி ஏற்றுவதைப் பார்த்திருப்பீர்களல்லவா.


இது மொகலாய அரசரான ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தில் டில்லியில் கட்டப்பட்ட செங்கோட்டையாகும்.

இதே காலகட்டத்தில் தென்இந்தியாவில் நிலைபெற்றிருந்த விஜயநகரத்தின் தலைநகரமான ஹம்பியின் படமே இரண்டாவதாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த இரண்டு அரச வம்சங்களைக் குறித்து நாம் இந்த அலகில் கலந்துரையாடுவோம்.

## மொகலாய ஆட்சி

1526 – இல் மொகலாய ஆட்சியைத் தோற்றுவித்தவர் பாபர் ஆவார். 1857 வரை டில்லியை அதிகார மையமாகக் கொண்டு இந்தியாவை ஆட்சி செய்த மொகலாய ஆட்சியின் முக்கியமான ஆட்சியாளர்களின் பெயர்கள் உங்களுக்குத் தெரியுமா?




சொற்சூரியனிலிருந்து முக்கியமான மொகலாய அரசர்களை அறிந்து கொண்டீர்களல்லவா?

> மொகலாய அரசர்களின் படங்களைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பு தயாரிக்கவும்

மொகலாய பேரரசு மிகவும் பரந்து விரிந்த நாடாக இருந்தது. இன்றைய இந்தியாவில் மட்டுமன்றி அண்டை நாடுகளிலும் மொகலாய ஆட்சி பரவி இருந்தது.




*படம் 1.3 ஔரங்கசீப்பின் காலகட்டத்திலுள்ள மொகலாயப் பேரரசு*

நிலப்படத்தை உற்றுநோக்கி இன்றைய நாடுகளில் மொகலாய ஆட்சி பரவியிருந்த பகுதிகளைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்தவும்.

- ஆப்கானிஸ்தான்
-
-

## மொகலாயரும் முதல் பானிப்பட் போரும்

'மங்கோல் என்ற சொல்லிலிருந்து "மொகலாயர் " என்ற பெயர் உருவானது. மொகலாயப் பேரரசைத் தோற்றுவித்தவர் பாபர். இவர் தந்தை வழி துருக்கி ஆட்சியாளரான தைமூருக்கும், தாய்வழி மங்கோலிய மன்னரான செங்கிஸ்கானுக்கும் வாரிசாவார். 16 – ம் நூற்றாண்டில் ஐரோப்பியர்கள் இந்த அரச வம்சத்தை மொகலாயர் என்று அழைக்கத் தொடங்கினர்.

லோடி வம்சத்தின் கடைசி ஆட்சியாளராகயிருந்த இப்ராஹீம் லோடியும் காபூலை ஆட்சிசெய்த பாபரும் 1526 – இல் ஹரியானாவிலுள்ள பானிப்பட் என்னும் இடத்தில் வைத்து போர் செய்தனர். இது வரலாற்றில் முதலாம் பானிப்பட் போர் என அழைக்கப்படுகிறது. இப்போரின் வெற்றியின் வாயிலாக பாபர் இந்தியாவில் மொகலாய ஆட்சியை நிறுவினார்.

“கிழக்கை அதிரவைத்த பேரரசர் அக்பர்காலமானார். அக்பர் ஒரு சிறந்த பேரரசர் ஆவார். அவர் தனது அதிகாரத்தை நிலைநிறுத்தியதோடு மட்டுமின்றி அனைத்து குடிமக்களிடமிருந்து அன்பையும், மரியாதையும் பணிவையும் பெற்றுக் கொண்டார். உயர்ந்தவர், தாழ்ந்தவர் ,தெரிந்தவர் தெரியாதவர், இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர் என்ற வேறுபாடு இல்லாமல் வலிமையானவர்களிடம் சக்திவாய்ந்தவராகவும், பலவீனமானவர்களிடம் கருணையுடையவராகவும் நடந்துகொண்ட சுல்தான் அனைவரின் அன்புக்குரியவராகவும் இருந்தார்.... .”

இது பேரரசர் அக்பர் இறந்த பிறகு ஜெஸ்யூட் பாதிரி பியரிஜாறிக் (கி.பி.1605) எழுதிய இரங்கல் செய்தியாகும்.

இந்தக் குறிப்பிலிருந்து மொகலாயப் பேரரசர் அக்பரைப் பற்றி என்னென்ன தகவல்களைத் தெரிந்து கொண்டீர்கள்?

- அக்பர் மிகவும் சக்திவாய்ந்த பேரரசராக இருந்தார்.
-
-
-

ST-501-2-SOC. SCI.-(T)7-VOL-1



படம் 1.4 மொகலாய வம்சத்தின் புகழ்பெற்ற ஆட்சியாளரான அக்பர் பல்வேறு மதத் தலைவர்களுடன் கலந்துரையாடல் நடத்துகிறார்.

1575–இல் தனது புதிய தலைநகரான பத்தேபூர் சிக்ரியில் அக்பர் இபாதத்கானா என்னும் கட்டிடத்தைக் கட்டினார். பல்வேறு மதங்களிலுள்ள பண்டிதர்களும், பிரமுகர்களும் இங்கு கூட்டம் கூடுவது வழக்கம். அக்பர் பின்பற்றிய மத நல்லிணக்க கொள்கைக்கு இந்தக் கலந்துரையாடல்கள் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

எல்லா மதங்களுடையவும் நல்ல கருத்துக்களை ஒன்றிணைத்து அக்பர் உருவாக்கிய மதமே தீன்–இ – லாகி,. அனைவருக்கும் சமாதானம், அதாவது சுல்க் இ –குல் என்பதே இதன் மையக் கருத்தாகும். அனைத்து வழிபாடுகளும் மனிதர்களின் நலனுக்காகவே, என்ற கருத்தைத் தெளிவுபடுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது.



படம் 1.5 பத்தேபூர்சிக்ரி

‘ஜஸியா’ என்ற மத வரியைத் தடை செய்ததன் மூலம் அக்பர் தனது ஆட்சியில் அனைவரையும் சமமாக நடத்தினார் என்பதைப் புரிந்து கொள்ளலாம். மொகலாய ஆட்சியின் அனைத்து துறைகளிலும் எல்லா மதப் பிரிவினருக்கும் சமவாய்ப்பு வழங்கப்பட்டது. ராஜா தோடர்மால், ராஜா மான்சிங், ராஜா பகவந்த்தாஸ், பீர்பால் போன்றவர்கள் பேரரசர் அக்பரின் அரசவையில் முக்கியமான பதவிகளில் இருந்தவர்கள் ஆவர்.

அக்பர் இபாதத்கானா எனும் கட்டிடத்தைக் கட்டியதின் நோக்கமென்ன? குறிப்பு தயாரிக்கவும்.

"என்னைப் பின்பற்றுபவர்கள் பிற மதத்தில் உள்ளவர்களோடு பகைமையை ஏற்படுத்தி நேரத்தை வீணாக்கக் கூடாது. பிற மதத்தில் உள்ளவர்களோடு சூல்க்–இ–குல் (அனைவருக்கும் சமாதானம்) என்ற கருத்தை பரப்ப வேண்டும். விலங்குகளைக் கொல்லவோ, போரின் நேரம் தவிர பிற நேரங்களில் ஆயுதங்களைப் பயன்படுத்தவோ கூடாது" என்று அக்பர் தன்னைப் பின்பற்றியவர்களுக்குக் கட்டளையிட்டார் என்று மொகலாய சுல்தானாக இருந்த ஜஹாங்கீர் தனது நினைவுக்குறிப்பான 'துசுக்–இ–ஜஹாங்கிரி இல் குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கூற்றின் அடிப்படையில் அக்பரின் கொள்கை அவருடைய ஆட்சிக்காலத்தில் பல்வேறு பிரிவிலுள்ள மக்களிடையே மத சகிப்புத்தன்மையைப் பெறுவதற்கு எவ்வாறு உதவியது என்பதைக் குறித்து வகுப்பில் கலந்துரையாடல் நடத்தவும்.

## மொகலாய இராணுவம்


மொகலாய ஆட்சிக் காலத்தில் நாட்டை விரிவுபடுத்தவும், விரிவுபடுத்திய நாட்டை நிலைநிறுத்தவும் சிறந்த இராணுவம் தேவைப்பட்டது. இதற்காக அக்பர் மன்சப்தாரி என்ற இராணுவ முறையை நடைமுறைப்படுத்தினார். இம்முறையில் ஒவ்வொரு அதிகாரியும் தனது கட்டுப்பாட்டில் ஒரு குறிப்பட்ட இராணுவத்தை நிலைநிறுத்த கடமைபட்டிருந்தனர். இவ்வதிகாரிகள் நிலைநிறுத்த வேண்டிய குதிரைப்படை வீரர்களின் எண்ணிக்கையை 'மன்சப்' என்ற பதவி குறிப்பிடுகிறது. இராணுவ வீரர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் மன்சப்தாரியின் பதவி தீர்மானிக்கப்பட்டது. அரசு கருவூலத்திலிருந்து நேரடியாகப் பணத்தைச் செலவிட்டு இராணுவத்தை உருவாக்குவதற்குப் பதிலாக இந்த முறை நடைமுறைபடுத்தப்பட்டது. மன்சப்தாரிகளுக்குத் தனது பதவிக்கேற்ப நிலங்கள் வழங்கப்பட்டன. இந்தப் பூமியின் வரியைப் பயன்படுத்தி மன்சப்தாரிகள் தங்களது இராணுவத்தை நிலைநிறுத்தியிருந்தனர். சிறப்பான ஆட்சி நடத்த பிரமுகர்கள் மற்றும் இராணுவத்தின் உதவி தேவைப்பட்டது. இந்த இலட்சியத்தை அடைவதற்காகவே அக்பர் மன்சப்தாரி எனும் இராணுவமுறையை நடைமுறைப்படுத்தினார்.



மொகலாயரின் மன்சப்தாரி முறையைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடல் நடத்தவும்.

## மொகலாய ஆட்சிமுறை

மொகலாய காலத்தில் ஆட்சி வசதிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பார்ப்போம்.




மொகலாய ஆட்சியில் அக்பரின் காலத்தில்தான் இத்தகைய ஆட்சி ஒழுங்கு முறை திறம்பட நடைமுறைப்படுத்தப்பட்டது.

பேரரசர் நாட்டின் ஆட்சியாளராகவும். அனைத்து இராணுவங்களின் அதிகாரியாகவும் சட்டம் இயற்றுபவராகவும் நீதிபதியுமாகவும் இருந்தார்.

மொகலாய ஆட்சிக்காலத்தில் இன்று போல நீதி நிர்வாகத்திற்குச் சிறப்பு நீதிமன்றங்கள் இல்லை. அதற்குப் பதிலாக அப்பகுதியிலுள்ள மத பண்டிதர்கள் (காசிமார்) பிரச்சினைகளை விசாரித்து தீர்ப்பு வழங்கினர். இந்தத் தீர்ப்பில் எதிர்ப்பு உள்ளவர்கள் பேரரசரை நேரடியாகப் பார்த்து முறையிட வாய்ப்பளிக்கப்பட்டது. அரசருக்கு ஆட்சியில் ஆலோசனைகள் வழங்க அமைச்சர்களும், அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர்.




படம் 1 . 6 பேரரசர் அக்பர் திவான் – இ– காஸ் – இல் மக்களின் குறைகளைக் கேட்கிறார்.

## சமூக – பொருளாதார நிலை

மொகலாய ஆட்சிக்கால சமூகத்தைக் குறித்து அக்காலத்தில் இந்தியாவிற்கு வந்திருந்த ஐரோப்பிய பயணிகளும் வணிகர்களும் தங்களது பயணக் குறிப்பில் எழுதியுள்ளனர். நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பு இருந்தது என்றும் சமூகம் பல நிலைகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.


சமூகத்தில் மிகவும் தாழ்ந்த நிலையில் சாதாரண மக்களும் மிகவும் உயர்ந்த இடத்தில் மன்னரும் காணப்பட்டார். கூலி, வருமானம் இவற்றைப் பொறுத்தே மக்களின் வாழ்க்கைத்தரம் அமைந்திருந்தது. நாட்டின் பெரும்பாலான மக்களும் விவசாயிகளாக இருந்தனர். அவர்களுக்கிடையே சாதி முறை நிலவியிருந்தது ஒவ்வொரு சாதியில் உட்பட்டவர்களுக்கும் அவரவர்களுக்கென்று நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும் காணப்பட்டிருந்தன. மொகலாய ஆட்சிக் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த பிரெஞ்சு பயணியான டவர்னியர் இந்தியாவின் அன்றைய சமூகநிலையையும் வாழ்க்கை முறையையும் குறித்து தனது பயணக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு இடத்திலும் மக்களின் வாழ்க்கை முறை, உணவு, உடை என்பவற்றில் பல்வேறு வேறுபாடுகள் காணப்பட்டிருந்தன.பாபர் தனது நினைவுக்குறிப்பில் அக்கால இந்தியாவில் காணப்பட்ட தொழில்களைக் குறித்தும் சாதிமுறைகளைக் குறித்தும் எழுதியுள்ளார்.

‘ஆக்ராவும் பத்தேபூர் சிக்கிரியும் லண்டனைவிட பெரியதும் அதிக மக்கள் தொகை கொண்ட நகரங்களாக காணப்பட்டன. இரு நகரங்களுக்கிடையில் ஏறத்தாழ 12 மைல் தூரம் காணப்பட்டது. இந்த வழிகள் முழுவதும் உணவுபொருட்கள் விற்கின்ற அங்காடிகள் காணப்பட்டன.

இது மொகலாய ஆட்சிக் காலகட்டத்தில் இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயப் பயணியான ரால்ப் ஃபிச் இந்தியாவிலுள்ள இரண்டு நகரங்களைக் குறித்து கூறிய விவரங்களாகும் இக்காலத்தில் நாம் பொருளாதாரத்தில் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருந்தோம் என்பதை இந்தக் குறிப்பிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. விவசாயத்தின் வளர்ச்சியே பொருளாதார முன்னேற்றத்தின் அடிப்படையாக இருந்தது. நெல், கோதுமை, பார்லி, கரும்பு, பருத்தி, எண்ணெய் விதைகள் போன்றவை அக்கால முக்கிய வேளாண் விளை பொருட்களாகும். அபுல் ஃபசல் தனது புத்தகமான 'அய்ன் –இ – அக்பரி'யில் இந்தியர்கள் பலவகையான நெற்பயிர்களைப் பயிர் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். விவசாயிகள் வரி செலுத்தும் காலகட்டம் வரை அவர்கள் நிலத்தைவிட்டு வெளியேற்றப்படவில்லை. மொகலாய ஆட்சிக் காலத்தில் தொழில்நுட்பம் மற்றும் நவீன உபகரணங்களின் பயன்பாடு விவசாயத்துறையை மேம்படுத்தியது. நீர்ப்பாசனத்திற்காக நீர்ச்சக்கரங்களும் (பாரசீக சக்கரம்) கால்வாய்களும் பயன்படுத்தப்பட்டன.

**அபுல் ஃபசல்**

மொகலாய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த முக்கியமான வரலாற்றாசிரியரே அபுல் ஃபசல். இவர் அக்பரின் ஆலோசனையாளராக இருந்து அவரது வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார் இவர் ‘அய்ன்–இ–அக்பரி, அக்பர் நாமா' எனும் நூல்களையும் எழுதியுள்ளார்.



படம் 1.7 பாரசீக சக்கரம்

வேளாண் உற்பத்தி அதிகரித்ததன் விளைவாக வியாபாரம் மற்றும் நகரமயமாக்கல் வேகமாக வளர்ச்சியடைந்ததன. குஜராத், வெளிநாட்டு பொருட்களின் வியாபார நுழைவாயிலாக இருந்தது. ஆடைகள், மஸ்லின் பட்டு, சீனி, அரிசி போன்றவை முக்கிய ஏற்றுமதி பொருட்களாக இருந்ததன. இக்காலத்தில் நீர் வழிப் போக்குவரத்தும் வளர்ச்சியடைந்திருந்தது. தாக்கா, முர்ஷிதாபாத், சூரத், லாகூர், ஆக்ரா போன்றவை அக்கால முக்கிய நகரங்களாகும்.

மொகலாய ஆட்சிக் கால நகரங்கள் இன்று எந்தெந்த நாடுகளில் அமைந்துள்ளன என்பதைக் கண்டறிந்து அட்டவணையை முழுமையாக்கவும்.

| நகரங்கள் | இன்றைய நாடுகள் |
|---|---|
| ● தாக்கா | ● வங்காளதேசம் |
| ● முர்ஷிதாபாத் | ● |
| ● லாகூர் | ● |
| ● சூரத் | ● |
| ● ஆக்ரா | ● |

## கலாச்சார ஒருங்கிணைப்பு



படம் 1.8 ராஸ்னாமா என்ற புத்தகத்தின் வெளிப்புற அட்டைப்படம்

### படத்தைக் கவனித்தீர்களல்லவா?

இது மொகலாய ஆட்சிக் காலத்தில் பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட மகாபாரதத்தின் வெளிப்புற அட்டைப்படமாகும். இதனை மொகலாய பேரரசனான ஷாஜஹானின் மகன் தாராசுக்கோ மொழிபெயர்த்தார். மொகலாய வம்சத்தினர் இந்தியக் கலாச்சாரத்துடன் இணைந்து செயல்பட்டதற்கு இது ஒர் எடுத்துக்காட்டாகும். இக்கால கட்டத்தில் பல்வேறு துறைகளிலும் கலாச்சார ஒருங்கிணைப்புகள் நடைபெற்றன. அத்தகைய பண்பாட்டு ஒருங்கிணைப்பிற்கான சில எடுத்துக்காட்டுகளைப் பார்ப்போம்.

தாஜ்மஹால், ஆக்ரா கோட்டை, செங்கோட்டை போன்றவை இந்தியா மற்றும் மொகலாயர்கள் கொண்டுவந்த பாரசீக கட்டிடக்கலைகளுக்கிடையே உள்ள தொடர்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். இக்காலத்தில் பாரசீகம், ஹிந்தி போன்ற மொழிகள் இணைந்து புதியதொரு மொழியான உருது உருவானது. இதன் ஒரு பகுதியாகவே. ஹிந்துஸ்தானி இசை வடிவமும் உருவானது.



*படம் 1.9 தாஜ்மஹால்*



*படம் 1.10 ஆக்ராகோட்டை*

மொகலாய ஆட்சிக் காலத்தில் மனித வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் இவ்வகையான ஒருங்கிணைப்பின் எடுத்துக்காட்டுகளைக் காணமுடியும்.


ST-501-3-SOC. SCI.-(T)7-VOL-1

## விஜயநகர ஆட்சி

இடைக்காலத்தில் டில்லியை அதிகார மையமாகக் கொண்டு ஆட்சி செய்த மொகலாய அரச வம்சத்தைக் குறித்து அறிந்துகொண்டீர்களல்லவா?. இந்தக் காலகட்டத்தில் தென் இந்தியாவிலும் பல்வேறு அரச வம்சங்கள் காணப்பட்டன. அவற்றில் முக்கியமானதே விஜயநகரப் பேரரசு

### விஜயநகரமும் ஹம்பியும்

விஜயநகரம் (வெற்றியின் நகரம்) ஒரேநேரத்தில் ஒரு நகரத்தினுடையவும் நாட்டினுடையவும் பெயராக இருந்தது கி.பி. 1565 – இல் இந்த நகரம் அழிக்கப்பட்டது. இந்நகரம் அதற்குப்பிறகு மக்களின் மனதில் மட்டுமே நிலைத்திருந்தது. அவர்களின் நினைவில் அது 'ஹம்பி' என்ற பெயரில் நிலைபெற்றிருந்தது. 1800 – இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரியான கேணல் மெக்கென்ஸி என்பவரே இதன் எச்சங்களைக் கண்டுபிடித்தார். அதன் வாயிலாகவே விஜயநகரத்தின் வரலாற்றை ஆராய ஆய்வாளர்களின் கவனம் ஈர்க்கப்பட்டது.




*படம் 1.11 கிருஷ்ண தேவராயரின் காலத்தில் விஜயநகரம்*

நிலபடத்தை உற்றுநோக்கி விஜயநகரத்தில் உட்பட்ட இன்றைய இந்திய மாநிலங்களைக் கண்டறிந்து அட்டவணைப்படுத்தவும்

- 
- 
- 

| விஜயநகர மன்னர்கள் | |
|---|---|
| • சங்கம ராஜ வம்சம் | • ஹரிஹரன், புக்கர் |
| • சாளுவ வம்சம் | • நரசிம்ஹ சாளுவ |
| • துளுவ வம்சம் | • வீர நரசிங்கன்<br>• கிருஷ்ண தேவராயர் |
| • அரவிடு வம்சம் | • திருமலை<br>• வெங்கிடா 1 |

கி.பி. 1336 – இல் ஹரிஹரன், புக்கர் என்ற சகோதர்களால் விஜயநகரப் பேரரசு நிறுவப்பட்டது. தென்னிந்தியாவின் சக்தி வாய்ந்த மற்றும் செல்வச்செழிப்பான விஜயநகரத்தின் முக்கியமான ஆட்சியாளரே கிருஷ்ணதேவராயர் (1509 - 1529) அவரைக் குறித்து ஐரோப்பிய பயணியான பார்போசா கூறியதை அறிந்துகொள்வோம்.



"யாருக்கும் எந்த துன்பமும் இல்லாமல் கிறிஸ்தவர், யூதர், கிராதன் (மலைக் குறவன்) மூர் எனும் வேறுபாடின்றி அவரவர் நம்பிக்கையில் இருந்துகொண்டே வந்து செல்வதற்கும் வாழ்வதற்குமான சுதந்திரத்தை அரசர் அனுமதித்திருந்தார்.நாட்டின் நீதி அமைப்பு சமத்துவம் வாய்ந்ததாக இருந்தது."

பார்போசா
இந்தியாவிற்கு வந்த போர்த்துக்கீசியப் பயணி

கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக்காலம் நாட்டின் விரிவாக்கத்தினுடையவும், வளர்ச்சியினுடையவும் காலமாக இருந்தது. இவரது காலத்தில் ஏராளமான கட்டுமானப் பணிகள் நடந்தன. கோட்டைகள், அரண்மனைகள், கோவில்கள் போன்றவை தலைநகரான ஹம்பியில் அதிக வசதிகளுடன் கட்டப்பட்டன. அவரது புகழுக்கு மற்றொரு முக்கிய காரணம் மதச் சகிப்புத்தன்மையே ஆகும். அனைத்து மதங்களையும் ஒரேபோல் ஏற்றுக்கொள்ளவும் அனைத்து மதத்தினருக்கும் அவரவர் மத நம்பிக்கையைக் கடைபிடித்து வாழ்வதற்கான சுதந்திரமும் அனுமதிக்கப்பட்டிருந்தது. கிருஷ்ண தேவராயரின் ஆட்சிக் காலத்தில் கலை,

இலக்கியம், பண்பாடு போன்ற துறைகள் வளர்ச்சி அடைந்திருந்தன. சிறந்த புலமை கொண்டிருந்த அவர் 'அமுக்தமால்யதா', 'ஜாம்பவதி கல்யாணம்' என்ற நூல்களை எழுதியுள்ளார். தெலுங்கு, கன்னடம், தமிழ் இலக்கியங்களின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்தார். 'அஷ்டதிக்கஜங்கள்' என்று அறியப்பட்டிருந்த பண்டிதர்கள் கிருஷ்ணதேவராயரின் அரச சபையை அலங்கரித்தனர்.



அக்பர் மற்றும் கிருஷ்ண தேவராயரின் மதக் கொள்கைகளை ஒப்பிட்டு குறிப்பு தயாரிக்கவும்.

## ஆட்சி அமைப்பு

விஜயநகர ஆட்சியிலும் மன்னர் ஆட்சியே நிலவியிருந்தது. ஆட்சி வசதிக்காக நாடு மண்டலங்கள் (மாகாணங்கள்), நாடுகள் (மாவட்டங்கள்), உபமாவட்டங்கள், கிராமங்கள் எனப் பிரிக்கப்பட்டிருந்தன. மன்னருக்கு உதவ அமைச்சரவை இருந்தது. அமைச்சர்களை பதவியிலிருந்து நீக்குவதற்கும், தண்டனை வழங்குவதற்குமான அதிகாரம் மன்னருக்கு மட்டுமே இருந்தது. நீதி வழங்குவதற்காகப் பல்வேறு நிலைகளில் நீதிமன்றங்கள் இருந்தன. மேல்முறையீட்டு அதிகாரம் மன்னருக்கே இருந்தது. சிறு குற்றங்களுக்கும் தொழில் சார்ந்த பிரச்சனைகளுக்குரிய தீர்ப்பு கிராம நீதிமன்றங்கள் மூலம் வழங்கப்பட்டன.

விஜயநகர ஆட்சியில் நாயக்கர் மற்றும் அமர நாயக்கன்மார். முக்கிய பங்கு வகித்தனர். இராணுவ அதிகாரிகள் 'அமர நாயக்கன்மார்' என அறியப்பட்டிருந்தனர். மன்னர்கள் இவர்களுக்கு நிலங்களை வழங்கியிருந்தனர். இப்பகுதிகள் 'அமர' என்ற பெயரில் அறியப்பட்டிருந்தது. அமரத்தை ஆட்சி செய்திருந்தவர்கள் அமர நாயக்கன்மார்கள். இந்தப் பகுதியிலுள்ள வரி வசூலிக்கும் உரிமை அமரநாயக்கர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இவர்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை மன்னருக்கு வரியாகச் செலுத்தினர். இவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான காலாட்படையையும், குதிரைப்படையையும், யானைப்படையையும் வைத்திருந்தனர். இம்முறையே 'அமரநாயக்க முறை' என்று அறியப்பட்டிருந்தது.



மன்சப்தாரி மற்றும் அமரநாயக்க முறைகளை ஒப்பிட்டு அட்டவணைப்படுத்தவும்

## சமூக – பொருளாதார நிலை

விஜயநகர சமூகத்தில் பல்வேறு மதங்களும், சாதிகளும் காணப்பட்டிருந்தன. பிராமணர்கள் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருந்தனர். கோயில்களுக்கு வழங்கப்பட்ட பூமியிலிருந்து கிடைக்கும் வருமானம் இவர்களுக்கு உரியதாக இருந்தது. கோவில்களில் பூஜைகள் மற்றும் சமயச் சடங்குகளைப் பிராமணர்கள் முன்னின்று நடத்தினர். மற்றுள்ளவர்கள் விவசாயம், வியாபாரம், கைத்தொழில்கள் போன்ற துறைகளில் ஈடுபட்டிருந்தனர். அரண்மனையின் வரவு செலவுகளைக் கணக்கிடவும், பூந்தோட்டங்க்களை அலங்கரிக்கவும் பெண்களின் சேவைகளைப் பயன்படுத்தி இருந்தனர்.

செல்வந்தர்களுக்கிடையே பலதார மணம் நிலவியிருந்தது. குழந்தைத் திருமணம், சதி போன்ற பழக்கங்களும் சமூகத்தில் காணப்பட்டன.



'நீங்கள் முன்னோக்கி செல்லும்போது உங்கள் முன் ஒரு பரந்த அழகான தெரு உள்ளது. அதில் பல வணிகர்கள் வசிக்கிறார்கள். அங்கு மாணிக்கங்களும், மரகதங்களும், பவளங்களும், முத்துகளும் மற்றும் ஆடைகளும் விற்பனைக்கு வைத்திருப்பதைக் காணலாம்......... அங்கு குதிரைகள், ஆரஞ்சு, முந்திரி, மரக்கட்டை .... போன்றவைகளும் விற்பனை செய்கின்றனர்..'

– டொமிங்கோ பயஸ்

விஜயநகரத்திற்கு வருகை தந்த போர்த்துக்கீசியப் பயணி)

மேலே கொடுக்கப்பட்டுள்ள பயணக்குறிப்பை வாசித்தீர்கள் அல்லவா.?

விஜயநகரத்தின் பெருமையை அந்நாட்டிற்கு வந்து சென்ற பல பயணிகளும் தங்களது பயணக் குறிப்பில் எழுதியுள்ளனர். விவசாயம் மக்களின் முக்கியத்தொழிலாக இருந்தது. அவர்கள் பட்டு, பருத்தி ஆடைகளைப் பயன்படுத்தியிருந்தனர். விஜயநகரத்தைச் சுற்றியுள்ள வறட்சியான பகுதிகளில் நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. 15 – ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கமலாபுர குளமும், ஹிரியா கால்வாயும் துங்கபத்ரா நதிக்குக் குறுக்கே கட்டப்பட்ட அணையும் விவசாயத்தை மேம்படுத்தியது.

நிலத்தை அளவீடு செய்து அதன் தரத்திற்கு ஏற்ப வரிவிதிக்கபட்டது. நிலவரி, தொழில்வரி, வீட்டுவரி, பல்வேறு உரிமைக்கட்டணங்கள், நீதிமன்ற தண்டனைக்கேற்ற அபராதம் போன்றவையே அரசின் முக்கிய வருமானமாக இருந்தன.

விஜயநகரம் ஒரு முக்கிய வியாபார மையமாக வளர்ந்தது. இந்தியா மற்றும் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வணிகர்கள் சிறப்பு வாய்ந்த விஜயநகரத்திற்கு வந்திருந்தனர். ஆட்சியாளர்கள் வெளிநாட்டு வியாபாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். போர்த்துக்கீசியர்களும், அரேபியர்களும் வெளிநாட்டு வியாபாரத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். சீனா, இலங்கை போன்ற நாடுகளுடனும் வியாபாரம் செய்திருந்தனர்.

அரேபியா மற்றும் மத்திய ஆசியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட குதிரைகளின் வியாபாரம் முக்கியமாக அரேபியர்களால் நடத்தப்பட்டது, வியாபாரத்தில் அதிகமாகக் குதிரைகளே விற்பனை செய்யப்பட்டன. குதிரை வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த உள்ளூர் வியாபாரிகள் 'குதிரைச்செட்டிகள்' என்றழைக்கப்பட்டனர். காலப்போக்கில் போர்த்துகீசியர்கள் அரேபியர்களை முந்திக்கொண்டு இந்த வியாபாரத்தைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.இதிலிருந்து கிடைத்த வருமானம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தியது.நகரத்திலிருந்து கிடைத்த சீன மண்பாண்டங்கள் சீனாவுடனான வியாபாரத் தொடர்பைக் குறிக்கிறது.

## கலாச்சாரம்



படம் 1.1 2 ஹஸார ராமர் கோவில் ஹம்பி



படம் 1. 1 3 விட்டலா சுவாமி கோவில் ஹம்பி

விஜயநகர ஆட்சிக் காலத்தில் கலாச்சாரத்துறை முன்னேற்றம் அடைந்திருந்தது. வேதங்கள், சாத்திரங்கள் படிப்பதற்காகப் பல பள்ளிகளும் நிறுவப்பட்டன. கலை, வாஸ்துக்கலை, சிற்பக்கலை, இலக்கியம், இசை போன்ற துறைகளும் சிறப்பாக வளர்ச்சியடைந்தன. கிருஷ்ண தேவராயரைப் போன்ற மன்னர்கள் கலை, இலக்கியத்தின் பாதுகாவலராக விளங்கினர்., 'திராவிட சிற்பக்கலையே' அதிகமாக நடைமுறையிலிருந்தது. விஜயநகர சிற்பக் கலையின் மற்றொரு முக்கிய சிறப்பம்சம் கோபுரங்கள் எனப்படும் பிரமாண்டமான கோவில் நுழைவு வாயில்கள் ஆகும்.



படம் 1.14 விருபாட்சர் கோயில் ஹம்பி



படம் 1.15 லோட்டஸ் மஹால் ஹம்பி

இக்காலத்தில் இலக்கியத்துறையிலும் முன்னேற்றம் காணப்பட்டிருந்தது. தெலுங்கு இலக்கியம் மிகவும் அதிகமாக வளர்ச்சியடைந்திருந்தது. அதுமட்டுமின்றி ஏராளமான சம்ஸ்கிருத நூல்களும் பல்வேறு வட்டார மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன.

## தொடர் செயல்பாடுகள்

- விஜய நகர ஆட்சிக்காலத்தின் கலாச்சார பங்களிப்புகள் தொடர்பான படங்களைச் சேகரித்து ஒரு டிஜிட்டல் ஆல்பம் தயாரித்து வகுப்பில் வெளியிடவும்
- அக்பர் மற்றும் கிருஷ்ண தேவராயர் ஆகியோரின் காலகட்டத்தில் பல்வேறு துறைகளில் செய்த சாதனைகள் முன்மாதிரியாக இருந்தன. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் அடிப்படையில் ஒப்பீடு செய்து கருத்தரங்கு நடத்தவும்.

**குறிப்புகள்**

- ஆட்சி முறை
- கலாச்சாரம்
- சொத்து
- நீதி

- மொகலாய – விஜயநகர ஆட்சி அமைப்பின் பொதுவான சிறப்பம்சங்களை ஒப்பபீடு செய்து அட்டவணையை முழுமைப்படுத்தவும்.

| மொகலாயப் பேரரசு | விஜயநகரப் பேரரசு |
|---|---|
| ● மன்னராட்சி | ● மன்னராட்சி |
| ● | ● |
| ● | ● |
| ● | ● |
| ● | ● |

- மொகலாய ஆட்சிக் காலத்தின்போது பல்வேறு துறைகளில் காணப்பட்ட ஒருங்கிணைப்பு தொடர்பான படங்களைச் சேகரித்து வகுப்பறையில் வெளியிடவும்.




# இடைக்கால இந்தியா : கலாச்சார இயக்கங்கள்

**தமிழ் வரிகள்**
கோனேரி வாழும்
குருகாய்ப் பிறப்பேனே
திருவேங்கடத்துச் சுனையில்
மீனாய்ப் பிறக்கும்
வேங்கடத்து செண்பகமாய் நிற்கும்
வேங்கட மலைமேல் தம்பகமாய்
கோவிலின் வாசலில் படியாயக்
கிடந்தும்
குலசேகர ஆழ்வார்
'பெருமாள் திருமொழி'

**விளக்கம்**
"திரு வேங்கடமலையில் ஒரு புறாவாகவோ அங்குள்ள குளத்தில் ஒரு மீனாகவோ மலையில் ஒரு செண்பக மரமாகவோ, ஒரு தூணாகவோ கோயிலில் ஒரு படியாகவோ பிறந்தால் போதும்."

ஒன்பதாம் நூற்றாண்டில் கேரளத்தில் வாழ்ந்திருந்த குலசேகர ஆழ்வார் என்ற பக்திக்கவிஞர் எழுதிய 'பெருமாள் திருமொழி' எனும் நூலின் சில வரிகளே மேலே கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த வரிகளிலிருந்து நீங்கள் புரிந்துகொண்ட கருத்து என்ன?

பக்தி என்பது ஒருவரின் வாழ்க்கையைக் கடவுளுக்கு முழுமையாக அர்ப்பணிப்பதாகும். பக்தியை அடிப்படையாகக் கொண்டு உருவான கருத்துகளும் செயல்பாடுகளுமே பக்தி இயக்கம் என்று அழைக்கப்படுகிறது.


இடைக்காலத்தில் இந்தியாவில் நிலவிய மரபுவழிக் கண்ணோட்டமும் சாதி முறைகளும் மக்களிடையே பாகுபாட்டை உருவாக்கியது. சமூகப் பாகுபாடுகளை எதிர்கொண்ட

ST-501-4-SOC. SCI.-(T)7-VOL-1

மக்கள் பக்தி இயக்கத்தில் ஈடுபாடு கொண்டனர். படிப்படியாக இந்தியாவில் வெவ்வேறு காலகட்டங்களில் பல்வேறு வழிபாட்டு முறைகளிலும், நம்பிக்கைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. இவ்வாறு இடைக்கால இந்தியா முழுவதும் வளர்ச்சி அடைந்த பக்தி, சூஃபி எனும் இரண்டு இயக்கங்கள் குறித்து இந்த அலகில் கலந்துரையாட உள்ளோம்

## தென் இந்திய பக்தி இயக்கம்

தங்களுக்கு விருப்பமான இறைவனிடம் அசைக்கமுடியாத பக்தியை வெளிப்படுத்தும் பாடல்களையும், கீர்த்தனைகளையும் இயற்றிய பக்திக் கவிஞர்கள் தென் இந்தியாவில் வாழ்ந்திருந்தனர். பக்திக் கவிஞர்களில் ஆழ்வார்கள் விஷ்ணுபக்தர்களாகவும், நாயன்மார்கள் சிவபக்தர்களாகவும் இருந்தனர். கி.பி.7 முதல் கி.பி. 12 – ஆம் நூற்றாண்டுகளுக்கிடையில் நிலைபெற்றிருந்த பக்தி இயக்கத்தின் சிறப்புகளைப் பார்ப்போம்.




பக்தி இயக்கம் தமிழ்நாட்டில் ஒரு பிரபலமான மக்கள் இயக்கமாக உருவானது. ஆழ்வார்கள் மற்றும் நாயன்மார்கள் நாடு முழுவதும் பயணம் செய்து வட்டார மொழிகளில் பக்திப் பாடல்களைப் பாடி மக்களிடையே பக்தியைப் பரப்பினர். மூட நம்பிக்கைகளும், ஏற்றத்தாழ்வுகளும் நிறைந்திருந்த அக்காலத்தில் பக்திக் கவிஞர்களின் எழுத்துக்கள் சாதாரண மக்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. சமூகத்தில் நிலவியிருந்த அர்த்தமற்ற சடங்குகளுக்கு எதிராகக் குரல் எழுப்பப்பட்டது. சாதி வேறுபாடின்றி சமூகத்திலுள்ள அனைத்து பிரிவினரும் பக்தி இயக்கத்தில் ஈடுபாடுகொண்டனர். ஆழ்வார்கள் நாயன்மார்களின் எழுத்துகள் இந்து மதத்தை மக்களிடையே மேலும் பிரபலமாக்கின.



*படம் 2.1 CE 1700 – இல் தமிழ்நாட்டிலுள்ள ஒரு சிவன் கோயிலிலிருந்து கண்டெடுக்கப்பட்ட தேவாரம் எனும் நூலின் ஓலைச்சுவடி*

ஆழ்வார்கள் எழுதிய பாடல்கள் 'நாலாயிரத்திவ்ய பிரபந்தம்' என்றும் நாயன்மார்கள் எழுதிய பாடல்கள் 'பன்னிரு திருமுறைகள்' என்றும் அழைக்கப்பட்டன. இக்காலத்தில் ஏராளமான கோயில்களும் கட்டப்பட்டன

## பக்தி இயக்கத்தின் முக்கியமான கவிஞர்கள்





தென்இந்திய பக்தி இயக்கம் அன்றைய சமூக அமைப்பில் என்னென்ன மாற்றங்களை ஏற்படுத்தியது? குறிப்பு தயாரிக்கவும்.

பக்தி இயக்கம் படிப்படியாக இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் பரவத் தொடங்கியது. பல்வேறு பகுதிகளிலுள்ள பக்தி இயக்கத்தைப் பரப்பியவர்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

### பசவண்ணா : கர்நாடகத்தைச் சேர்ந்த மனிதநேயமிக்கவர்

பசவண்ணாவால் உருவாக்கப்பட்ட 'அனுபவ மண்டபம்' என்ற விவாத அரங்கில் நடைபெற்ற ஒரு விவாதத்தின் விளக்கப்படமே கீழே கொடுக்கப்பட்டுள்ளது. படத்தை உற்றுநோக்கவும்.




*படம் 2.2 பசவண்ணா அனுபவ மண்டபத்தில் மக்களுடன் கலந்துரையாடுகிறார் (ஓவியரின் கற்பனையில்)*

## அனுபவ மண்டபம்

அனுபவ மண்டபம் என்பது 12 – ஆம் நூற்றாண்டில் பசவண்ணாவால் நிறுவப்பட்ட ஓர் ஆன்மீக விவாத மேடையாகும். அனுபவ மண்டபத்தில் நடைபெற்ற விவாதங்களுக்கு அல்லம்மா பிரபு மற்றும் அக்கா மகாதேவி போன்றவர்கள் தலைமை தாங்கினர். சாதி, பாலின பாகுபாடின்றி அனைவருக்கும் விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆன்மீக விவாதங்களுக்கும் அறிவைப் மேம்படுத்துவதற்கும் மக்கள் அனுபவ மண்டபத்திற்கு வந்தனர். விவாதத்தில் வெளிப்பட்ட கருத்துகள் 'வசனம்' என்ற பெயரில் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டன.

இதிலிருந்து அக்காலச் சமூக நிலைமைகளைப் பற்றி நீங்கள் என்னென்ன புரிந்து கொண்டீர்கள் என்பதை எழுதுங்கள்.

- சாதி வேறுபாடுகள் காணப்பட்டன.
- 
- 

பசவண்ணா என்பவர் 12 – ஆம் நூற்றாண்டில் கன்னட தேசத்தில் வாழ்ந்திருந்த ஒரு தத்துவஞானியும், சமூக சீர்திருத்தவாதியும், கவிஞருமாவார். இவர் சமூகத்தில் காணப்பட்ட சமூக, மத பாகுபாடுகளை மக்களுக்குப் புரிய வைக்க முடிவு செய்ததோடு அவற்றை முறியடிக்கவும் முயற்சி செய்தார். பசவண்ணா அவர்கள் சுதந்திரம், சமத்துவம், சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படியிலான கருத்துக்களை முன்வைத்தார். அவர் நிறுவிய வீரசைவ இயக்கத்தின் மூலம் இந்த கருத்துக்களை ஒருங்கிணைக்கவும் செய்தார்.

வீரசைவ இயக்கத்தின் முக்கிய செயல்பாடுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- பிராமண ஆதிக்கத்தையும் வேதங்களின் மேலாதிக்கத்தையும் எதிர்த்தார்.
- சாதி மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகளுக்கு எதிராக மக்களுக்கு விழிப்புணர்வு அளித்தார்.
- ஒரே தெய்வ நம்பிக்கையை ஊக்குவித்தார்
- தொழில் மற்றும் உழைப்பின் மகத்துவத்தை மக்களிடம் எடுத்துரைத்தார்.
- குழந்தை திருமணத்தை எதிர்த்ததோடு வயதுவந்தோர் திருமணம், விதவை மறுமணம் போன்றவற்றை ஊக்குவிக்கவும் செய்தார்.



*படம் 2.3 கர்நாடகாவில் பசவ கல்யாணியில் நிறுவப்பட்டுள்ள பசவண்ணா சிலை*

**மனித நேயம் மற்றும் சமத்துவத்தை எடுத்துரைத்த பசவண்ணாவின் கருத்துகள்**

- சிந்தனையும் செயலும் நன்றாக இருந்தால் நாடு முன்னேறும்.
- எந்தச் சாதியில் உட்பட்டவரானாலும் அனைத்து மனிதர்களுக்கும் சம உரிமை வழங்க வேண்டும்
- கடவுள் வழிபாட்டிற்கு இடைத்தரகர்கள் தேவையில்லை
- மறுபிறவி இல்லை. இந்தப் பிறவியைச் சிறப்பாக்கி வாழுங்கள்
- கோவில் கட்டுவதை விட நீங்களே கோவிலாக மாறுங்கள்

வீர சைவ இயக்கமானது சாதி அமைப்பு மற்றும் சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராக செயல்பட்டது. இந்தக் கூற்றை மதிப்பிடவும்.

## கபீர்: மனித நேயம் மிக்க பிரச்சாரகர்


இந்த வரிகளை வாசிக்கவும்...

> அல்லா, ராம், கரீம், கேசவ், ஹரி, ஹஸ்ரத் போன்ற பல பெயர்களில் கடவுள் அழைக்கப்படுகிறார்.
> தங்கத்தை உருக்கி மோதிரமாகவும், வளையலாகவும் மாற்றினாலும் அவை அனைத்தும் தங்கம் தானே?
> வேற்றுமை என்பது நாம் உருவாக்கும் சொற்களில் மட்டுமே ஆகும்.

நீங்கள் கண்டறிந்த கருத்துக்களைக் கூறவும்.

15 –ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவில் (இன்றைய உத்திரபிரதேசம்) வாழ்ந்த பக்தி இயக்கத்தின் பிரச்சாரகரான கபீர் எழுதிய வரிகள் தான் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

கபீர் எழுதிய 'தோஹா' எனப்படும் கீர்த்தனைகள் வாயிலாக அவர் தனது கருத்துகளை பரப்பினார். அவரின் கீர்த்தனைகள் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் மொழியில் எழுதப்பட்டதால் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன.



படம் 2.4 கபீர் நெசவு நெய்துகொண்டிருகிறார். (ஜெய்ப்பூர் அருங்காட்சியகத்தில் இருந்து எடுக்கப்பட்டது)

கபீர் இந்து–முஸ்லீம் சகோதர ஒற்றுமைக்காகச் செயல்பட்டார். இந்துவும், முஸ்லீமும் ஒரே மண்ணால் உருவாக்கப்பட்ட இரண்டு பாத்திரங்களே என்று கூறினார்.சாதி வேற்றுமை, தீண்டாமை, பூஜைகள், சிறப்புச் சடங்குகள், சிலை வழிபாடு போன்றவை அர்த்தமற்றவை என்றார். அவர் சாதி, மதம், நிறம், குடும்ப பாரம்பரியம், சொத்து இவற்றின் அடிப்படையிலான அனைத்து பாகுபாடுகளையும் எதிர்த்தார். பக்தி – சூபி இயக்கத்தின் கருத்துக்களால் அவர் பெரிதும் ஈர்க்கப்பட்டார். சமய மரபுகளை முற்றிலுமாகப் புறக்கணித்தார். உருவமற்ற கடவுளை நம்பிய கபீர் பக்தியை முக்தி பெறுவதற்கான வழி என்று பிரச்சாரம் செய்தார்.

அவர் தனது கருத்துகளைப் பரப்புவதற்காக தனது சீடர்களுடன் பல நாடுகளுக்குப் பயணம் செய்தார். அப்போது ஏற்பட்ட சில அனுபவங்களைப் படியுங்கள்



படம் 2.5 கபீரும் சீடர்களும் கிராமத் தலைவருடன்

ஒருமுறை கபீர் கவலையுடன் இருந்த ஒரு கிராமத் தலைவரிடம் ஏன் இப்படி இருக்கிறீர்கள்? எனக் கேட்டார். அதற்கு அவர். "கர்ம பலன், அல்லாமல் வேறு என்ன சொல்ல என்றார். பெரியம்மை (வசூரி) நோயால் மக்கள் இறக்கின்றனர். பரிகாரமாக மந்திரவாதம் நடத்த வேண்டும்" என்றார். கபீர் சிரித்துக் கொண்டே. "நோயைப் போக்க மந்திரவாதமா? மந்திரத்தால் எதையும் சாதிக்க முடியாது. சிகிச்சையால் மட்டுமே நோயைக் குணப்படுத்த முடியும்". என்று கூறினார்.
மற்றொரு முறை மக்கள் கபீருக்கும் அவரது நண்பர்களுக்கும் பரிசுகளை வழங்கினர். அதற்கு அவர் நாங்கள் நெசவாளர்கள், கொல்லர்கள், மர வேலை செய்பவர்கள், விவசாயிகள், செருப்பு தைப்பவர்கள். நாங்கள் எங்களுக்கேயுரிய வேலைகளைச் செய்து வாழ்கிறோம். எங்களுக்குப் பரிசுகள் தேவையில்லை என்றார்.

கபீரின் தோஹாவைப் பற்றியும், அவரைப் பற்றிய கதைகளையும் வாசித்தீர்களல்லவா. நீங்கள் கண்டறிந்தவற்றை எழுதவும்.

- மக்கள் தெய்வத்தைப் பல பெயர்களில் அழைக்கின்றனர்
- கபீர் மக்களை மூடநம்பிக்கைக்கு எதிராகச் சிந்திக்க தூண்டினார்
-
-



கபீரின் கருத்துக்கள் எந்த அளவிற்கு மக்களிடையே சமத்துவத்தையும் மத நல்லிணக்கத்தையும் வளர்க்க உதவின? கலந்துரையாடல் நடத்தவும்.

## குருநானக் : அன்பும் சகோதரத்துவமும்

ஒருநாள் குருநானக்கும் பாய் மர்தானாவும் சஜ்ஜன் தக் என்பவனுடைய சத்திரத்தில் ஓய்வெடுக்க வந்தனர். அங்கு வருபவர்களைக் கொள்ளை அடிக்கும் பழக்கம் அவனிடம் இருந்தது. இதனைப் புரிந்துகொண்ட குருநானக் இரவில் ஓய்வெடுக்க தயாராகவில்லை. அதற்குப் பதிலாக அவர் எழுதிய 'ஷாபாத்' என்ற பக்திப் பாடல்களைப் பாடத் தொடங்கினார். மற்றுள்ளவர்களின் பொருட்களைக் கொள்ளை அடிப்பது தவறு என்ற பொருள் தரும் வரிகளைப் பாடினார். பாட்டின் வரிகளைக் கேட்டபோது சஜ்ஜன் தக் தான் செய்த தவறை உணர்ந்து கொண்டான். அவன் குருவிடம் மன்னிப்பு கேட்டான். திருடிய பணம் முழுவதையும் ஏழைகளுக்குக் கொடுத்து நேர்மையாக வாழ வேண்டுமென குருநானக் அறிவுறுத்தினார். சஜ்ஜன் தக் அதன் பிறகு சத்திரத்தில் வருபவர்களுக்கு உதவி செய்து வாழத் தொடங்கினான்.



படம் 2.6 குருநானக்கும் பாயி மர்தானாவும்

இந்தக் கதையிலிருந்து நீங்கள் என்னென்ன கருத்துகளைப் புரிந்துகொண்டீர்கள்?

-
-
-

15–ஆம் நூற்றாண்டில் பஞ்சாபின் ஷேக்புராயில் தல்வண்டி (இன்றைய பாகிஸ்தான்) கிராமத்தில் குருநானக் பிறந்தார். பல்வேறு மதங்களின் கருத்துக்களை ஒன்றிணைக்க முயற்சித்தார். தனது கருத்துகளைப் பிரச்சாரம் செய்வதற்காக இந்தியாவிற்குள்ளும் வெளிநாடுகளுக்கும் பயணம் செய்தார்.




*படம் 2.7 அமிர்தசரஸில் உள்ள பாபா அடல் குருதுவாராவில் உள்ள குருநானக்கின் படம்*

குருநானக் மதங்களின் தேவையற்ற சடங்குகளுக்கு எதிராக குரல் கொடுத்தார். ஒரே கடவுள் என்ற கருத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முயன்றார். சமத்துவம், சகோதரத்துவம், அன்பு, நன்மை, மத சகிப்புத்தன்மை போன்றவற்றை ஊக்குவித்தார், சாதி வேற்றுமை, சிலை வழிபாடு, புனித யாத்திரை போன்றவற்றை எதிர்த்தார். பொருளாதார சமத்துவமின்மைக்கு எதிராகக் குரல் எழுப்பினார். போதை ஒழிப்பிற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அனைத்து மக்களும் ஒன்றாக உணவு உண்ணக்கூடிய 'லங்கார்' அதாவது பொதுவான சமையலறையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். அவருடைய கருத்துக்கள் பிற்காலத்தில் சீக்கிய மதம் உருவாகக் காரணமாக இருந்தது.

குருநானக் மத ஒற்றுமை, உலகளாவிய சகோதரத்துவம் போன்ற கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதற்கு என்னென்ன வழிமுறைகளைப் பின்பற்றினார்? குறிப்பு எழுதவும்.

இடைக்கால இந்தியாவில் கபீர், குருநானக் ஆகியோரின் சமூகம் மற்றும் மதம் தொடர்பான செயல்பாடுகள் கலாச்சார ஒற்றுமைக்கு வழிவகுத்தன.



குரு கிரந்தசாஹிப் கையெழுத்துப் படிவம் கி.பி. 1704.

சீக்கிய மதத்தின் புனித நூலே 'ஆதிகிரந்தம்' (குருகிரந்த சாஹிப்) ஆதி கிரந்தத்தில் குருநானக் போன்ற சீக்கிய குருக்களின் படைப்புகள் உட்படுத்தப்பட்டுள்ளன. ஒரே கடவுளை வழிபடுவதன் முக்கியத்துவம், சாதி –பாலின – பரம்பரை வேறுபாடுகளுக்கு எதிரான சிந்தனைகளும் இதில் உட்படுத்தப்பட்டுள்ளன. சமணமதம், புத்தமதம், இஸ்லாம் மதம் போன்றவற்றின் கருத்துக்கள் ஆதிகிரந்தத்தில் உட்படுத்தப்பட்டுள்ளன.

## பக்தி இயக்கத்தில் பெண்களின் பங்கு

இடைக்கால சமூகத்தில் பொதுவாகப் பெண்களுக்கு அங்கீகாரமும் மரியாதையும் குறைவாகவே காணப்பட்டன. வழிபாட்டு சுதந்திரமும் குறைவாகவே இருந்தது. பக்தி இயக்க வளர்ச்சியின் பலனாக பெண்கள் விரும்பும் கடவுளை வழிபடவும் கீர்த்தனைகள் பாடல்கள் ஆகியவற்றை எழுதுவதற்கும் பாடுவதற்கும் முன்வந்தனர்.



படம் 2.8 மீராபாய்–ஹிமாச்சல் பிரதேசத்திலுள்ள காங்ரா ஓவியம்

ராஜஸ்தானிலுள்ள சித்தோரில் வாழ்ந்திருந்த ராஜபுத்திர இளவரசியே மீராபாய். அவர் தனது ஆடம்பரவாழ்க்கையை துறந்து கிருஷ்ணபக்தராக வாழ்ந்தார். மீராபாய் எழுதிய கிருஷ்ணபஜனைகள் மிகவும் புகழ்பெற்றறவை.

காரைக்கால் அம்மையார், ஆண்டாள் என்பவர்கள் தமிழ்நாட்டின் புகழ்பெற்ற பக்திக் கவிஞர்கள் ஆவர். இவர்கள் தங்களுக்கு விருப்பமான தெய்வத்தின் மீதுள்ள ஆழ்ந்த பக்தியை வெளிப்படுத்தும் பாடல்களை இயற்றினார்கள்.

வீர சைவ இயக்கத்தின் முக்கியமானவரில் ஒருவரே அக்கா மகாதேவி. இவர் பெண்கள் எதிர்கொள்ளும் சமூக மற்றும் ஆன்மீக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நடந்த விவாதங்களுக்குத் தலைமை வகித்தார்.

மகாராஷ்டிராவிலுள்ள பஹினாபாய், சொய்றாபாய், காஷ்மீரிலுள்ள லால்தேத் போன்றவர்களும் பக்தி இயக்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளனர்.

பக்தி இயக்கத்தின் வளர்ச்சியில் மீராபாய், அக்கா மகாதேவி போன்றோர் ஆற்றிய பங்களிப்பின் முக்கியத்துவத்தைப் பற்றி கலந்துரையாடவும்.

## பக்தி இயக்கத்தின் பலன்கள்

பக்தி இயக்கம் என்பது இசை மற்றும் பக்தியின் வழியாகத் தன்னையே இறைவனுக்கு அர்பணித்தல் என்ற நோக்கத்தில் உருவானதாகும். ஆனால் இது பிற்காலத்தில் இந்தியாவின் சமூக மதம் தொடர்பான துறைகளில் பல்வேறு மாற்றங்களைக் கொண்டு வந்தது.

பக்தி இயக்கத்தின் பெரும்பாலான பக்திக் கவிஞர்களும் 'பிற்படுத்தப்பட்ட சாதியினர்' என்று ஒதுக்கப்பட்டவர்களாக இருந்தனர். இவர்கள் சாதி வேற்றுமைகளையும் பிராமணர்களுக்கு

ST-501-5-SOC. SCI.-(T)7-VOL-1

வழங்கப்பட்ட தனிப்பட்ட பதவிகளையும் எதிர்த்தனர். இதன் பலனாகச் சமூக சமத்துவம் என்ற கருத்து உருவாகத் தொடங்கியது. அனுபவ மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் பெண்களும் பங்கேற்றனர். பெண்களின் கருத்துக்களுக்கு அங்கீகாரம் கிடைத்ததுடன் ஆண் – பெண் சமத்துவத்தைக் குறித்தும் சிந்தித்தனர். பக்தி இயக்கத்தால் மக்கள் உழைப்பின் முக்கியத்துவத்தையும் அறிந்தனர்.

## சூபி இயக்கம்

அமிர்குஸ்ருவிடம் டில்லி சுல்த்தானாக இருந்த ஜலாலுதீன் கில்ஜி, ஷேக் நிஜாமுதீன் அவுலியாவை சந்திக்க விருப்பம் தெரிவித்தார். ஆனால் இது அவுலியாவிற்குத் தெரியக்கூடாது என்றார். தெரிந்தால் அவர் சம்மதிக்கமாட்டார் என்று சுல்தானுக்கு தெரியும். ஆனால் அமிர்குஸ்ரு அவுலியாவிடம் இதைத் தெரிவித்துவிட்டார். அரசர்களைச் சந்திக்க விரும்பாத அவுலியா அன்றைய தினம் நீண்ட பயணம் சென்று விட்டார். கான்ஹாவை அடைந்த அரசன் அவுலியாவை பார்க்க முடியாததால் அமீர் குஸ்ருவிடம் கோபம் கொண்டார். நீங்கள் சுல்த்தானை ஏமாற்றிவிட்டீர்களே என்றார்? 'அரசரை ஏமாற்றினால் எனது இவ்வுலக வாழ்க்கை மட்டுமே முடிவுபெறும்." "ஆனால் எனது குருநாதரை ஏமாற்றினால் மரணத்திற்குப் பின் உள்ள அழியாத வாழ்க்கையும் கிடைக்காமல் போய்விடுமே' என்றார் குஸ்ரு.

அமிர் குஸ்ரு மரணத்திற்குப் பயப்படவில்லை ஆனால் சூபி குருவான நிஜாமுதீன் அவுலியாவின் அதிருப்திக்குப் பயப்பட்டிருந்தார் என்பதையல்லவா இக்கதை உணர்த்துகிறது . இக்கதையிலிருந்து வேறென்ன புரிந்து கொண்டீர்கள்?

- 
- 

சூபிகள், பக்தியே கடவுளை அணுகுவதற்கான வழிமுறை என்று கருதினர். அதற்கான வழியாகப் பக்திப் பாடல்களைப் பாடினர். சாதாரண மக்களிடம் சென்று சூபி தத்துவங்களைப் பரப்பினர். ஒரே கடவுள் வழிபாடு என்ற நம்பிக்கை, சகோதரத்துவம், மனித அன்பு, கடவுளோடு உள்ள அர்ப்பணிப்பு போன்ற கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

### சூபிஸம்

சூபிஸம் என்ற வார்த்தை கம்பளி என்ற பொருள் தரும். சூப் (Suf) என்ற சொல்லிலிருந்தோ, தூய்மை என்ற பொருள் தரும் ஸபி (Safi) என்ற சொல்லிருந்தோ வந்திருக்கலாம் எனப் பண்டிதர்கள் கூறுகின்றனர்.

Sufis of Sindh: Motilal Jotwani. p.1

சூபிஸம் என்பது மத்திய ஆசியாவில் தோன்றிய ஓர் இஸ்லாமிய பக்தி இயக்கமாகும். இங்குள்ள ஆட்சியாளர்கள் சொத்து, அதிகாரம், ஆடம்பர வாழ்க்கைப் போன்றவற்றில் அதிகமாக ஈடுபட்டனர். இதற்கெதிராக உருவானதே சூபி இயக்கம். இந்தியாவில் 12–ஆம் நூற்றாண்டில் இவ்வியக்கம் உருவானது. சில்சிலாக்கள் எனப்படும் 12 சூபி பிரிவுகளில் சிஸ்தி, சுஹ்ரவர்த்தி எனும் இரண்டு சில்சிலாக்கள் இந்தியாவிற்கு வந்தனர்.



படம் 2.9 நிஜாமுதின் அவுலியாவின் தர்காவில் பாடப்பட்ட கவ்வாலி

ஆன்மீக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆடம்பர வாழ்க்கையைத் தவிர்த்தவர்கள் சூபி குருக்கள். சூபி குரு பீர் (ஷெய்க்) என்றும் அவரைப் பின்பற்றுபவர்களை முரீத் என்றும் அழைக்கப்பட்டிருந்தனர்.

சூபிகளின் வசிப்பிடங்களாக இருந்த கான்ஹாகுகள் அக்கால சமூக மையங்களாகவும் விளங்கின. கவ்வாலிகள் (Qawwali) எனப்படுவது சூபி மையங்களில் பாடப்படும் சமா என்றழைக்கப்பட்ட பாடல்கள் ஆகும். சுல்தான், மொகலாய ஆட்சிக்காலத்தில் பல்வேறு மதங்களுக்கிடையே ஒற்றுமையை உருவாக்க சூபி இயக்கத்தால் முடிந்தது.

இந்தியாவில் இருந்த முக்கியமான சூபிகள் மற்றும் அவர்களுடன் தொடர்புடைய இடங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| சூபி வாரியர்கள் | இடங்கள் |
|---|---|
| ஷேய்க் சிகாபுதீன் சுஹ்ரவர்த்தி | சில்கட் |
| ஷேய்க் நிஜாமுதீன் அவுலியா | டில்லி |
| காஜா மொய்தீன் சிஸ்தி | அஜ்மீர் |



சூபி இயக்கம் தொடர்பான ஒரு தகவல் விளக்கப்படத்தை உருவாக்க தேவையான தகவல்களைச் சேகரிக்கவும்.

சூபிகள் பக்தியே கடவுளை அணுகுவதற்கான முக்கியமான வழி எனக் கருதினர்.

கடவுளிடம் இணைவதற்குப் பக்திப் பாடலைப் பாடுவதே சிறந்த முறை எனச் சூபிகள் கருதினர்.

## வட்டார மொழிகளின் வளர்ச்சி

பக்தி, சூபி பற்றி பிரசாரம் செய்பவர்கள் சாதாரண மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் வட்டார மொழிகளிலேயே தங்கள் கருத்துக்களைப் பரப்பினர். இவை வட்டார மொழிகளின் வளர்ச்சிக்கு உதவின. தமிழ், பஞ்சாபி, வங்காளம், மராத்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளில் ஏராளமான பக்தி இலக்கியங்கள் உருவாயின. அதுமட்டுமின்றி வட்டார மொழியில் இலக்கிய நூல்களும் உருவாயின.

பாரசீகமும் ஹிந்தியும் இணைந்து உருவான உருதுமொழி இந்தியாவின் கலாச்சார ஒற்றுமைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அக்காலத்தில் அமிர்குஸ்ரு உருது மொழியில் புகழ்பெற்ற எழுத்தாளராக இருந்தார். கபீரின் தோஹகள் ஹிந்தி மொழி வளர்ச்சிக்கு உதவின. மகாபாரதம், இராமாயணம் போன்ற பல நூல்கள் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. இது மொழிக்கும் இலக்கியத்திற்கும் ஊக்கமளித்தது.


### வட்டார மொழிகளில் உருவான முக்கியமான இலக்கியப் படைப்புகளும் எழுத்தாளர்களும்

| வட்டார மொழி | நூல்கள் | எழுதியவர்கள் |
|---|---|---|
| தமிழ் | நாலாயிரத் திவ்ய பிரபந்தம்<br>பன்னிரு திருமுறைகள் | நாயன்மார்கள், ஆழ்வார்கள் |
| கன்னடம் | வசன இலக்கியம் | பசவண்ணா, அக்கா மகாதேவி, அல்லமபிரபு |
| தெலுங்கு | மகாபாரதம் மொழிபெயர்ப்பு | நன்னையா, திக்கண்ணா, யரபிரகதா |
| வங்காளம் | கீதா கோவிந்தம் | ஜெயதேவன் |
| ஹிந்தி | பத்மாவத் | மாலிக் முஹம்மது ஜெய்ஸி |
| மலையாளம் | ஞானப்பானா, அத்தியாத்மிய இராமாயணம், கிளிப்பாட்டு, மொய்தீன் மாலா | பூந்தானம்<br>துஞ்சத்து இராமானுஜன் எழுத்தச்சன், காசி முகம்மது |

வட்டார மொழியின் வளர்ச்சிக்குப் பக்தி இயக்கம் எவ்வாறு உதவியது? குறிப்பு தயாரிக்கவும்

## பக்தி சூபி கருத்துக்களின் தாக்கம்

பக்தி, சூபி இயக்கங்களின் செயல்பாட்டினால் சமூகத்தில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும்,? கொடுக்கப்பட்டுள்ள படத்தைக் கவனிக்கவும்.





**அதிக கருத்துக்களைச் சேர்க்கவும்...**

இடைக்கால இந்தியச் சமூகத்தில் பொதுவாக அளவிற்கு அதிகமான வேற்றுமைகளும், சமூக ஏற்றத்தாழ்வுகளும் இருந்தன. அக்கால அரசியல் மற்றும் சமூக நிலைகளைக் குறித்து முந்தைய பாடத்தில் படித்தோமல்லவா? இந்தச் சூழலில் பக்தி சூபி இயக்கங்கள் மக்களை ஒன்றிணைப்பதிலும், அமைதி காப்பதிலும் பெரும் பங்காற்றியுள்ளன, பல்வேறு மதங்களின் கருத்துக்களைச் சாதாரண மக்களிடம் கொண்டு செல்ல இந்த இயக்கங்களினால் முடிந்தது. பல்வேறு சாதிகள் மற்றும் மதங்களைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக வாழவும் உதவியது. நவீன இந்தியாவின் அடையாளங்களான சமத்துவம், வேற்றுமையில் ஒற்றுமை, சகோதரத்துவம், நட்பு, மத நல்லிணக்கம் போன்றவை பக்தி, சூபி கருத்துக்களின் தூண்டுதல்களால் உருவாக்கப்பட்டவையாகும்.

## தொடர் செயல்பாடுகள்

- நவீன இந்தியாவில் பன்முகத்தன்மையை ஒன்றிணைக்கும் கலாச்சாரம் உருவாவதக்கத்திற்குப் பக்தி, சூபி இயக்கங்கள் எவ்வாறு உதவின? என்று ஒரு கலந்துரையாடல் நடத்தவும்.
- 'பசவண்ணாவின் கருத்துகளும் சிந்தனைகளும்' என்ற தலைப்பில் ஒரு குறுநாடகம் தயாரித்து வெளியிடவும். கதை வசனத்தைப் பள்ளி விக்கியில் சேர்க்கவும்.

- கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தைப் பயன்படுத்தி பக்தி – சூபி பிரச்சாரகர்களின் படங்கள் மற்றும் கருத்துக்களை உட்படுத்தி ஒரு மலர் /டிஜிட்டல் ஆல்பம் தயாரிக்கவும்.




*படம் – 2.10 இடைக்கால இந்தியாவில் வாழ்ந்திருந்த முக்கியமான –பக்தி சூபி இயக்க பிரச்சாரகர்கள்*



# 3

# அரசியலமைப்பு : வழியும் வழிகாட்டியும்



படம் 3.1

“அனைத்து நெருக்கடிகளிலிருந்தும் பாதுகாப்பின்மையிலிருந்தும் இந்தியாவை மீட்கின்ற ஓர் அரசியலமைபிற்காக நான் முயற்சி செய்வேன். ஏழை மக்களுக்காக நாட்டை வடிவமைப்பதில் தைரியமாக குரல் கொடுக்கவும் நாடு தங்களுக்கும் சொந்தமானது என்று உணரவும் உதவுவேன். ஏற்றத்தாழ்வுகள் இல்லாத அனைத்து சமுதாய மக்களும் சகோதரத்துவத்துடன் வாழ்கின்ற இந்தியாவை உருவாக்க முயற்சி செய்வேன். தீண்டாமை, போதைப்பொருட்களின் பயன்பாடு இல்லாத இந்தியா, ஆண்களுக்கு நிகரான உரிமைகள் பெண்களுக்கும் கிடைக்கின்ற இந்தியா.”

**– மகாத்மாகாந்தி**

('யங் இந்தியா' – 1931)

மேலே உள்ள மேற்கோளை வாசித்தீர்களல்லவா?

சுதந்திரத்திற்குப் பிறகு தான் நாம் அரசியலமைப்பைப் பற்றி சிந்திக்க தொடங்கினோமா?

எதிர்கால இந்திய அரசிலமைப்பில் என்னென்ன கருத்துக்கள் இருக்க வேண்டும் எனக் காந்தியடிகள் விரும்பினார்?

- இறையாண்மை
- சமத்துவம்
- சகோதரத்துவம்
- ஆண் – பெண் சமத்துவம்
-
-

## அரசியலமைப்பு : சுதந்திர போரட்ட வீரர்களின் கனவு

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக எழுந்த முதல் மக்கள் போராட்டமே 1857–இல் நடந்த முதல் சுதந்திர போராட்டம். இராணுவ வீரர்கள், பழங்குடியினர், அரசர்கள், பிரபுக்கள், விவசாயிகள் எனப் பலர் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். மக்களிடையே மத ஒற்றுமையையும் தேச உணர்வையும் வளர்ப்பதற்கு இப்போராட்டம் உதவியது. தேச உணர்வு வலுப்பெற்றதுடன் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிராக இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் ஏராளமான வட்டார அமைப்புகள் உருவாயின. இந்தியன் அசோசியேஷன், மதராஸ் நேட்டிவ் அசோசியேஷன், பூனே சார்வஜனிக் சபை போன்றவை இவற்றிற்கு சில எடுத்துக்காட்டுகளாகும். இத்தகைய வட்டார அமைப்புகளிலிருந்து வேறுபட்டு தேசிய அளவில் 1885–இல் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானது,. அத்துடன் தேசிய அளவில் ஆங்கில ஆட்சிக்கெதிராக ஒருங்கிணைந்த போராட்ட வடிவமும் உருவானது. இந்த இயக்கத்தின் முக்கிய நோக்கம் இந்தியாவிலுள்ள பல்வேறு மக்களின் பிரச்சினைகளை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்வதும், சாதி, மத வட்டார சிந்தனைகளுக்கு அப்பால் தேசிய உணர்வை மக்களிடையே வளர்ப்பதும் ஆகும்.

அந்நிய ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வருவது மட்டுமல்லாமல் ஒவ்வொரு இந்தியனுக்கும் சிறந்த சமூக, அரசியல் வாழ்க்கையை உறுதிப்படுத்துவதும் சுதந்திர போராட்ட இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்தது. போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் மித – தீவிரவாத தேசீயக் கொள்கைகள் உட்பட பல்வேறு கருத்துகள் இருந்தபோதிலும் சில அடிப்படை கருத்துகளையும் மதிப்புகளையும் நிலை நிறுத்திக்கொண்டே தேசிய இயக்கம் செயல்பட்டுவந்தது.

காந்திஜியின் வருகையுடன் சுதந்திர போரட்ட இயக்கத்தில் பொதுமக்களின் பங்கேற்பு அதிகரித்தது.காந்திஜியின் செல்வாக்கு சமூக நீதி அடிப்படையிலான ஜனநாயகத்திற்கான கோரிக்கையை வலுப்படுத்தியது. தேசிய இயக்கம் முன்வைக்கும் சமூக நீதியின் அடிப்படையிலான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் மற்றும் மதநல்லிணக்கத்தின் கருத்துக்கள் போன்றவை நமது அரசியலமைப்பின் அடித்தளங்களாக இருக்க வேண்டும்

என்று தலைவர்கள் விரும்பினர். இந்தச் சிந்தனைகள்தான் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கத் தூண்டியது. கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தை உற்றுநோக்கி உங்கள் கருத்துக்களை எழுதவும்.




*படம் 3.2*

- தனி மனித சுதந்திரத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.
- மனித உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.
- அனைத்து மதங்களுக்கும் சமமான முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.
- சமூக நீதியை உறுதிப்படுத்த வேண்டும்.
- மக்களாட்சி முறையைப் பலப்படுத்த வேண்டும்.
-
-



இந்திய சுதந்திரப் போராட்டமே நமது அரசியலமைப்பின் அடித்தளமாக அமைந்தது! மதிப்பீடு செய்யவும்.

## அரசியலமைப்பின் முன்னோடி





*படம் 3.3*

உங்களுக்கு இப்படி ஒரு சந்தேகம் எழவில்லையா?

ST-501-6-SOC. SCI.-(T)7-VOL-1

1935 –ஆம் ஆண்டு ஆங்கிலேயர்களால் இயற்றப்பட்ட இந்திய அரசு சட்டத்தையே நம் நாடு குடியரசு ஆகும் வரை பின்பற்றி வந்தது. நமது அரசியலமைப்பின் பல கருத்துகளும் சட்டங்களும் இந்தச் சட்டத்திலிருந்து எடுக்கப்பட்டன. 1950 ஜனவரி 26 ஆம் நாள் நமது அரசியலமைப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தது

கீழேக் கொடுக்கப்பட்டுள்ள படத்தை உற்றுநோக்கி இந்திய அரசு சட்டத்தின் (1935) இன் தனிச்சிறப்புகளைக் கண்டறியவும்




## அரசியலைப்பு : உருவாக்கம்

1946 – ஆம் ஆண்டு ஆட்சி அதிகாரத்தை கைமாறுவதற்காக இந்தியா வந்த 'கேபினட் மிஷன்' முன் மொழிந்த முக்கியமான கருத்துகளில் ஒன்றே சுதந்திர இந்தியாவிற்கான சட்ட நெறிமுறைகள். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டே அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபை உருவானது.

## அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபை : சிறப்புக்கள்




### பழுதற்ற அரசியலமைப்புக்காக...



*படம் 3.4*
டாக்டர். பி.ஆர்.அம்பேத்கர்

நமது அரசியலமைப்பு உலகிலேயே சிறந்த அரசியலமைப்பாக இருக்க வேண்டும் என்பதே இதனை எழுத நியமிக்கப்பட்ட அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபையின் விருப்பமாக இருந்தது. நமது அரசியலமைப்பின் சிற்பியான டாக்டர்.பி.ஆர். அம்பேத்கார், சுமார் 60 நாடுகளில் உள்ள அரசியல் சட்டங்களை ஆய்வு செய்தார். பிறநாட்டு அரசியல் சாசனங்களின் நல்ல அம்சங்களை நமது அரசியலமைப்பில் உட்படுத்துவதே அவரது நோக்கமாக இருந்தது. இந்தியாவின் பன்முகத்தன்மை, வரலாற்றுப் பாரம்பரியம் கலாச்சாரம் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு வெளிநாட்டு அரசியலமைப்புகளின் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

## சிறப்புகள் பல...

உலகிலேயே மிகப்பெரிய எழுதப்பட்ட அரசியலமைப்பு இந்திய அரசியலமைப்பாகும். 1950 ஜனவரி 26 இல் நடைமுறைக்கு வந்த நமது அரசியலமைப்புச் சட்டத்தில் 22 பகுதிகளும் 395 பிரிவுகளும் 8 அட்டவணைகளும் இருந்தன

நமது அரசியலமைப்பின் முக்கிய சிறப்புகள் எவை?

**பாராளுமன்ற மக்களாட்சி முறை**

நாட்டின் ஆட்சியாளர்களைச் சட்ட உருவாக்க சபைகள் கட்டுப்படுத்துகின்றன.

**மக்களின் பரமாதிகாரம்**

நாட்டின் அனைத்து அதிகாரங்களும் மக்களிடமிருந்து உருவாகின்றன.

**அடிப்படை உரிமைகள்**

ஒவ்வொரு தனிமனிதனுக்கும் நாடு உறுதி செய்ய வேண்டிய அடிப்படை உரிமைகள் உள்ளன.

**அடிப்படைக் கடமைகள்**

ஒவ்வொரு தனிமனிதனும் நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் ஆற்ற வேண்டிய கடமைகள்.

**வழி காட்டும் நெறிமுறைகள்**

சமூக, பொருளாதார உரிமைகளை உறுதி செய்ய நாட்டிற்கு வழங்கப்பட்டுள்ள அறிவுரைகள்.

**சட்ட ஆட்சி**

ஒவ்வொரு குடிமகனும் சட்டத்திற்கு உட்பட்டவர் ஆவர். சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் யாருமில்லை.

**வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை**

குறிப்பிட்ட வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை.

**சுதந்திரமான பாகுபாடில்லாத நீதித்துறை**

சட்ட உருவாக்கம் மற்றும் நிர்வாக அமைப்புகளிலிருந்து சுதந்திரமாகச் செயல்படும் நீதிமன்ற முறை

**கூட்டாட்சி**

மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு அதிகாரம் பிரித்து வழங்கும் அமைப்பு.

**ஒற்றைக் குடியுரிமை**

நாட்டில் ஒரு குடியுரிமை மட்டுமே உள்ளது. மாநிலங்களுக்குத் தனி குடியுரிமை இல்லை.

அரசியலமைப்பின் சிறப்புக்களைக் குறித்து வகுப்பில் ஒரு கலந்துரையாடல் நடத்தவும்.

கீழேக் கொடுக்கப்பட்டுள்ள கூற்றைப் பரிசோதிக்கவும். அவற்றில் சரியானவற்றிற்கு நேராக 🙂 என்றும் தவறானவற்றிற்கு நேராக ☹ என்றும் வரையவும்

| | |
|---|---|
| நமது நீதிமன்றங்கள் அரசாங்கத்தின் கீழ் இயங்குகின்றன. | |
| சில அதிகாரங்கள் மாநில அரசுகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளன | |
| 18 வயது நிரம்பிய அனைவருக்கும் வாக்குரிமை உண்டு | |
| சட்டத்திற்கு அப்பாற்பட்டவர்கள் யாருமில்லை. | |
| இந்தியாவில் ஒரு நபருக்கு நாட்டின் குடியுரிமைக்கு அப்பால் மாநிலக் குடியுரிமையும் உள்ளது. | |
| மக்களாட்சியில் மக்களே முழு அதிகாரமுடையவர்கள். | |
| நமக்கு உரிமைகள் இருப்பதுபோல் கடமைகளும் உள்ளன | |
| நமது ஆட்சியாளர்கள் மீது யாருக்கும் கட்டுப்பாடு இல்லை | |

## சட்டங்களின் உறைவிடம்

நமது அரசியலமைப்பு நாட்டின் அடிப்படை சட்டம் ஆகும். மத்திய, மாநில அரசுகள் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையிலேயே எந்த சட்டத்தையும் இயற்ற முடியும், அரசாங்கங்கள் சட்டங்களை உருவாக்குவதற்கும் செயல்படுத்துவதற்கும் அரசியலமைப்பு சில வரையறைகளை அமைத்துள்ளது என்பதே இதன் பொருளாகும். சட்ட அமைப்பு மற்றும் ஆதாரம் என்ற நிலைகளில் அரசியலமைப்பிற்கு மிகப்பெரிய பங்குள்ளது.

வனம் – வனவிலங்கு பாதுகாப்புச் சட்டம்

தேசியப் பாதுகாப்புச் சட்டம்

குழந்தை தொழிலாளர் தடைச் சட்டம்

பேரிடர் மேலாண்மை சட்டம்

உணவு பாதுகாப்புச் சட்டம்

நிலச் சீர்திருத்தச் சட்டம்

தகவல் அறியும் உரிமைச் சட்டம்

சிறார் நீதிச்சட்டம்

தொழில் சட்டம்

ஊழல் தடுப்புச் சட்டம்

கல்வி உரிமைச் சட்டம்

சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம்

மேலே குறிப்பிட்ட அனைத்துச் சட்டங்களும் அரசியலமைப்பின்படி உருவாக்கப்பட்டவையாகும். செய்தித் துணுக்கில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தச் சட்டங்கள் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பானவை என்பதை அட்டவணைப்படுத்தவும்.

- குழந்தை தொழிலாளர் தடைச் சட்டம்.
- 
- 

நம்நாடு குழந்தைகளின் உரிமைகளுக்கு ஏன் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதைப் பற்றி கலந்துரையாடவும்.




*படம் 3.5 ஆதாரம் : கேரள அரசு குழந்தைகள் உரிமை பாதுகாப்புச் சட்டம்*

குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகளைத் தடுக்கவும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை உறுதி செய்வதுமே 1989–இல் இயற்றப்பட்ட குழந்தைகள் உரிமைச் சட்டத்தின் நோக்கமாகும். ஆண் – பெண் வேறுபாடின்றி இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுதியளிக்கும் உரிமைகளை நடைமுறைபடுத்தவும் குழந்தைகளின்– பாதுகாப்பிற்கு ஏற்ற நடவடிக்கைகளை உள்ளடக்கியும் இயற்றப்பட்ட சட்டமே போக்சோ 2012 சட்டம் (Protection of Children from Sexual Offences Act 2012). 18 வயதிற்குக் கீழ் உள்ள அனைவரையும் இந்த சட்டம் குழந்தைகளாகவே கருதுகிறது.

நீங்கள் இந்தச் சட்டத்தைக் குறித்து கேட்டிருக்கிறீர்களா?

ஒவ்வொரு குழந்தைகளுக்கும் சமூகத்தில் பயமின்றி பாதுகாப்புடன் வாழ உரிமை உண்டு. எந்தவொரு நபரிடமிருந்தும் ஏதேனும் தவறான அல்லது பாதுகாப்பற்ற தொடுதல், பார்வை போன்றவை ஏற்பட்டால் அவற்றைப் புரிந்துகொள்ள இயல வேண்டும்.

இது போன்ற செயல்களைச் செய்யாதே என்று கூறவும், எதிர்க்கவும் அவை நடைபெறாமல் தவிர்க்க அதிகாரிகளிடம் புகார் கொடுக்கவும் தயாராக வேண்டும்., பாலியல் வன்முறை வழக்குகள் ஏற்பட்டால் அவற்றை (பிரிவு 19 இன்படி) சிறார் காவல் பிரிவு அல்லது உள்ளூர் காவல்துறையிடம் தெரிவிக்கவேண்டும். போக்சோ வழக்குகளைக் கையாளும் அதிகாரிகள் குழந்தைகள் நலக் காவலர் (CWPO) என்று அழைக்கப்படுகிறார்கள்.

கேரள மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் போக்சோ சட்டம் 44 – வது பிரிவின் கீழ் கண்காணிப்பு அமைப்பை (Pocso Monitoring Cell) அமைத்துள்ளது.

போக்சோ குற்றங்களில் ஈடுபடும் எந்தவொரு நபருக்கும் கடுமையான தண்டனையை இச்சட்டம் வழங்குகிறது.



குற்றங்கள் நடைபெறுவதற்கான சூழ்நிலைகளை அறிந்து தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அவற்றிலிருந்து மீளுவதற்கான நடவடிக்கைகளைக் குறித்து வகுப்பில் கலந்துரையாடல் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான ஒரு துண்டு பிரசாரம் தயாரிக்கவும்.

## அரசியலமைப்பின் செயல்பாடுகள்

சட்ட அமைப்பு, ஆதாரம் போன்றவற்றைத் தவிர வேறு என்னென்ன செயல்பாடுகளை அரசியலமைப்பு செய்கிறது என்பதை ஆராய்வோம்.




*படம் 3.6*

## முத்திரை வாக்கிய அட்டை எழுதுவோம்

அரசியலமைப்பின் கொள்கைகளைப் பிரதிபலிக்கும் செய்திகளை உட்படுத்தி குடியரசு தின ஊர்வலத்திற்கான முத்திரை வாக்கியங்கள் அடங்கிய அட்டைகள் தயாரிக்கவும்.




*படங்கள் 3.7*

ST-501-7-SOC. SCI.-(T)7-VOL-1

## தவறுகளைச் சரி செய்து முன்னேறுவோம்

படத்தை உற்றுநோக்கி கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை கண்டுபிடிக்கவும்.




*படம் 3.8*

- 1976 – இல் என்னென்ன கருத்துக்கள் அரசியலமைப்பில் புதிதாக சேர்க்கப்பட்டன?
- இந்தியாவில் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?
- அரசியலமைப்பில் முதலாவதாக ஏற்படுத்திய திருத்தம் எது? எந்த ஆண்டு?
- நமது நாட்டில் சொத்துரிமை எவ்வளவு காலம் வரை அடிப்படை உரிமையாக இருந்தது?
- கல்வி இந்தியாவில் அடிப்படை உரிமையா? எந்த ஆண்டு முதல்?
- இந்திய அரசியலமைப்பு இதுவரை எத்தனைமுறை திருத்தம் செய்யப்பட்டுள்ளது?

நமது அரசியலமைப்புச் சட்டம் காலத்திற்கு ஏற்ப மாற்றத்திற்கு உட்பட்டதாகும். அரசியலமைப்புத் திருத்தம் என்பது மாறிவரும் சமூகத் தேவைகளைக் கருத்தில் கொண்டு மாற்றங்களைச் செய்யும் செயல்முறையாகும். எவ்வாறெல்லாம் மாற்றங்கள் செய்யலாம் என அரசியலமைப்பு விளக்குகிறது. 368 – ஆம் பிரிவின்படி அரசியலமைப்பைத் திருத்தம் செய்வதற்கான அதிகாரம் பாராளுமன்றத்திற்குரியதாகும். ஆனால் அரசியலமைப்பின் அடிப்படை கட்டமைப்பைத் திருத்தம் செய்ய முடியாது.



படம் 3.9

### அடித்தளத்தை அசைக்கக்கூடாது!

1973 –இல் கேரள அரசுக்கு எதிராக காசர்கோடு, எடநீர் மடத்தின் தலைவராக இருந்த கேசவானந்த பாரதி தொடர்ந்த வழக்கில் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பில் எந்த மாற்றமும் செய்யக்கூடாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

### கல்வி அடிப்படை உரிமை

2002 ஆம் ஆண்டில் 86 ஆவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்தின் படி கல்வி அடிப்படை உரிமையாக மாற்றப்பட்டது. இந்த விதிகள் அரசியலமைப்பில் 21 (எ) பிரிவாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த திருத்தத்தின்படி 2009 ஆகஸ்ட் 4 – இல் நடைமுறைக்கு வந்த சட்டமே 'கல்வி உரிமைச் சட்டம் 2009'. இந்தச் சட்டம் 6 முதல் 14 வயது வரையிலான அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வியை உறுதி செய்கிறது.

### சிறிய அரசியலமைப்பு



1976–ஆம் ஆண்டு 42–ஆம் அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின் படி மதச்சார்பின்மை, சோசியலிசம், ஒருமைப்பாடு என்ற சொற்கள் அரசியலமைப்பின் முகவுரையில் சேர்க்கப்பட்டன. இந்தத் திருத்தத்தின் மூலம் அரசியலமைப்பில் வேறு சில மாற்றங்களும் செய்யப்பட்டன. முக்கியமான பல மாற்றங்கள் செய்யப்பட்டதால் இந்தத் திருத்தத்தைச் சிறிய அரசியலமைப்பு (Mini Constitution) என அழைப்பர்.

முக்கியமான சில அரசியலமைப்புத் திருத்தங்களை உட்படுத்தி ஒரு காலக்கோடு தயாரிக்கவும்.

## சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது

நாட்டில் இனியும் நடைமுறைக்கு வராத நிலச் சீர்திருத்தம்.

வரதட்சணைத் தடைச் சட்டம் காகிதத்தில் மட்டுமே உள்ளது

மதுவினால் ஏற்படும் விபத்து: சட்டத்தால் மட்டும் தடுக்க இயலாது

குழந்தைகள் உரிமைச்சட்டங்களைக் கடுமையாக்க வேண்டுமென்ற கோரிக்கை

மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்தித் தலைப்புகளை வாசித்தீர்களல்லவா? நீங்கள் என்னென்ன கருத்துக்களைப் புரிந்துகொண்டீர்கள்?

சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் எதிகொள்ளும் பல்வேறு சவால்கள் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
அதற்கான காரணங்கள் என்ன?

- மக்களின் வெவ்வேறான விருப்பங்கள்
- மக்களின்விருப்பத்தை முழுமையாக உட்கொள்ள முடியாத சட்டங்கள்.
- சட்டங்களைப் பற்றி அறியாமை.
-

நமது சமூகம் வெவ்வேறு விருப்பங்களைக் கொண்டதாகும். ஆனால் அனைவரும் அரசியலமைப்பின்படி பொதுச் சட்டங்களுக்குக் கீழ்படிதல் வேண்டும். புதிய சட்டங்கள் உருவாகும்போது அதற்கெதிரான கருத்துகளும் போராட்டங்களும் ஏற்பட வாய்ப்புள்ளது. இது ஜனநாயக சமூகத்தில் இயற்கையானது. இவ்வாறு உருவாகும் எதிப்புகளை அரசியலமைப்பு ரீதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் அணுக வேண்டும்.

பன்முகத்தன்மையும் வேறுபாடுகளும் ஏராளமாக உள்ள நமது சமூகத்தில் அரசியலமைப்பு குறிப்பிடும் கருத்துக்களை உட்கொள்வதன் மூலம் மட்டுமே இந்தியாவை இறையாண்மை, சமத்துவம் மற்றும் மதசார்பற்ற ஜனநாயக குடியரசாக உயர்த்த முடியும்.

## தொடர் செயல்பாடுகள்

- சட்டங்கள் தொடர்பான, தலைப்புச் செய்திகள், படங்கள் இவற்றைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பு தயாரிக்கவும்.
- 'அரசியலமைப்பின் தனிச்சிறப்புகள்' எனும் தலைப்பை அடிப்படையாகக் கொண்டு வகுப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தவும்
- இந்திய அரசியலமைப்பிலுள்ள கருத்துக்களின் அடிப்படையில் உங்கள் வகுப்பிற்கான ஓர் அரசியலமைப்பு உருவாக்கவும்.
- 'குழந்தை பாதுகாப்பும் போக்சோ சட்டமும்' என்ற தலைப்பில் சட்ட ஆலோசகரின் உதவியோடு ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்யவும்.



# 4

# அநீதியிலிருந்து நீதிக்கு



*படம் 4.1*

"நான் ராமேஸ்வரம் தொடக்கப்பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது ஒருநாள் புதிய ஆசிரியர் ஒருவர் வகுப்பிற்கு வந்தார். முஸ்லீம் என்று அடையாளப்படுத்தும் தொப்பி அணிந்த நான் என்றும் முன்வரிசையில் பூ நூல் அணிந்த ராமநாத சாஸ்திரியின் அருகில் தான் அமர்ந்திருப்பேன். இந்து புரோகிதரின் மகன் முஸ்லீம் பையனுடன் அமர்ந்திருப்பதை அந்த ஆசிரியரால் உட்கொள்ளமுடியவில்லை. அவர் சமுதாய வழக்கத்தின் படி என்னை எழுந்து பின்வரிசையில் அமரக் கூறினார். எனக்கு மிகவும் வருத்தம் ஏற்பட்டது. ராமநாத சாஸ்திரியும் வருத்தப்பட்டார். நான் பின் இருக்கைக்குச் சென்றதும் ஏங்கி அழுத அவரது முகம் என் மனதில் அழியாத அடையாளமாகப் பதிந்தது. பள்ளி முடிந்ததும் நாங்கள் இருவரும் இந்த நிகழ்வை எங்கள் பெற்றோர்களிடம் கூறினோம். லக்ஷ்மண சாஸ்திரி அந்த ஆசிரியரை வரவழைத்தார். பின்னர் எங்கள் முன்னிலையிலேயே அப்பாவிக் குழந்தைகளின் மனதில் சமத்துவமின்மை மற்றும் சகிப்புத் தன்மையின்மை போன்ற விஷத்தைப் பரப்பக்கூடாது என்று கூறினார்.ஆசிரியர் தனது தவறுக்கு வருந்தியது மட்டுமல்லாமல், லக்ஷ்மனசாஸ்திரி கூறிய அறிவுரையின்படி தன்னையே மாற்றிக் கொண்டார்"

'அக்னிச்சிறகுகள், டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாம்

இந்தியக் குடியரசுத் தலைவராக இருந்த டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாமிற்கு குழந்தைப்பருவத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்வை குறித்து அறிந்து கொண்டீர்கள் அல்லவா?

சமூகத்தில் சில குறிப்பிட்ட பிரிவினருக்கு உரிய முன்னுரிமை அளிக்கப்படாமல் ஒதுக்கப்படும் நிலை இருந்ததாக டாக்டர்.ஏ.பி.ஜே. அப்துல்கலாமின் அனுபவத்திலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது. சமூகத்திலிருந்து தனிநபர்களை விலக்குவது, வாய்ப்புகளை மறுப்பது, மற்றும் சமூக பாகுபாடு போன்ற செயல்களையே அநீதி என்ற சொல் குறிப்பிடுகிறது. தவறான எண்ணத்துடன் சில சமூகப் பிரிவுகள் அவர்களின் சாதி, மதம், இனம் காரணமாக பின்தள்ளப்படுகின்றனர். திறமைகள் இருந்தும் தொழில், கல்வி வாய்ப்புகளைத் தடை செய்தும், தனி நபர் என்ற மதிப்பு அளிக்காமலும் சில சமூகப் பிரிவுகளை ஒதுக்கியே வைத்திருந்தனர். இந்த அலகில் சமூகநீதி கிடைப்பதற்காக செயல்பட்ட முக்கியமான நபர்களைக் குறித்தும் நிகழ்வுகளைக் குறித்தும் கலந்துரையாடப் போகிறோம்.

ஒதுங்கு,மாறு, தள்ளு போன்ற வார்த்தைகளை நீங்கள் அறிந்திருகிறீர்கள் அல்லவா? எந்த அர்த்தத்தில் இந்த வார்த்தைகள் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன.?

- 
- 
- 
- 

சம உரிமை கிடைக்கவேண்டிய இடங்களிலிருந்து சில பிரிவினரை ஒதுக்கி வைக்கும் செயலை ஒதுக்கி வைத்தல் (Marginalisation) என்று கூறுவர்.

சமூகத்தில் ஒதுக்கி வைத்தல் நிகழ்வது பல காரணங்களால் ஆகும்.









*படங்கள் 4.2*

படத்தைக் கவனித்தீர்கள் அல்லவா. இந்தப்படங்களில் காணப்படும் நிலைமைகள் என்ன?

- இயற்கை பேரிடர்
-
-
-

இயற்கை மற்றும் மனிதனால் ஏற்படும் பேரழிவுகளால் (Natural and Man made Disasters) சொந்தமான அனைத்து பொருட்களையும் இழப்பதன் மூலம் சிலர் ஒதுக்கி வைக்கப்படுகிறார்கள். வெள்ளப்பெருக்கு, நிலநடுக்கம், மண்சரிவு, கடல் சீற்றம் போன்ற இயற்கை பேரிடர்களாலும் போர், விபத்துகள், தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகள் போன்ற மனிதர்கள் உருவாக்கும் பேரிடர்களாலும் ஒதுக்கி வைத்தல் நடைபெறுகிறது

சாதி, மதம், பழங்குடியினர் பாலின வேறுபாடுகளின் அடிப்படையில் சிலரை வேண்டுமென்றே ஒதுக்கி வைப்பதன் மூலம் ஒதுக்கி வைத்தல் (Exclusion) நடைபெறுகிறது. கல்விக்கான வாய்ப்புகளை மறுப்பதும் இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்



ஒதுக்கி வைப்பதற்கான பிற காரணங்களைக் கண்டறிந்து பலவகையான ஒதுக்கி வைத்தலைக் குறித்து கலந்துரையாடல் நடத்துங்கள்.

கலந்துரையாடல் குறிப்புகள்

- விலக்குதல்
- குடியிறக்கம்
- இயற்கை பேரிடர்கள்
- மனிதரால் ஏற்படும் பேரழிவுகள்.

## சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் யார்?

சமூகத்தில் ஒதுக்கப்பட்ட மற்றும் பாகுபாடு காட்டப்படும் பிரிவினர் ஏராளம் உள்ளனர். பெண்கள், திருநங்கைகள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், சிறுபான்மையினர், வறுமையில் வாடுபவர்கள், அகதிகள், மாற்றுத் திறனாளிகள், சிறை தண்டனை அனுபவித்தவர்கள் போன்றோரை இதற்கு எடுத்துகாட்டுகளாக கூறலாம்.

இவற்றில் ஒவ்வொரு பிரிவினரும் ஒதுக்கி வைக்கப்பட்டதற்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களுக்கு மிகப்பெரிய வரலாறு உள்ளது.

**ஊருட்டம்பலத்தில் உள்ள அரசு நடுநிலைப்பள்ளி இனிமேல் அய்யங்காளி பஞ்சமி நினைவுப் பள்ளிக்கூடம்**



*படம் 4.3*
மகாத்மா அய்யங்காளி

திருவனந்தபுரம் : ஊருட்டம்பலம் அரசு நடுநிலைப்பள்ளி இனி மேல் அய்யங்காளி – பஞ்சமி நினைவு அரசு நடுநிலைப்பள்ளி என அழைக்கப்படும். குடிப்பள்ளிகூடமாக இருந்த ஊருட்டம்பலம் அரசு நடுநிலைப்பள்ளியில் வைத்து தான் வரலாறு காணாத போராட்டத்தை அய்யங்காளி துவக்கி வைத்தார். பஞ்சமி என்ற தாழ்த்தப்பட்ட மாணவியைப் பள்ளியில் படிக்க அனுமதிக்காததற்கு எதிர்ப்பு தெரிவித்து பஞ்சமியின் கையைப் பிடித்து பள்ளிக்கு அழைத்து வந்த அய்யங்காளி பள்ளியில் அந்த மாணவியை அமர வைத்தார். பஞ்சமி அமர்ந்ததால் சில ஜமீன்தார்கள் பள்ளிக்குத் தீ வைத்தனர். இன்றும் அப்பள்ளி அருங்காட்சியகத்தில் பாதி எறிந்த நிலையிலுள்ள இருக்கைகள் உள்ளிட்ட பல பொருட்களையும் பார்க்கலாம்.




மேலே கொடுக்கப்பட்டுள்ள செய்தியை வாசித்தீர்களல்லவா?

வரலாற்று ரீதியாக – உயர் சாதியென்று கருதப்பட்டவர்கள், தாழ்ந்த சாதியென கருதப்பட்டவர்களுக்கு கல்வி வாய்ப்புகளை மறுத்தனர். கல்வி மறுக்கப்பட்டவர்களுக்கு சமமான கல்வி வாய்ப்புகள் கிடைக்க அய்யங்காளி முயற்சித்தார். கல்வியைச் சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாக நினைத்ததே அய்யங்காளியின் மகத்தான செயலாகும்.

சாதியின் அடிப்படையில் ஒதுக்கி வைப்பதற்கு எதிராக மகாத்மா அய்யங்காளி நடத்திய போரட்டத்தைக்குறித்து புரிந்து கொண்டீர்களல்லவா?

பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு வாகனத்தில் செல்வதற்கும், பொது வழியில் நடப்பதற்கும், நல்ல ஆடை அணிவதற்கும், கல்வி கற்பதற்கும் உரிமை இல்லாத ஒரு காலம் இருந்தது. அவர்களுக்கு அடிப்படை உரிமைகள், பதவி, சமத்துவம், சுதந்திரம் போன்றவை மறுக்கப்பட்டன. சாதியின் அடிப்படையில் இத்தகைய பாகுபாடுகள் காட்டுவது மனித உரிமைகளை மீறும் செயலாகும். அதனை எதிர்கொள்ள கல்வி அவசியம் என்றும் ஒதுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் செயல்பட்ட பல மகான்களின் கருத்தாக இருந்தது. "கல்வியால் மேன்மை அடையுங்கள்" என்ற கருத்தை ஸ்ரீ நாராயண

ST-501-8-SOC. SCI.-(T)7-VOL-1

குருவும் பிற மறுமலர்ச்சி தலைவர்களும் நவீனக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து அதன் மூலம் ஒதுக்கப்படுவதை எதிர்த்தனர். குரியாகோஸ் ஏலியாஸ் சாவறா, ஐயா வைகுண்ட சுவாமிகள், சட்டம்பி சுவாமிகள், வைக்கம் அப்துல் காதர் மௌலவி, பொய்கையில் ஸ்ரீ குமார குருதேவன் (பொய்கையில் யோகன்னான்), பண்டிட் கெ. பி. கருப்பன், தாக்ஷாயணி வேலாயுதன் போன்றவர்களின் செயல்பாடுகள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.


ஸ்ரீ நாராயணகுரு


குரியாக்கோஸ் ஏலியாஸ் சாவறா


ஐயா வைகுண்டசுவாமிகள்


சட்டம்பி சுவாமிகள்


வைக்கம் அப்துல்காதர் மௌலவி


பொய்கையில் ஸ்ரீ குமாரகுருதேவன்


பண்டிட் கெ.பி. கருப்பன்


தாக்ஷாயணி வேலாயுதன்

*படங்கள் 4.4*

**ஜோதிராவு புலே** (1827-1890)

தலித் என்பது சாதி மற்றும் மதச் சுரண்டலுக்கு உள்ளான சமூகத்தைக் குறிப்பிடுவதாகும். சமூகமாற்றத்திற்கு ஆரம்பம் குறித்த ஜோதிராவு புலே என்பவரால் இந்தச் சொல் முதலில் பயன்படுத்தப்பட்டது. பெண்கள் மற்றும் தலித் மக்களுக்காக புலே பல கல்வி நிறுவனங்களை நிறுவினார்.


*படம் 4.5*

**சாவித்திரி பாய் புலே** (1831 - 1897)

இந்தியாவிலுள்ள புனேவில் முதன்முதலாக பெண் குழந்தைகளுக்காக நிறுவப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியையாக இருந்தார். விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களுக்காக இரவுப் பள்ளிக்கூடங்களை நிறுவினார். இவரது கல்விச் சேவைகளைக் கருத்தில் கொண்டு புனே பல்கலைக்கழகத்திற்கு சாவித்திரி பாய் புலே புனே பல்கலைக்கழகம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.


*படம் 4.6*



படம் 4.7

**பெரியார் இ.வெ. ராமசுவாமி நாயக்கர்** (1879-1973)

சுயமரியாதை இயக்கத்தின் நிறுவனரான இவர் இந்தியாவின் முக்கிய சாதி எதிர்ப்பு இயக்கத் தலைவர்களில் ஒருவர் ஆவார். ஒரு சமூக சீர்திருத்தவாதியான இவர் பிராமண ஆதிக்கத்தின் அடிப்படையிலுள்ள சமூகப் பாகுபாடுகளை எதிர்த்தார். பெண் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்து செயலாற்றிய தலைவரே பெரியார்.

தலித் இனத்தவர்களை போலவே சமூகத்தில் ஒதுக்கப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்ட மற்றொரு பிரிவினரே பழங்குடியினர்.

பழங்காலம் முதலே ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியில் கூட்டமாக வாழ்ந்து வரும் மக்களே பழங்குடியினர். அவர்கள் சுயமாக அறிவை உருவாக்கி அவற்றை பயன்படுத்தி வாழ்கின்றனர். பழங்குடி மக்கள் தங்கள் சொந்த வாழ்க்கை முறையில் கலை மற்றும் கலாச்சார பண்பாடுகளை பின்பற்றி வருகிறார்கள். பழங்குடி மக்களின் கலாச்சார பண்பாடுகள் கடந்த காலங்களைவிட தற்போது பொது சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அவர்கள் வசிக்கும் இடங்களில் இயற்கை வளங்களின் மீது அவர்களுக்கு இருந்த முழு அதிகாரமும் காலப்போக்கில் படிப்படியாக குறைந்தது. அதன் காரணமாக இந்த மக்கள் சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர்.



படம் 4.8

**வெரியர் எல்வின்** (1902-1964)

இவர் இந்திய மானுடவியலுக்கு முக்கியமான நன்கொடைகள் வழங்கியவர்களில் ஒருவராவார். பழங்குடியின மக்கள் சொந்த வாழ்வின் பாதுகாப்பிற்காகப் பாடுபட்டார். பழங்குடி மக்களுக்காக இந்தியாவின் கொள்கைகளை வடிவமைப்பதில் குறிப்பிடத்தக்க பங்காற்றினார்.

காலங்காலமாக சமூகத்தில் ஆதிக்கம் செலுத்தும் பிரிவினர்கள் உருவாக்கிய அறிவு, கலை மற்றும் கலாச்சாரம் மட்டுமே மதிப்புமிக்கது என்ற கருத்து நிலைபெற்றிருந்தது. ஆனால் பழங்குடியினர்கள் கலை, மொழி, இலக்கியம், மருத்துவம் மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் இயற்கையோடு ஒன்றிணைந்து பெற்ற அறிவையும் சிறப்பியல்புகளையும் கொண்டுள்ளனர். தனித்துவமான இசை மரபுகளைக் கொண்ட பல பழங்குடியினரும் உள்ளனர்.



படம் 4.9

**டாக்டர் எ. ஐயப்பன்** (1905 - 1988)

ஐயப்பன் திருச்சூர் மாட்டத்தில் உள்ள பாவரட்டியில் 1905 பிப்ரவரி 5 –இல் பிறந்தார். இந்திய கலாச்சாரங்களைப் பற்றி ஆய்வு செய்த முக்கியமான மானுடவியல் ஆய்வாளராவார். லண்டன் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸிலிருந்து மலினோவ்ஸ்கி மற்றும் ரய்மன்ட் ஃபிர்த்தின் என்பவர்களின் கீழ் ஆய்வுப் படிப்பை முடித்தார். கேரளத்திலுள்ள ஈழவர்கள் மற்றும் பழங்குடி சமூகத்தைப் பற்றிய ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

### நஞ்சியம்மா

பாலக்காடு மாவட்டத்திலுள்ள அட்டப்பாடி என்னும் இடத்தில் வாழும் இருளர் பிரிவைச் சேர்ந்த நஞ்சியம்மா 2020 – இல் நாட்டின் சிறந்த பாடகிக்கான தேசிய திரைப்பட விருதைப் பெற்றார். பழங்குடி மக்களிலிருந்து இந்த விருதை வாங்கும் முதல் நபரே நஞ்சியம்மா. "கலக்காத்தா சந்தனமேற வெகுவாக பூத்திரிக்கோ" என்ற பாடலை பாடியவர் நஞ்சியம்மா.



*படம் 4.10*
இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவிடமிருந்து தேசியத் திரைப்பட விருதை நஞ்சியம்மா பெறுகிறார்.

பலவிதமான இசைக்கருவிகளைத் தயாரித்து பயன்படுத்தும் திறமையும் அவர்களுக்குண்டு. பழங்குடி மக்களோடு தொடர்புடைய சில படங்களைக் கவனிக்கவும்.



*பெறை*



*உருமி*



*நாற்று நடுதல்*



*தவில்*

*படங்கள் 4.11*

அவர்களின் சொந்த நிலத்தின் மீது உரிமை, கல்வி வாய்ப்புகள், சத்துள்ள உணவு, சுகாதாரப் பாதுகாப்பு, ஆகியவற்றை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி அதை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் மத்திய மற்றும் மாநில அரசுகள் செயல்பட்டு வருகின்றன.

பழங்குடி மக்களின் கலை மற்றும் கலாச்சார வாழ்க்கை முறையைப் பற்றிய குறிப்பு தயாரித்து வகுப்பில் வெளியிடவும்.

பாலின வேறுபாடு காரணமாக ஒதுக்கப்பட்ட ஒரு சமூக பிரிவினரே பெண்கள் ஆவர்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள அனுபவக்குறிப்பை வாசிக்கவும்.



"அந்தக் காலத்தில் நாடகத்தில் நடிக்க பெண்கள் முன் வருவதில்லை. பெண்கள் நடிக்க வருவது தவறு என்ற கருத்து நிலவியிருந்தது. ஆனால் நான் நடிக்க முடிவு செய்தேன்...

வட மலபாரில் பல இடங்களுக்கும் நாடகம் நடத்த சென்றிருக்கிறோம் .. முக்கம் என்ற இடத்தில் நாடகம் நடிக்கும்போது என் மீது கல் எறிந்தனர். நாடகத்தின் உரையாடலைக் கூறி முடிப்பதற்குள் ஒரு கல் எனது முகத்தில் வந்து விழுந்தது. நான் அசையவில்லை. எனது வாயிலிருந்து ரத்தம் கொட்டியது. ஆனால் முழு உரையாடலையும் தவறாமலும், மறக்காமலும் கூறி நாடகத்தை நிறைவுசெய்தேன். நான் மஞ்சேரியில். மேலகம் என்னும் இடத்தில் நாடகம் நடத்திக் கொண்டிருந்தபோது மேடையில் வைத்து என்னைக் கொலை செய்யும் முயற்சி நடந்தது. ஒரு வேளை எந்த நடிகருக்கும் இப்படி ஓர் அனுபவம் ஏற்பட்டிருக்காது. நாடகத்தின் பாதியில் ஒரு தோட்டா என் தலையைத் தாண்டி சென்றது. நல்லவேளை நான் உரையாடலை கூறிய பின் தலையைத் திருப்பியதால் அது என் தலையில் படாமல் சென்றது. இவ்வாறு பல நிகழ்வுகளையும் சந்தித்திருக்கிறேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளால் நான் சோர்ந்து போகவில்லை. அப்படி ஒன்றும் ஆயிஷாவை தோற்கடிக்க முடியாது."



*படம் 4.12*

**-நிலம்பூர் ஆயிஷா**

'வாழ்க்கைக்கும் மேடைக்கும் இடையில்' (பக்கம் 39–42)

இது கேரளத்தின் பிரபல நாடக மற்றும் திரைப்பட நடிகையான நிலம்பூர் ஆயிஷாவின் அனுபவக்குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பகுதியாகும்.

சமூகத்தில் இருந்து அவர்கள் என்னென்ன சவால்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தது? காரணமென்ன?

பெண்கள் கலைத் துறைகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்ட காலம் நமது சமூகத்தில் காணப்பட்டது. கலைத்துறைகளில் மட்டுமல்ல, சமூகத்தின் பல பிரிவுகளிலும் பெண்கள் என்பதால் ஒதுக்கப்படவும், சமத்துவம் மறுக்கப்படவும் செய்கின்ற ஏராளமான அனுபவங்களை வரலாற்றிலிருந்து அறியமுடிகிறது. கலைத்துறை, கல்வித்துறை, தொழில் துறை, குடும்பம் என அனைத்து இடங்களிலும் அவர்கள் தாழ்ந்த நிலையில் உள்ளவர்கள் என்ற தவறான கருத்து சமூகத்தில் நிலவியிருந்தது.



*படம்4.13*



**பண்டித ரமாபாய்** (1858-1922)

19–ஆம் நூற்றாண்டில் பெண்களின் உரிமைகள் மற்றும் அதிகாரத்திற்காக உழைத்த இந்தியாவின் முக்கியமான சமூக சீர்திருத்தவாதி. விதவைகளின் கல்வி மற்றும் நலன் மேம்பாட்டிற்காக பாடுபட்டார். அவர் இந்தியாவிலுள்ள பெண்களின் நிலமையைக் குறித்து ஆய்வு செய்து பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.



*படம் 4.14*

**டாக்டர். புன்னன் லூக்கோஸ்**
(1886-1976)

இந்தியப் பல்கலைக்கழகங்கள் பெண்களுக்கு மருத்துவக் கல்வி அனுமதிக்காததால் லண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து எம்.பி.பி. எஸ். பட்டம் படித்தார். கேரளத்தில் மருத்துவத் துறையில் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற பெருமையை அடைந்தார். திருவிதாங்கூர் சட்ட மேலவையின் முதல் பெண் உறுப்பினராகவும் இருந்தார்.



*படம் 4.15*

**இ.கே . ஜானகி அம்மாள்**
(1897 - 1984)

கேரளத்தின் தலச்சேரியில் பிறந்த உலக அளவில் புகழ்பெற்ற தாவரவியல் விஞ்ஞானி. கோயம்பத்தூரில் உள்ள கரும்பு ஆராய்ச்சி மையத்தில் அதிக மகசூல் தரும் சங்கர இனக் கரும்பை உற்பத்தி செய்தார். இந்தியாவின் தாவரவியல் ஆய்வகத்தின் முதல் பொது இயக்குனராகப் பொறுப்பேற்றார். 1977–இல் நம் நாடு அவருக்குப் பத்மஸ்ரீ விருது வழங்கி கவுரவித்தது.

பெண்களைத் தவிர திருநங்கைகளும் பாலின பாகுபாட்டால் பாதிக்கப்படுகின்றனர்.

**திருநங்கையர்** (Transgender)

திருநங்கை என்றால் பிறக்கும்போதே அந்த நபர் பாலினத்துடன் பொருந்தாதவர் எனப் பொருள்படும். இதில் ஆண் திருநம்பி என்றும் பெண் திருநங்கை என்றும் அறியப்படுகின்றனர்.

Clause (K) of Section 2, TPPR Act, 2019)

**சிறுபான்மையினர்** (Minority)

இது மொத்த மக்கள் தொகை எண்ணிக்கையில் குறைவாக உள்ள பிரிவினரைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும்.

படத்தை உற்றுநோக்கவும்.



படம் 4.16

நம்மைச் சுற்றியுள்ள உலகம் அனைவருக்கும் ஒன்று போல் அணுகத்தக்க விதத்தில் உள்ளதா?

## மன உறுதியின் வெற்றி

திருவனந்தபுரம் : ஹூஸ்னயும் பெபினும் இருளடைந்த வாழ்க்கையை மன உறுதியுடன் எதிர்கொண்டு வகுப்பறைக்குள் வெளிச்சத்தைக் கொண்டுவந்துள்ளனர். திருவனந்தபுரத்தைச் சேர்ந்த சாரதா தேவிக்கு சக்கர நாற்காலி ஒரு தடையே இல்லை என்பதை நிரூபித்து ஷேக்ஸ்பியரையும், ஷெல்லியையும் அழகாக எடுத்துரைக்கிறார். உடல்ரீதியான சவால்களை சமாளித்து வாழ்க்கையில் வெற்றி பெற்ற இந்த மூன்று ஆசிரியர்களும் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறந்த முன்மாதிரியாக உள்ளனர். சக்கர நாற்காலியின் உதவியின்றி நடக்க முடியாத அரிய நோயால் பாதிக்கப்பட்ட சாரதா தேவி எப்போதும் படிப்பில் முன்னிலையில் இருந்தார். பெபின் மரியம் ஜோஸ் பதினேழாம் வயதில் பார்வையை இழந்தார். வாழ்க்கையில் சாதனைகளைச் செய்ய பார்வையின்மை ஒரு தடையல்ல என்பதை நிரூபித்தார் ஹெலன் ஹெல்லர் தான் பெபினின் ஹீரோ ஆவார். நெடுமங்காடு அருகிலுள்ள அழிக்கோட்டை சேர்ந்த ஹூஸ்னாவிற்கு 11 வயது வரை கண் பார்வை இருந்தது. படிப்பில் சிறந்து விளங்கிய மூவரும் குடும்பத்தினரின் உதவிடன் தடைகளைக் கடந்து அரசு கல்லூரிகளில் ஆசிரியப் பணியில் சேர்ந்தனர்.

இது உடல் ரீதியான சவால்களை சமாளித்து வாழ்க்கையில் வெற்றிபெற்ற மூன்று நபர்களைப் பற்றிய செய்தியாகும்.

மாற்றுத்திறனாளிகள் (Differently abled) மற்ற நபர்களோடு ஒப்பிடும்போது அவர்களின் அன்றாட வாழ்க்கையில் பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். பல்வேறு வகையான மாற்றுத்திறனாளிகள் உள்ளனர். ஒவ்வொரு மாற்றுத்திறனாளிகளும் வெவ்வேறு விதங்களில் ஒதுக்கப்படுகின்றனர்.

கட்டிடங்கள், பாதைகள், புத்தகங்கள் போன்றவை பொதுவாக உடல் குறைபாடு உள்ளவர்களுக்குச் சாதகமாகவும், செயல்பட கூடியதாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட இடங்களில் பல்வேறு உடல் குறைபாடு உள்ளவர்கள் எவ்விதமான சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது? வகுப்பறையில் கலந்துரையாடவும்.

**மாற்றுத்திறனாளிகளின் உரிமைப் பாதுகாப்புச் சட்டம் 2016**

மாற்றுத் திறனாளிகளை ஒதுக்கி வைக்காமல் அவர்களுக்கும் சமமான சமூக வாழ்க்கையை உறுதி செய்வதற்காக உருவாக்கப்பட்ட சட்டம்.

**பாராலிம்பிக்ஸ்**

மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான சர்வதேச விளையாட்டுப் போட்டியான பாராலிம்பிக்ஸ் 1948 – இல் தொடங்கப்பட்டது.

## பாகுபாட்டைத் தடுக்க அரசியலமைப்பு

**டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் (1891-1956)**

இந்திய அரசியலமைப்பின் சிற்பி. தளித் மக்களின் சமூக மற்றும் அரசியல் மேம்பாட்டிற்காக செயல்பட்டவர். இந்தியாவின் தாழ்த்தப்பட்ட பிரிவினரின் பிரச்சினைகளைத் தனது எழுத்துகளின் மூலம் வெளியிடவும் அவர்களுக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு அளிக்கவும் செயல்பட்டார்.

நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தை உறுதி செய்கிறது. (பிரிவு 14) மதம், இனம், சாதி, பாலினம், பிறந்த இடம் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இருக்கக் கூடாது என அரசியலமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது (பிரிவு 15).

நமது அரசியலமைப்புச் சட்டம் பாகுபாடுகளை ஏன் முழுமையாக தடை செய்தது?

- பாகுபாடுகள் சமூக முன்னேற்றத்தைத் தடை செய்கின்றன.

- பொருளாதார சமத்துவமின்மையை ஏற்படுத்துகின்றன.
- பாதுகாப்பான வாழ்க்கைச் சூழல்கள் மறுக்கப்படுகின்றன.
- 
- 
- 

சாதி பாகுபாடுகளுக்கு எதிராக இந்தியாவிலுள்ள சட்டங்களும், பிரிவுகளும் எவை என்பதைக் கண்டறிந்து அட்டவணையை விரிவாக்கவும்.

- அரசியலமைப்பு பிரிவு 14,15 என்பவை
- 
- 
- 

முன்னேற்றத்தைத் தடுக்கும் சமூகக் கட்டமைப்புகள் சுற்றுச்சூழல், அரசியல் மற்றும் பொருளாதார காரணிகள் போன்றவையே சில பிரிவினர் ஒதுக்கப்படுவதற்குக் காரணமாகின்றன.

சமூகத்தின் வளர்ச்சிக்கும் சமத்துவ ஜனநாயக சமுதாயத்தின் உருவாக்கத்திற்கும் அனைவரையும் உள்ளடக்கிய ஒரு சமூகநிலை தேவை என்பதை நீங்கள் புரிந்துகொண்டீர்கள் அல்லவா!

அனைவருக்கும் சம உரிமை அளிக்கும் சமூகத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கூறுகளைக் கண்டறிந்து அட்டவணையை விரிவுபடுத்தவும்.

- சமத்துவத்திற்குத் தேவையான கூடுதல் கொள்கைகள்
- பாகுபாட்டைத் தடுப்பதற்கான கூடுதல் சட்டங்கள்
- அனைவருக்கும் சிறந்த கல்வி அளித்தல்
- அனைத்து தொழில் துறைகளிலும் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள்
- 
- 

ST-501-9-SOC. SCI.-(T)7-VOL-1

ஜனநாயக ஒழுங்குமுறையில் அனைவரின் பங்களிப்பையும் உறுதி செய்வதன் மூலம் மட்டுமே ஒதுக்கப்படுவதைத் தடுக்கவும், சமமான நீதியை உறுதிபடுத்தவும் முடியும்.

## தொடர் செயல்பாடுகள்

- ஜோதி ராவு புலே, சாவித்திரி பாய் புலே, பெரியார், அம்பேத்கர் போன்றோரைக் குறித்துள்ள கூடுதல் விவரங்களைச் சேகரித்து சுருக்கமான வாழ்க்கை வரலாற்று குறிப்பு தயாரிக்கவும்.. ஒதுக்கப்பட்ட நிலைமையைக் கல்வியின் மூலம் மாற்றிய நபர்களைக் குறித்துள்ள விவரங்களை ஆசிரியரின் உதவியோடு கண்டறியவும்.
- விவசாயம், கலை – கலாச்சாரம் – அறிவியல் துறையில் பழங்குடியின மக்களின் தனித்துவமான பங்களிப்பைக் கண்டறிந்து டிஜிட்டல் ஆல்பம் தயாரிக்கவும்..
- பழங்குடியினர் வசிக்கும் இடத்திற்குச் சென்று அவர்களின் சமூக வாழ்க்கையைப் புரிந்து கொள்ளுங்கள்,. கீழே கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளையும் பயன்படுத்துவீர்களல்லவா.
    - ❖ முன்னோர்களின் வாழ்க்கை முறை
    - ❖ கலை, விவசாயம், உணவு
    - ❖ சமகால வாழ்க்கை
    - ❖
- பள்ளி நூலகம் மற்றும் உள்ளூர் நூலகங்களிலிருந்து பாகுபாடுகளைக் கடந்துவந்த பெண்களின் அனுபவங்களை விவரிக்கும் வாழ்க்கை வரலாறு, சுயசரிதை, அனுபவக்குறிப்பு போன்றவற்றை சேகரித்து வகுப்பறையில் ஒரு புத்தகக் கண்காட்சி நடத்தவும். ஒவ்வொரு புத்தகத்தைக் குறித்தும் சிறு குறிப்பு தயார் செய்யவும்
- மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றத்துக்காகச் செயல்படுகின்ற நபர்களைப் பள்ளியில் நேரடியாகவோ, டிஜிட்டல் ஊடங்கள் வழியாகவோ அறிமுகம் செய்து கலந்துரையாடல் நடத்தவும். பல்வேறு துறைகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் அதற்கான தீர்வுகளையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.
- மாற்றுத்திறனாளிகள் எல்லோரையும் போன்று எல்லா இடங்களுக்கும் சென்றடையும் வகையில் தற்போதைய சூழ்நிலையில் என்னென்ன மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். மாற்றுத்திறனாளி மாணவர்களின் வாழ்க்கைச் சூழல் மற்றும் கல்வி வசதிகளை மேம்படுத்த உங்கள் பள்ளி சூழலின் அடிப்படையில் ஒரு சிறு செயல்திட்டத்தை தயாரித்து ஆசிரியர்களின் உதவியுடன் உள்ளாட்சி அமைப்பில் சமர்ப்பிக்கவும்
    - ❖ சாய்வு நடைமேடை (Ramp)
    - ❖ கைப்பிடிகள் (Hand Rail)

❖ பிரெய்லி மற்றும் ஆடியோ நூலகம்

❖ மாற்றுத் திறனாளிகளுக்குப் பொருத்தமான கழிவறைகள்

- பாகுபாடுகளை எவ்வாறு எதிர்ப்பது? கீழே கூறப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி வகுப்பறையில் கலந்துரையாடல் நடத்தவும்.

❖ ஒதுக்கப்பட்டவர்கள் சுயமாக முன்வர வேண்டும்

❖ சமூகத்தின் கூட்டு முயற்சியால் ஒதுக்கப்பட்டவர்களின் சூழ்நிலைகளைத் திறம்பட தீர்க்க முடியும்

❖ அரசாங்க அமைப்புகளைப் பயன்படுத்தி சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும்

கூடுதல் குறிப்புகளை சேர்க்கவும்.



# 5

# நமது பூமி



படம் 5.1

## நான் பூமி

கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு மிக அதிக வெப்பமுடைய கோளமாக நான் இருந்தேன்,. பின்னர் இடைவிடாத பெரும் மழையால் நான் குளிர்ச்சி அடைந்தேன். அதன்பின்னர் பல லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு எனது மேற்பரப்பில் உயிரினங்கள் தோன்றின. சூரிய குடும்பத்தில் உள்ள கிரகங்களில் நான் மட்டுமே உயிரினங்கள் வாழ ஏற்றதாக உள்ளேன், என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? நீங்கள் உயிர்வாழத் தேவையான அனைத்தும் என்னிடத்தில் உள்ளன. சுவாசிக்கத் தேவையான காற்று, குடிப்பதற்கும் பிற தேவைகளுக்குமான நீர், தாவரங்கள் வளர்வதற்குத் தேவையான மண் என்று எல்லாமே.....

பூமி தன்வரலாறு கூறுவதை வாசித்தீர்கள் அல்லவா?

நதிகள், மலைகள் பள்ளத்தாக்குகள் மற்றும்சமவெளிகள் எனப் பூமியின் மேற்பரப்பு எவ்வளவு அழகாகக் காணப்படுகிறது! ஆனால் பூமியின் உட்புறம் எவ்வாறு உள்ளது? பூமியின் உட்பகுதியிலுள்ள இரகசியங்களை அறிந்துகொள்வோமா?

## உள் அடுக்குகளுக்குள்ளே...

புவியின் மேற்பரப்பிலுள்ள வெப்பநிலையைப் பற்றி நமக்குத் தெரியுமல்லவா? ஆனால் உள் அடுக்குகளில் வெப்பம் மிக அதிகமாக இருக்கும். உள் அடுக்குகளின் மையப்பகுகளில் வெப்பம் ஏறக்குறைய 5500 டிகிரி செல்சியஸ் ஆகும். தண்ணீர் 100 டிகிரி செல்சியஸில் கொதிக்கும் என்பது உங்களுக்குத் தெரியும் அல்லவா? 5500 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பற்றி உங்களால் கற்பனை செய்யமுடியுமா? நீங்கள் சுரங்கம் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள் அல்லவா! அவற்றில் மிகவும் ஆழமான சுரங்கத்தின் தூரம் எவ்வளவு கிலோமீட்டர் என்று தெரியுமா? சுமார் 12 கிலோமீட்டர்! அவ்வளவு தூரத்தை மனிதன் சென்றடைவதற்குக் கூடபல இயந்திரங்களும் பாதுகாப்புக் கருவிகளின் உதவியும் தேவைப்படுகிறது., பூமியின் மையப்பகுதி ஏறக்குறைய 6371 கிலோமீட்டர் தூரம் உடையது. அப்படியென்றால் புவியின் உள்ளடுக்குகளைப் பற்றிய தகவல்களை மனிதன் நேரடியாகச் சென்று அறிந்துகொள்ளமுடியுமா? பின்னர் எவ்வாறு புவியின் உள்ளடுக்குகளைப் பற்றிய தகவல்கள் நமக்குக் கிடைத்தன? சில அறிவியல் ஆராய்ச்சிகள் மற்றும் முடிவுகளின் அடிப்படையில்தான் பூமியின் உள்ளடுக்குகள் பற்றிய தகவல்கள் நமக்கு கிடைத்தன. அவை எவை என்று பார்ப்போம்,

- எரிமலை வெடித்துச் சிதறுவதன் மூலம் பூமியின் மேற்பரப்பில் வந்தடையும் பொருட்களை ஆய்வு செய்வதிலிருந்து
- சுரங்கங்களிலிருந்து சேகரிக்கப்படும் தகவல்களிலிருந்து
- நிலநடுக்கம் ஏற்படும்போது உருவாகும் அலைகளின் அதிர்வுகளைப் பகுப்பாய்வு செய்வதிலிருந்து


## புவியின் கட்டமைப்பு

படத்தை உற்றுநோக்குங்கள்.

புவியின் உள்ளடுக்குகளைப் பற்றி என்னென்ன தவல்களை உங்களால் புரிந்துகொள்ள முடிந்தது?

நீங்கள் கண்டுபிடித்தவற்றைக் கீழே எழுதவும்


- புவியின் உட்பகுதி பலவித அடுக்குகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
- புவி அடுக்குகளின் மேல் பகுதி புவி ஓடு (Crust) ஆகும்.
- 




*படம் 5.2*



புவியின் பல்வேறு அடுக்குகளைப் பற்றி புரிந்து கொண்டீர்கள் அல்லவா? கொடுக்கப்பட்டுள்ள படம் ( 5.3) உற்றுநோக்கியும் விளக்கத்தை வாசித்தும் புவியின் உள் அமைப்பைப் பற்றிய கூடுதல் தகவல்களைச் சேகரித்து குறிப்பு தயார் செய்யவும்.



படம் 5.3

**புவி ஓடு (Crust)**

புவி ஓடு என்பது மிகவும் வெளியே உள்ளதும் அடர்த்தி குறைந்ததுமான அடுக்காகும். இந்த அடுக்கு கடின பாறைகளால் உருவானது. பெருங்கண்டங்கள் கடற்கரை பகுதிகள் என இரு பகுதிகளைக் கொண்டது. பெருங்கண்டங்களின் புவி ஒடு அடர்த்தி கூடிய பகுதியாகும். இதன் சராசரி அடர்த்தி 30 கி.மீ. ஆகும். மலைப் பகுதிகளில் ஏறக்குறைய 70 கி.மீ. அடர்த்தி காணப்படும். ஆனால் கடற்கரை புவியோட்டில் ஏறக்குறைய 5 கி.மீ அடர்த்தியே காணப்படுகிறது.

**புவி உறை (Mantle)**

புவி ஓட்டுக்குக் கீழே உள்ள பகுதியே புவி உறை. பிற பகுதிகளுடன் ஒப்பிடும் போது இது அடர்த்தி கூடிய பகுதியாகும். இது ஏறக்குறைய 2900 கிலோமீட்டர் வரை பரந்து காணப்படுகிறது. புவி ஓடும் புவி உறையின் மேற்பாகமும் சேர்ந்த பகுதி கரை மண்டலம் (Lithosphere) என அழைக்கப்படுகிறது. அதன் கீழே உள்ள பாறைப் பொருட்கள் உருகி (Magma) அரைக் குழம்பு நிலையில் காணப்படும் பகுதியை மென் பாறைக் கோளம் (Asthanosphere) என்று அழைப்பர். அதன் கீழ்ப்பகுதி திடநிலையில் காணப்படுகிறது.


**புவிக்கரு (Core)**

புவி உறையின் கீழே உள்ள பகுதி புவிக்கரு ஆகும். இது புறக்கரு அகக்கரு என இருபகுதிகளைக் கொண்டுள்ளது. புறக்கரு திரவ நிலையிலும் அகக்கரு திட நிலையிலும் உள்ளது. புவிக்கரு பெரும்பாலும் நிக்கல் (Ni) இரும்பு (Fe) எனும் உலோகங்களால் உருவானதாகும். எனவே புவிக்கரு நிபே (NIFE) எனவும் அழைக்கப்படுகிறது. உட்புற புவிக்கருவின் வெப்பநிலை ஏறக்குறைய 5500 டிகிரி செல்சியஸ் ஆகும்.



**பூமியின் உள்பகுதியிலுள்ள ஒவ்வொரு அடுக்குகளின் சிறப்புத் தன்மைகளைக் கொண்டுள்ள கருத்துப்படத்தை (5.4) நிரப்பவும்**

**பூமியின் கட்டமைப்பு – சிறப்புத் தன்மைகள்**




*படம் 5.4*

பூமியின் உள்பகுதியிலுள்ள ஒவ்வொரு அடுக்குகளின் சிறப்புத் தன்மைகள் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சரியான கருத்துக்கு ‘  ’ அடையாளமும் தவறான கருத்துக்கு ‘  ’ எனும் அடையாளமும் இடவும்.

| | |
|---|---|
| • புவி ஓடு என்பது மேற்பரப்பில் உள்ள பாறைகளால் ஆன கடினமான பகுதியாகும். | |
| • புவி ஓடும், புவி உறையின் மேலுள்ள பகுதியும் சேர்ந்ததே கரை மண்டலம். | |
| • பாறைப் பொருட்கள் (மேக்மா) உருகி அரைக்குழம்பு நிலையில் காணப்படும் பகுதியே மென்பாறைக் கோளம் (Asthanosphere). | |
| • புவி புறக் கரு திரவ நிலையில் காணப்படும். | |
| • பெருங்கண்டங்களும், கடல்கரை பகுதியும் புவி ஓட்டின் இரு பகுதிகளாகும். | |
| • புவி உட்கரு நிபே (NIFE) எனவும் அழைக்கப்படுகிறது. | |

ஒரு விளக்கப்பட அட்டையில் புவியின் அமைப்பை வரைந்து அதன் ஒவ்வொரு அடுக்குகளுக்கும் தனித்தனி நிறம் கொடுத்து அதன் சிறப்புத் தன்மைகளை எழுதி வகுப்பில் காட்சிப்படுத்தவும்

'புவியின் உள் அடுக்குகளின் சிறப்புத் தன்மைகள்' என்ற தலைப்பில் அதிக தகவல்களை இணைத்து நோட்டுப் புத்தகத்தில் ஒரு குறிப்பு எழுதவும்.

பூமியின் உள் அமைப்பு பற்றிய அடிப்படையான உண்மைகளைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? இப்போது பூமியைச் சூழ்ந்து நிற்கும் வளி மண்டலத்தைப் பற்றிய சில உண்மைகளைத் தெரிந்துகொள்ள நாம் முயற்சி செய்வோம்.

## பூமியின் வளிமண்டலம்

உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு உதவும் வகையில் பூமியும் அதன் வளி மண்டலமும் எவ்வாறு மாறின?

புவி தோன்றிய காலத்தில் மிக அதிக வெப்பமாக இருந்தது. கோடிக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின் மெதுவாகக் குளிர்ச்சி அடைந்தது. இதனால் பூமியின் உள்பகுதியில் காணப்பட்ட வாயுக்கள் வெளியேற ஆரம்பித்தன.

படிப்படியாகப் பூமியைச் சுற்றிலும் ஏராளம் வாயுக்கள் நிறைந்த வளிமண்டல மேலடுக்கு உருவானது. பூமியைப் பாதுகாக்கும் வாயுக்களின் ஒரு போர்வையாகும் வளிமண்டலம். தாவரங்கள் தோன்றிய போது அவற்றில் ஒளிச்சேர்க்கையின் விளைவாக வளிமண்டலம் ஆக்சிஜன் நிறைந்ததாக மாறியது.

வளிமண்டலத்தில் நைட்ரஜன், ஆக்சிஜன், கார்பன்–டை–ஆக்சைடு போன்ற வாயுக்கள் உள்ளன. இவை தவிர வேறுசில வாயுக்களும் தூசிப்படலங்களும் நீராவியும் காணப்படுகின்றன. வளிமண்டலத்தில் அடங்கியுள்ள பலவகை வாயுக்கள் எவை எனவும், அவை எந்த அளவில் காணப்படுகின்றன என்பதையும் நாம் பார்ப்போம்.


## வளிமண்டலக் கலவை (Composition of the Atmosphere)

பூமியின் மேற்பரப்பில் இருந்து ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் உயரம் வரை வளிமண்டலம் பரவி உள்ளது. ஆனால் மொத்த வளிமண்டல வாயுவின் 97% சதவீதமும் காணப்படுவது பூமியின் மேற்பரப்பிலிருந்து ஏறக்குறைய 29 கிலோமீட்டர் உயரம் வரை என்று கணக்கிடப்படுகிறது. உயரம் கூடும் தோறும் வாயுக்களின் அளவு குறைந்து கொண்டே வருகிறது.

மனிதன் மற்றும் உயிரினங்களுக்குத் தேவையான ஆக்சிஜன், தாவரங்களுக்குத் தேவையான கார்பன்–டை–ஆக்சைடு போன்றவை வளிமண்டலத்தில் இருந்து கிடைக்கின்றன.. இந்த இரண்டு வாயுக்களும் பூமியில் உயிரினங்கள் உயிர்வாழ முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஆக்சிஜன்,கார்பன்–டை–ஆக்சைடு போன்ற வாயுக்களைத் தவிர வேறு என்னென்ன வாயுக்கள் வளிமண்டலத்தில் உள்ளன? என்பதை (படம் 5.5) ஐ உற்றுநோக்கி கண்டுபிடிக்கவும்.

வளிமண்டல வாயுக்கள்




*படம் 5.5*

படம் 5.5 ஐ உற்றுநோக்கி கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை கண்டுபிடிக்கவும்..

- வளிமண்டல வாயுக்களில் மிக அதிக அளவில் காணப்படும் வாயு எது?
- ஆக்சிஜன், நைட்ரஜன் ஆகியவை மொத்த வளிமண்டல வாயுக்களில் எத்தனை சதவீதம் உள்ளன?

பூமியின் மேற்பரப்பில் உள்ள நீர் சூரிய வெப்பம் மூலம் நீராவியாகி வளிமண்டலத்திற்குச் செல்லும் செயலே ஆவியாதல் (Evaporation) எனப்படும். பூமியின் மேற்பரப்பில் இருந்து ஏறக்குறைய 90 கி. மீ தொலைவில் மட்டுமே நீராவி உள்ளது.

வாயுக்கள், நீர் மூலக்கூறுகள் ஆகியவற்றைத் தவிர தூசுப் படலங்களும், வளிமண்டலத்தின் ஒரு பகுதியாகும். தூசுப் படலங்கள் பொதுவாகப் பூமியின் மேற்பரப்பிற்கு அருகிலுள்ள வளிமண்டலங்களில் காணப்படுகின்றன.வளிமண்டலத்திலுள்ள நுண்ணிய தூசுப் படலங்களைச் சுற்றி இருக்கும் வளிமண்டல நீராவியானது சுருங்குதல் எனும் செயல்பாட்டிற்கு உட்பட்டு மேகங்களாக உருவாகின்றன. எனவே வளிமண்டலத்திலுள்ள நுண்ணிய தூசு படலங்களை நீர் அருந்தும் துணுக்குகள் (Hygroscopic nuclei) என்று அழைக்கிறோம்.

தூசிப்படலங்கள் எந்தெந்த வழிகளில் வளிமண்டலத்தைச் சென்றடைகின்றன எனப் பார்ப்போம்

- காற்று வீசும் போது பூமியிலிருந்து மேல் நோக்கிச் செல்கிறது
- எரிமலை வெடிப்புகளிலிருந்து வெளிவருகின்றது.
- விண்கற்கள் எரிந்து விழும்போது சாம்பல் உருவாகிறது.
- 

பூமியில் உயிரினங்கள் உயிர்வாழ்வதற்கு வளிமண்டலம் எவ்வாறு உதவிபுரிகிறது என்பதைக் காணலாம்.

- காலநிலை மாற்றம் ஏற்படுவதற்குக் காரணமாகிறது.
- தீங்கு விளைவிக்கும் சூரிய கதிர்களிலிருந்து பாதுகாக்கிறது.
- 

புவியில் உயிரினங்கள் வாழ்வதற்குக் கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு காரணிகளும் எவ்வாறு உதவிபுரிகின்றன என்பதை எழுதவும்.

| | | |
|---|---|---|
| வளிமண்டல வாயுக்கள் | → | |
| வளிமண்டலத்தில் உள்ள ஈரப்பதம் | → | |
| வளிமண்டத்தில் உள்ள தூசுப் படலங்கள் | → | |

உயிரினங்களின் வாழ்விற்கு வளிமண்டலத்தின் பங்களிப்பு எவ்வளவு முக்கியம் என்பதைப் புரிந்து கொண்டீர்கள் அல்லவா? அவ்வாறானால் வளிமண்டலம் மாசடைவதனால் ஏற்படும் சூழ்நிலையைப் பற்றி சிந்தித்துப்பார்க்கவும்.

வளிமண்டலம் எவ்வாறெல்லாம் மாசடைகிறது?

வளிமண்டலம் மாசடைதல் எந்தப் பெயரில் அழைக்கப்படுகிறது?

வளிமண்டல வாயுக்களின் பாதுகாப்புக்குத் தீங்கு ஏற்படும் வகையில் புகை, நச்சுவாயுக்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள் போன்றவை காற்றில் கலப்பதை வளிமண்டல மாசடைதல் என்கிறோம்.

படங்கள் 5.6 ஐ உற்றுநோக்கவும்.










*படங்கள் 5.6*

- வளிமண்டலம் மாசடைதலுக்குக் காரணமாகும் செயல்பாடுகள் யாவை? வரிசைப்படுத்துக.

-
-
-

தொழில் நகரங்களில் வளிமண்டல மாசு அதிகரிப்பதற்கான காரணம் என்ன?

### அமில மழை



நிலக்கரி, பெட்ரோலிய எரிபொருட்கள், டீசல் போன்றவை எரிக்கப்படும்போது கார்பன்–டை–ஆக்சைடு, கார்பன்மோனாக்சைடு, மற்றும் சல்பர் டை ஆக்சைடு போன்ற எண்ணற்ற வாயுக்கள் வளிமண்டலத்தில் சென்றடைகின்றன. அவை மழை நீருடன் கலந்து அமிலத்தன்மையுடன் பூமியை வந்தடைகின்றன. மழை நீரின் pH மதிப்பு 5 ஐவிட குறைவாக இருந்தால் அது அமில மழையாகக் கணக்கிடப்படுகிறது. சுத்தமான நீரின் pH மதிப்பு 7 ஆகும்.

## புகைப் பனிமூட்டம் (Smog)



படம் 5.7

புகையும் (Smoke) மூடுபனியும் (fog) சேர்ந்து தான் புகைப் பனிமூட்டம் (Smog) உருவாகிறது. தொழிற்சாலைகள், கட்டுமான செயல்பாடுகள், வாகனங்கள், வேளாண் பொருட்களின் கழிவுகளை எரித்தல் போன்ற செயல்பாடுகள் மூலம் உருவாகும் புகையும் தூசும் வளிமண்டலத்தில் சென்று சேர்கின்றன. இவை பனியுடன் கலந்து புகைப் பனிமூட்டமாக மாறுகின்றன. பக்கவாதம், இருதயநோய் ,ஆஸ்துமா, போன்ற நோய்கள் அதிகரிக்க வளிமண்டல மாசடைதல் காரணமாக அமைகிறது எனப் பல ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

வளிமண்டல மாசடைதல் எவ்வாறு ஏற்படுகிறது எனவும் அவற்றால் ஏற்படும் விளைவுகள் எவை எனவும் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா?

### தீர்வுகள் பலவிதம்...

வளிமண்டல மாசடைதலைத் தவிர்ப்பதற்கு நம்மால் என்னென்ன செய்யமுடியும்? கீழே தரப்பட்டுள்ள படங்கள் (5.8) ஐ உற்றுநோக்கவும் கண்டறிந்தவற்றை குறிப்புகளாக எழுதி வகுப்பில் வெளியிடவும்.





படம் 5.8

வளிமண்டலத்தைப் பாதுகாப்பது பற்றி நாம், இதுவரை கலந்துரையாடல் நடத்தினோம்.

அடுத்ததாக வளிமண்டலத்தின் அமைப்பு எவ்வாறு உள்ளது என்பதைப் பார்க்கலாம்

## வளிமண்டலத்தின் அமைப்பு

வெப்ப வேறுபாட்டின் அடிப்படையில் வளிமண்டலம் ஐந்து வெவ்வேறு அடுக்குகளாக பிரிக்கப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள படம் (5.9) ஐ உற்றுநோக்கி வளிமண்டல அடுக்குகளை அட்டவணைப்படுத்தவும்.




*படம் 5.9*

## வளிமண்டல அடுக்குகள்

- ட்ரோபோஸ்பியர்
- 
- 
- 
- 

வளிமண்டல அடுக்குகள் எவை எனக் கண்டறிந்து அவற்றை வரிசைபடுத்தினீர்கள் அல்லவா? அடுத்ததாக அவை ஒவ்வொன்றின் சிறப்பியல்புகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

### ட்ரோபோஸ்பியர் (Troposphere)

இது வளிமண்டலத்தின் மிகவும் கீழ்ப்பகுதியிலுள்ள அடுக்காகும். இவ்வடுக்கு புவியின் மேற்பரப்பில் இருந்து ஏறக்குறைய 13 கிலோமீட்டர் உயரம் வரை காணப்படுகிறது. துருவப் பகுதியில் ஏறக்குறைய 8 கிலோமீட்டர் உயரத்தில் காணப்படுகிறது. பூமத்திய ரேகையில் 18 கிலோமீட்டர் உயரமும் உடையது. பூமத்திய ரேகைப் பகுதியில் வெப்பம் அதிகமாக இருப்பதால் இவ்வாறு காணப்படுகிறது.

தூசிப் படலங்களும் நீராவியும் மிக அதிக அளவில் இவ்வடுக்கில் காணப்படுகிறது. தவிர மேகங்கள் உருவாதல், மழை, பனி, காற்று போன்ற வளிமண்டல நிகழ்வுகள் நிகழ்வதும் இவ்வடுக்கில் ஆகும்.

ட்ரோபோஸ்பியர் ஒரு முக்கிய சிறப்பம்சம் புவி மேற்பரப்பிலிருந்து ஒவ்வொரு 165 மீட்டர் உயரத்திலும் ஒரு டிகிரி செல்சியஸ் என்ற விகிதத்தில் வளிமண்டல வெப்பநிலை குறைகிறது. இதனை சீரான வெப்ப இழப்பு விகிதம் (Normal Lapse Rate) என அழைக்கிறோம்.

வளிமண்டலத்தின் மிக முக்கிய அடுக்கை ட்ரோபோஸ்பியர் என்று சிறப்பித்துக் கூறக் காரணம் என்ன?

ஊட்டி, மூணாறு, கொடைக்கானல் போன்ற உயரமான பகுதிகளில் குளிர் நிலவுவதற்கான காரணம் என்ன?


### ஸ்ட்ராடோஸ்பியர் (Stratosphere)

இது ட்ரோபோஸ்பியருக்கு சற்று மேலே உள்ள வளி மண்டல அடுக்காகும். பூமியின் மேற்பரப்பிலிருந்து ஏறக்குறைய 50 கிலோமீட்டர் உயரம் வரை இப்பகுதி அமைந்திருக்கும் ஸ்ட்ராடோஸ்பியரில் குறிப்பிட்ட உயரத்திற்கு மேல் வெப்பம் அதிகரிப்பதை காணலாம். ஸ்ட்ராடோஸ்பியரில் தான் ஓசோன் படலம் அமைந்துள்ளது. இது புவி மேற்பரப்பிலிருந்து ஏறக்குறைய 25 கிலோமீட்டர் உயரத்தில் உள்ளது.

## ஓசோன் – புவியின் பாதுகாப்புக் கவசம்

சூரியனிலிருந்து வரும் தீங்கு விளைவிக்கும் புற ஊதாக்கதிர்களைத் தடுத்து பூமியைப் பாதுகாப்பது ஓசோன் படலம் ஆகும். புற ஊதாக்கதிர்கள் அதிக அளவில் பூமியின் மேற்பரப்பில் விழுந்தால் உயினங்களுக்குத் தீங்கு ஏற்படுத்துவதுடன் சுற்றுச்சூழலுக்கு ஆபத்தான விளைவுகளையும் ஏற்படுத்தும்.

.புற ஊதாக் கதிர்கள் பூமியில் என்னென்ன தீமைகளை விளைவிக்கின்றன?




### ஓசோன் தினம்

ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 16 ஆம் நாள் உலக ஓசோன் தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஓசோன் பாதிப்புக்குக் காரணமான உற்பத்தி பொருட்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துதல் என்பதே ஓசோன் தினம் கடைபிடிப்பதன் முக்கிய நோக்கமாகும்.

ஒசோன் தினம் தொடர்பாக வகுப்பிலும் பள்ளியிலும் என்னென்ன செயல்பாடுகள் செய்யலாம்? கலந்துரையாடவும்.

### மீசோஸ்பியர் (Mesosphere)

ஸ்ட்ராடோஸ்பியருக்கு மேலே ஏறக்குறைய 50 கி.மீ முதல் 80 கி. மீ வரைப் பரந்து காணப்படும் அடுக்கு இதுவாகும். இவ்வடுக்கிலும் உயரம் கூடும்தோறும் வெப்பம் குறைந்து வரும் நிகழ்வு நடக்கிறது. புவியின் மேற்பரப்பில் இருந்து ஏறக்குறைய 80 கிலோமீட்டர் உயரத்தில் வெப்பநிலை மைனஸ் 100 (-100) டிகிரி செல்சியஸ் வரை குறைந்துவிடுகிறது. வளிமண்டலத்தில் மிகவும் குறைந்த வெப்பநிலை இவ்வடுக்கில் உணரப்படுகிறது. புவியின் மேற்பரப்பை நோக்கி வரும் எரி நட்சத்திர கற்கள் பெரும்பாலும் இந்த அடுக்கில் வைத்து தான் எரிந்து சாம்பலாகின்றன.

## தெர்மோஸ்பியர் (Thermosphere)

மீசோஸ்பியருக்கு மேல் ஏறக்குறைய 80 முதல் 400 கிலோமீட்டர் உயரத்தில் காணப்படும் வளிமண்டல அடுக்கு தெர்மோஸ்பியர் ஆகும். உயரம் கூடும்தோறும் வெப்பநிலை கூடுகிறது. தெர்மோஸ்பியரின் அடிப்பகுதி அயனோஸ்பியர் என்று அழைக்கப்படுகிறது.

### அயனோஸ்பியர் (Ionosphere)

வாயு மண்டலத்தில் சுமார் 80 முதல் 400 கி. மீட்டர் வரையுள்ள உயரத்தில் காணப்படும் புற ஊதக் கதிர்களையும் எக்ஸ்ரே கதிர்களையும் சக்தி வாய்ந்த சூரிய ஒளிக்கதிர்கள் வாயுவின் மூலக்கூறுகளை அயனிகளாக மாற்றுகின்றன. இச்செயல்பாடு அயனி மயமாக்கல் என்றும், இச்செயல்பாடு நடைபெறும் மண்டலம் அயனோஸ்பியர் என்றும் அழைக்கப்படுகிறது. அயனிகளுக்கு மின்சக்தியைக் கடத்திவிடும் ஆற்றல் உண்டு. வானொலி அலைகள் மின்காந்த அலைகளாகும். எனவே இந்தப் பகுதி வானொலி அலைகளை நீண்ட தூரத்திற்கு ஒலிபரப்ப உதவுகிறது.

## எக்ஸோஸ்பியர் (Exosphere)

இது வளிமண்டலத்தில் மிகவும் உயரத்தில் காணப்படும் மேலடுக்கு ஆகும். 400 கிலோமீட்டருக்கு மேல் காணப்படும் இவ்வடுக்கில் வாயுவின் மூலக்கூறுகள் படிப்படியாக குறைந்து விண்வெளியின் ஒரு பகுதியாக மாறுகிறது.

**புவியின் வளிமண்டல சிறப்பம்சங்களை உட்படுத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரியைப் போன்று ஓர் அடையாள அட்டை தயார் செய்யவும்**

வளிமண்டல அடுக்கின் பெயர்

........................................................................

- புவியின் மேற்பரப்பிலிருந்துள்ள உயரம்
- வெப்ப நிலையில் ஏற்படும் மாற்றம்
- பிற சிறப்பியல்புகள்

வளிமண்டல அடுக்குகளும் அவற்றின் சிறப்பியல்புகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைப் பொருத்தவும்.

| | |
|---|---|
| எக்ஸோஸ்பியர் | உயரம் கூடும்தோறும் வெப்பம் கூடுகிறது |
| தெர்மோஸ்பியர் | வெப்பநிலை மிகவும் குறைந்த அடுக்கு |
| மீசோஸ்பியர் | விண்கற்கள் எரிந்து சாம்பலாகின்றன. |
| ஸ்ட்ராடோஸ்பியர் | வாயுவின் மூலக்கூறுகள் படிப்படியாகக் குறைந்து வெற்றிடம் ஆகிறது. |
| ட்ரோபோஸ்பியர் | உயரத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட விகிதத்தில் வெப்பம் குறையும் அடுக்கு |
| | ஓசோன் படலம் காணப்படும் மண்டலம் |
| | 80 முதல் 400 கிலோமீட்டர்வரை காணப்படுகிறது |

புவியின் உள்ளறை, வளிமண்டலம், வளிமண்டல அடுக்குகள் ஆகியவற்றின் சிறப்பியல்புகளை நாம் விளக்கமாகத் தெரிந்து கொண்டோம் அல்லவா? புவியில் தாவர, விலங்கு இனங்களின் நிலைப்பேற்றை உறுதி செய்வதில் வளிமண்டலம் மற்றும் புவி மேற்பரப்பு அம்சங்களின் பங்கு முக்கியமானது.

## தொடர் செயல்பாடுகள்

- புவி அமைப்பின் மாதிரி உருவாக்கி சமூக அறிவியல் ஆய்வுக்கூடத்தில் காட்சிப்படுத்தவும்.
- இணையதள உதவியுடன் ஸ்லைடுகள் (Slide) தயார் செய்து புவியின் அமைப்பு, சிறப்பு தன்மைகள் பற்றி விளக்குக.
- வளிமண்டல அமைப்பு, சிறப்புத்தன்மை ஆகியவற்றை உட்படுத்தி ஒரு கட்டுரை தயார் செய்து வகுப்பில் வெளியிடவும்.

ST-501-11-SOC. SCI.-(T)7-VOL-1




6

# இந்தியத் துணைக்கண்டம்

நாம் வாழும் புவியில் மூன்றிலிரண்டு பங்கு பெருங்கடலாகும், இது பல பெயர்களில் அறியப்பட்டாலும் அவை ஒன்றோடொன்று தொடர்புடையவையாக உள்ளன. பெருங்கடல் தவிர மீதமுள்ளப் பகுதி கரைப்பகுதியாகும்.

பெருங்கடல்களைப் போன்று கரைப்பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்புடையவையாக உள்ளதா?

பரந்து விரிந்த கரைப்பகுதிகள் 'கரைப்பகுதியின் துண்டுகள்' என்ற பொருளில் புவிக்கண்டங்கள் அல்லது பெருங்கண்டங்கள் என அழைக்கப்படுகின்றன. பலதரப்பட்ட நில அமைப்புப் பகுதிகளை உடைய மிகப்பெரிய கரைப்பகுதிகளைப் புவிக் கண்டங்கள் என்கிறோம். உயரமான மலைப்பகுதிகள், பரந்து விரிந்த சமவெளிகள்.




*படம் 6.1*

பலதரப்பட்ட பாலைவனங்கள், பீடபூமிகள் போன்ற பல்வேறு நிலத் தோற்றங்களையும் பெருங்கண்டங்களில் நம்மால் காண முடியும். தரப்பட்டுள்ள நிலப்படத்தையும் (படம் 6.1) புவி உருண்டையையும் உற்றுநோக்கி கண்டங்களை வரிசைப்படுத்தவும். இதில் நமது நாடான இந்தியா எந்தக் கண்டத்தில் அமைந்துள்ளது என்பதைக் கண்டுபிடிக்கவும்

## துணைக்கண்டங்கள்

கண்டங்களைப் போலவே பலவகையான நிலத்தோற்றமும், காலநிலையும் கொண்ட பரந்த கண்டப் பகுதிகள் "துணை கண்டங்கள்' (Subcontinents) என்று அழைக்கப்படுகின்றன. பாமீர் பீடபூமி ஆசியா கண்டத்தின் தென்பகுதியைப் பிற பகுதிகளிலிருந்து புவியியல் அடிப்படையில் வேறுபடுத்திக் காட்டுகிறது. இந்தியத் துணைக்கண்டத்தின் நிலத்தோற்றம். உயரமான மலைச் சிகரங்கள், பரந்த சமவெளிகள், பாலைவனப் பகுதிகள், கடினத்தன்மையுடைய பாறைகளால் உருவான பீடபூமிகள், கடற்கரை சமவெளிகள், தீவுகள் முதலியவற்றை உள்ளடக்கிய பகுதியாகும்.

'உலகின் மேற்கூரை' என சிறப்பிக்கப்படும் பாமீர் பீடபூமி, டியான்ஷான், காரகோரம், குன்லூண், இந்துக்குஷ் போன்ற மலைத்தொடர்களின் இணைப்புப் பகுதியாகும்

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள வட எல்லையில் இமயமலையும் கிழக்கு எல்லையில் அரக்கன் மலைத் தொடரும் மேற்கு எல்லையில் இந்துகுஷ் மலைத் தொடரும் அமைந்துள்ளன. இந்தியத் துணைக்கண்டத்தின் தென் எல்லையாக இந்தியப் பெருங்கடல் உள்ளது.


ஒரு நாட்டின் பெயரால் அழைக்கப்படும் ஒரே ஒரு பெருங்கடல் இந்தியப் பெருங்கடல் ஆகும்.

தரப்பட்டுள்ள நிலப்படத்திலிருந்து (6.2) இந்தியத் துணைக்கண்டத்தில் காணப்படும் நாடுகளைக் கண்டுபிடிப்பீர்கள் அல்லவா.

- இந்தியா
- வங்காளதேசம்
- 
- 

இந்தியத் துணைக்கண்டத்தின் வடக்கில் அமைந்துள்ள மலைத் தொடர்கள் எவை எனக் காணலாம். நிலப்படத்தை (6.2) உற்றுநோக்கவும்.பாகிஸ்தானில் இந்துகுஷ் மலைத்தொடரும் இந்தியா, நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளில் இமயமலைத் தொடரும் காணப்படுகிறது. உலகிலேயே மிகவும் உயரம் கூடிய சிகரங்கள் இந்த மலைத் தொடர்களில் தான் உள்ளன.

இமயமலைத் தொடரின் தென்பகுதியில் பரந்து விரிந்த சமவெளிப் பகுதி உள்ளது. இப்பரந்த சமவெளி சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா போன்ற நதிகள் இழுத்துக்கொண்டு வந்த வண்டல் மண்ணின் சேமிப்புகளால் தான் உருவானது. 'வட பெருஞ்சமவெளி' என்று அழைக்கப்படும் இந்தச் சமவெளி துணைக்கண்டத்தின் கிழக்கிலிருந்து மேற்கு வரைப் பரந்து கிடக்கிறது.





*படம் 6.2*

வட இந்திய பெருஞ்சமவெளிகளின் சிறப்புத்தன்மைகள் எவையெனக் காணலாம்..

- வளமான மண்
- நதிகளின் நீர்வளம்
- சமமான நிலத்தோற்றம்
- மக்கள் அடர்த்தி கூடிய பகுதி

வட இந்திய பெருஞ்சமவெளியின் தென் பகுதி பீடபூமியாகும். இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 150 முதல் 900 மீட்டர் வரை உயரம் உடையதாகும். ஏறக்குறைய முக்கோண வடிவத்தில் உள்ள இப்பகுதி 'தீபகற்ப பீடபூமி' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

**நிலப்படத்தின் உதவியுடன் தீபகற்ப பீடபூமியின் அமைவிடத்தைக் கண்டுபிடிக்கவும்.**




*படம் 6.3*

தீபகற்ப பீடபூமியின் வடமேற்கிலுள்ள இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் பரந்து காணப்படும் வறண்ட நிலப்பகுதி தார் பாலைவனம் ஆகும். மிகக்குறைந்த அளவில் மழை கிடைக்கும் இப்பகுதியில் கள்ளிச்செடிகள், முட்செடிகள், புதர்ச்செடிகள் போன்ற இயற்கைத் தாவரங்கள் வளர்கின்றன.

படம் (6.3) ஐ உற்றுநோக்கவும். இந்தியத் துணைக்கண்டத்தில் மிக நீளமான கடலோர சமவெளிப் பகுதி காணப்படுகிறது. மாலத்தீவு, இலங்கை போன்ற தீவு நாடுகளும் லட்சத் தீவுகள், அந்தமான் நிக்கோபார் போன்ற சிறிய தீவுக் கூட்டங்களும் இந்தியத் துணைக்கண்டத்தின் பகுதிகள் ஆகும்.

தரப்பட்டுள்ள படங்கள் (6.4, 6.5) ஐ ஒப்பிட்டு அவை எந்தெந்த நிலப்பகுதிகளிலுள்ள மக்களின் வாழ்க்கை முறையை குறிப்பிடுகின்றன என்று அறிந்துகொள்ளுங்கள்.



படம் 6.4



படம் 6.5

இந்தியத் துணைக்கண்டம் தனித்தத்துவம் வாய்ந்த காலநிலை சிறப்புகளைக் கொண்டுள்ளது.

காலநிலையில் வட்டார வேறுபாடுகள் இருந்தாலும் இந்தியத் துணைக்கண்டத்தின் காலநிலை பொதுவாக மன்சூன் காலநிலை என்று அறியப்படுகிறது. பருவகாலம் என்ற பொருள்படும். 'மௌசிம்' என்ற அரபுச் சொல்லிலிருந்து மன்சூன் என்ற சொல் உருவானது. இந்தியத் துணைக் கண்டத்தின் கால நிலையில் மன்சூன் காற்றுகள் தாக்கம் செலுத்துகின்றன. இக்காற்றுகள் பருவ காலங்களுக்கு ஏற்ப திசை மாறுகின்றன.

அரபுப் பயணியும் எழுத்தாளருமான அல் மசூதியின் நூல்களில் பருவகால மாற்றங்களுக்கு ஏற்ப திசை மாறும் மன்சூன் காற்றுகள் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

### சூரியனின் அயனம்

சூரியன் தன்னுடைய உச்சநிலையில் கடகரேகை ($23\frac{1}{2}^0$ வடக்கு) மற்றும் மகர ரேகை ($23\frac{1}{2}^0$ தெற்கு) இடையில் மாறிக்கொண்டிருக்கும் நிகழ்வு அயனம் ஆகும். புவியின் சுழற்சி மற்றும் புவி அச்சுத்தண்டின் சாய்வினால் இத்தகைய சூரிய நிலை மாற்றம் ஏற்படுவதாக உணரப்படுகிறது.

சூரியனின் அயனம் மூலம் கடகரேகை பகுதியில் சூரியன் துணைக்கண்டத்தின் மேல் பகுதியில் நிலை கொள்வதால் கரைப்பகுதியில் உள்ள காற்று வெப்பமடைந்து மேல் நோக்கிச் செல்கிறது. இதனால் பெருங்கடல்களில் இருந்து ஈரப்பதம் நிறைந்த காற்று இப்பகுதியை நோக்கி வீசுகிறது. எனவே துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலும் மழை கிடைக்கிறது. மே, ஜூன் மாதங்களில் தென்மேற்குத் திசையில் இந்தியப் பெருங்கடலில் இருந்து துணைக்கண்டத்தை நோக்கி வீசும் காற்று இந்தியத் துணைக் கண்டத்தில் பரவலான மழைக்குக் காரணமாகிறது..

மகர ரேகைப் பகுதியில் சூரியனின் நிலை இந்தியப் பெருங்கடலின் மேற்பகுதியில் வரும் போது பெருங்கடலின் மேற்பரப்பிலுள்ள வாயு வெப்பமடைந்து மேல் நோக்கிச் செல்கிறது. மேலும் வடதிசையிலிருந்தும் காற்று இங்கு வீசுகிறது. செப்டம்பர், அக்டோபர்

மாதங்களில் வடகிழக்கிலிருந்து தென்மேற்குத் திசையை நோக்கி வீசும் காற்றுகள் பொதுவாகவே வறண்டு காணப்படுவதால் மழையின் அளவு குறைவாகவே இருக்கும். ஆனால் வங்காள விரிகுடாவில் இருந்து நீராவியை உட்கிரகிப்பதால் தீபகற்பப் பகுதியின் கிழக்குக் கடலோர பகுதிகளில் அதிகமான மழை பெய்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்தில் எல்லா இடங்களிலும் ஒரே அளவில் மழை கிடைப்பதில்லை என்பதைப் புரிந்து கொண்டீர்களல்லவா?

காலநிலையில் தாக்கம் செலுத்தும் காரணிகள் எவை எனப் பார்ப்போம்.?

ஒரு நிலப்பகுதியினுடைய

- அட்சகோட்டு அமைவிடம்
- கடல் மட்டத்திலிருந்துள்ள உயரம்
- நிலத்தோற்றம்
- பெருங்கடலின் அருகில்
- காற்று

முக்கியமான அட்சரேகையான கடகரேகைக்கு இரு பக்கங்களிலும் வேறுபட்ட காலநிலை அனுபவப்படுகிறது. கடகரேகையின் வடக்குப் பகுதியில் மிதவெப்ப காலநிலையும், தெற்குப் பகுதியில் வெப்ப காலநிலையும் அனுபவப்படுகிறது.

வெப்ப மண்டலத்தில் குளிர்காலத்திலும் வெப்ப காலத்திலும் அனுபவப்படும் வெப்பநிலையின் அளவு மிதமாகவே இருக்கும். ஆனால் மிதவெப்ப மண்டலத்தில் குளிர்காலம் வெப்பகாலத்தில் அனுபவப்படும் வெப்ப நிலையின் அளவு அதிகமாகவே இருக்கும்.

மூணாறு அரசு மாடல் ரெசிடென்ஷியல் பள்ளியில் படிக்கும் தியா என்ற மாணவி திருவனந்தபுரத்தில் உள்ள தனது வீட்டிற்கு எழுதிய கடிதத்தின் சிறு பகுதியை வாசித்துப் பாருங்கள்.


அன்புள்ள தங்கைக்கு

நீ நலமென நம்புகிறேன். இங்கு பகலிலும் வகுப்பில் இருக்கும் போது கம்பளி ஆடை அணிந்து கொள்கிறேன். குளிர் மிக அதிகமாக இருப்பதால் இரவில் இரண்டு கம்பளி போர்வைகள் தேவைப்படுகின்றன. வீட்டில் இரவில்கூட மின் விசிறி பயன்படுத்திய எனக்கு இது ஆச்சரியமாகவே இருக்கிறது. குளிர்ந்த நீரில் குளித்த எனக்கு இங்கு அதை நினைத்துக்கூட பார்க்கமுடிவில்லை. விடுமுறையில் திருவனந்தபுரத்துக்கு வரும்போது இங்கு பயிர் செய்யப்படும் ஆப்பிள், ஸ்ட்ராபெர்ரி பழங்களைக் கொண்டுவருகிறேன். அங்குள்ள வெப்பக் காலநிலையில் இவை வளர்வதில்லை அல்லவா?



மூணாறு, ஊட்டி போன்ற இடங்களில் குளிர்ச்சியான காலநிலை அனுபவப்படுவது ஏன் என்று நீங்கள் நினைத்துப் பார்த்ததுண்டா? முந்தைய பாடத்தில் சீரான வெப்ப இழப்பு விகிதம் பற்றி கற்றதை நினைவு கூர்வீர்கள் அல்லவா.?

காலநிலையில் தாக்கம் செலுத்தும் மற்றொரு முக்கியக் காரணி நில அமைப்பாகும். ஈரப்பதம் நிறைந்த காற்றின் எதிர் திசையில் காணும் மலைகள் காற்றைத் தடுத்து நிறுத்தி மழை பொழியச் செய்கின்றன. சகிய மலைத் தொடரின் மேற்குச் சரிவு பகுதியான கேரளத்தில் நல்ல மழை கிடைக்கும்போது இந்த மலையின் கிழக்குச்சரிவு பகுதியான தமிழ்நாட்டில், மழை மிகக் குறைவாகக் கிடைப்பதன் காரணத்தை இப்போது புரிந்து கொண்டீர்கள் அல்லவா? மழை குறைவாகக் கிடைக்கும் இந்தப் பகுதிகள் 'மழை நிழல் பகுதிகள் '(Rain Shadow Regions) என அழைக்கப்படுகின்றன.




*படம் 6.6*

ஆனால் ஈரப்பதம் நிறைந்த காற்று மலைத் தொடர்களுக்கு இணையாக வீசும் இடங்களில் தடையேதும் இல்லாததால் மழை பெய்யாமல் காற்று கடந்து செல்கிறது. ராஜஸ்தானில் ஆரவல்லி மலைத்தொடர் அமைந்துள்ள பகுதி பாலைவனமாக மாறியதன் காரணமும் இதுவே ஆகும்.

கடலோடு சேர்ந்து காணப்படும் பகுதிகளில் ஈரப்பதம் நிறைந்த காலநிலையும், கடலிலிருந்து தூரமான பகுதிகளில் ஏறக்குறைய வறண்ட காலநிலையும் அனுபவப்படுகிறது.

காற்றின் திசையும் அதிலுள்ள ஈரப்பதத்தின் அளவும் கால நிலையில் தாக்கம் செலுத்துகின்றன.

நிலத்தோற்றத்திலும் காலநிலையிலும் அனுபவப்படும் இந்த வட்டார வேறுபாடுகள் மக்கள் வாழ்க்கை முறையிலும் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றனவா?

வடஇந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் மக்களின் உணவுப் பழக்கம் ஒன்று போல் உள்ளதா?

காஷ்மீரிலும் தமிழ்நாட்டிலும் மக்களின் ஆடை அணியும் முறைகள் ஒரே போல் உள்ளனவா?

மேற்குத்தொடர்ச்சி மலையில் பயிர் செய்யப்படும் பயிர்களா வட இந்தியச் சமவெளியிலும் பயிர் செய்யப்படுகின்றன? கீழே தரப்பட்டுள்ள படங்களில் இருந்து மேற்குத் தொடர்ச்சி மலையில் பயிர் செய்யப்படும் பயிர் எது என்று கண்டுபிடிக்கவும்.



*படம் 6.7 ஏலம் விவசாயம்*



*படம் 6.8 கோதுமை விவசாயம்*



பல்வேறு ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மேல் காணும் வினாக்களுக்கு விடை கண்டுபிடிக்கவும்.

ஒவ்வொரு பகுதிகளிலும் காணப்படும் நிலத் தோற்றம் கால நிலைக்கேற்ப அந்தந்த இடங்களில் மக்களின் வேளாண்மை, உணவு, உறைவிடம், ஆடை, பழக்க வழக்கங்கள் விழாக்கள் போன்றவை அமைந்துள்ளன.

இந்தியாவில் பெரும்பான்மையான மக்களும் வேளாண்மைத் தொழிலில் ஈடுபாடு உடையவர்கள் என்பதால் மழை பெய்வதில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் மக்கள் வாழ்க்கையில் அதிகமான தாக்கத்தைச் செலுத்துகின்றன.கூடுதல் மழை கிடைக்கும் பகுதிகளில் பரவலாக வேளாண்மை நடக்கும் போது நீர்ப்பற்றாக்குறையால் பல பகுதிகளும் வேளாண்மைக்கு உகந்ததாக இல்லாமல் மாறுகின்றன. மழையின் அளவில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கு ஏற்ப பயிர் செய்யப்படும் பயிர் வகைகளும் வேறுபடுகின்றன. கூடுதல் மழை கிடைக்கும் பகுதிகளில் நெற்பயிரும், மிதமான மழை கிடைக்கும் பகுதிகளில் கோதுமையும் முக்கிய உணவுப் பயிர்களாக பயிர் இடப்படுகின்றன. மழை மிகவும் குறைந்த பகுதிகளில் பயறு வகைகளும், சிறு தானியங்களும் பயிர் செய்யப்பட்டு வருகின்றன.

ST-501-12-SOC. SCI.-(T)7-VOL-1

கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை உற்றுநோக்கவும்.

| பயிர் | நீரின் தேவை | விதை விதைக்கும் மாதங்கள். | அறுவடை செய்யும் மாதங்கள் |
|---|---|---|---|
| நெல் | கூடுதல் நீர் தேவை | ஜூன் | செப்டம்பர் |
| கோதுமை | மிதமான அளவு நீர் தேவை | அக்டோபர் | மார்ச் |
| தர்பூசணி | குறைவாக மழை கிடைக்கும் இடங்களில் நீர்ப் பாசன வசதி தேவை. | ஏப்ரல் | ஜூன் |

வெவ்வேறு காலங்களில் பயிர்கள் பயிர் செய்யப்படுகின்றன என்பதை புரிந்துகொண்டீர்கள் அல்லவா? ஒவ்வொரு பயிர்வகையும் விதைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் குறிப்பிட்ட கால அளவு தேவைப்படுகிறது. இக்கால அளவை வேளாண் காலங்கள் என்று கூறுவர். இந்தியாவில் மூன்று வேளாண் காலங்கள் உள்ளன

- காரிஃப்
- ராபி
- சைத்

தென் மேற்கு (மன்சூன்) பருவமழையைத் தொடர்ந்து வரும் காரிஃப் காலத்தில் வெப்பமும் தண்ணீரும் அதிகமாகத் தேவைப்படுகின்ற நெல், பருத்தி,சணல், சோளம், சிறுதானியங்கள், துவரை போன்றவை பயிர் செய்யப்படுகின்றன.

அக்டோபர், நவம்பர் மாதங்களில் குளிர்காலத் தொடக்கத்தில் வரும் ராஃபி காலத்தில் வெப்பமும் தண்ணீரும் மிதமாகத் தேவைப்படும் கோதுமை, பயறு வகைகள், கடுகு போன்றவை பயிர் செய்யப்படுகின்றன. பிப்ரவரி மாதத்துடன் ராஃபி காலம் முடிவடைகிறது.

ராபி அறுவடைக்குப் பிறகு தொடங்கும் குறைந்த கோடைக்கால விவசாய காலமான சைத் ஆகும். தர்பூசணி, வெள்ளரி, காய்கறிகள், கால்நடைப் பயிர்கள் போன்றவை இக்காலத்தில் நீர்ப்பாசன வசதி உள்ள இடங்களில் பயிர் செய்யப்படுகின்றன. இந்தியாவில் மூன்று வேளாண் காலங்கள் உண்டு என்றாலும் வட்டார அடிப்படையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன

இந்தியாவில் பயிர் செய்யப்படும் முக்கிய பயிர்களை எவ்வாறெல்லாம் வகைப்படுத்தலாம் எனப் பார்ப்போம்.

## உணவுப் பயிர்கள்

உணவுப் பயிர்களை தானியங்கள் மற்றும் பயறு வகைகள் என இரண்டு வகையாகப் பிரித்துள்ளனர். மிருதுவான தானியங்களான நெல், கோதுமை கடின தானியங்களான சிறுதானியங்கள், சோளம், கேழ்வரகு போன்றவையும் இந்தியாவில் பயிர் செய்யப்படுகின்றன.



*படம் 6.9 கோதுமை*



*படம் 6.10 பயறு*

பயறு, துவரை போன்றவை இந்தியாவில் பயிர் செய்யப்படும் முக்கிய பயறு வகைகளாகும்.

## பணப்பயிர்கள் :

வணிக அடிப்படையில் அதிக அளவில் பயிர் செய்யப்படும் பயிர்வகைகள் பணப் பயிர்கள் ஆகும். கரும்பு, புகையிலை, பருத்தி, சணல், எண்ணெய் விதைகள் போன்றை இவற்றில் அடங்கும்.

## நார்ப்பயிர்கள் :

பருத்தியும் சணலும் இந்தியாவின் முக்கிய நார்ப் பயிர்கள் ஆகும். துணிவகைகள், நார்ப் பைகள், கோணிப் பைகள் போன்ற எண்ணற்றப் பொருட்களை உருவாக்கத் தேவையான நார்களை நமக்குத் தருவது நார்ப் பயிர்கள் ஆகும்.

## எண்ணெய் விதைகள் :

சமையல் எண்ணெய் தயாரிக்க தேவையான எண்ணெய் விதைகள் பயிர் செய்யப்படுகின்றன. நிலக்கடலை, கடுகு வகைகள், சோயா பீன்ஸ். சூரியகாந்தி போன்றவை இதில் அடங்கும். இவை தவிர தேயிலை, காப்பி, ரப்பர் வாசனைத் திரவியங்கள், கிழங்கு வகைகள் போன்ற பயிர்களும் இந்தியாவில் பயிர் செய்யப்படுகின்றன. இவை பெரும்பாலும் தோட்டப்பயிர்களாகப் பயிர் செய்யப்படுகின்றன.

பலவகை பயிர்களைப் பற்றி அறிந்து கொண்டீர்கள் அல்லவா? இவை அனைத்தும் ஒரே முறையிலா பயிர் செய்யப்படுகிறது?

உலகின் வெவ்வேறு பகுதிகளின் நில அமைப்பு, மண்வளம், காலநிலை, நீர்ப் பாசன வசதி, மக்கள் அடர்த்தி, பயிர் செய்யப்படும் நிலத்தின் பரப்பளவு, பயிர்களின் மதிப்பு, கிடைக்கப்பெறும் தொழில் நுட்ப வசதிகள் போன்றவற்றின் அடிப்படையில் பல்வேறு பயிர்முறைகள் நடைமுறையிலுள்ளன. இயற்கையோடு இணைந்த வாழ்வாதார விவசாயம் மேம்பட்ட வாழ்வாதாரப் பயிர்முறை, கலப்புப் பயிர்முறை, பரந்த வாணிபப் பயிர்முறை, பால் உற்பத்தி,தோட்டப்பயிர்முறை, மலர் விவசாயம் போன்றவை இதில் உட்படும். இந்தியாவில் உள்ள பல்வேறு பயிர் முறைகள் எவை என்பதை அடுத்த அத்தியாயம் வழி அறிந்து கொள்ளலாம்.

## தொடர் செயல்பாடு


- இந்தியத் துணைக்கண்டத்தில் காணப்படும் நாடுகள், அவற்றின் தலைநகரங்கள், கலாச்சாரச் சிறப்புகள் போன்றவற்றை வாசிப்புப் பொருட்கள், இணையதளம் ஆகியவற்றின் உதவியுடன் கண்டறிந்து ஒரு கட்டுரை தயார் செய்யவும்.
- துணைக்கண்டத்தின் பல்வேறு நாடுகளில் காணப்படும் கலாச்சார வேறுபாடுகளை வெளிப்படுத்தும் படங்களைச் சேகரித்து ஒரு சுவரொட்டி தயார் செய்யவும்.
- தரப்பட்டுள்ள இந்தியத் துணைக்கண்டத்தின் வரைபடத்தில் பல்வேறு நாடுகளுக்கும் தனித்தனி நிறம் கொடுத்து அவற்றின் பெயர்களை எழுதிச் சேர்க்கவும்


இந்திய துணைக்கண்டத்தின்
வரைபடம்
N
W
E
S
MAP NOT TO SCALE



# 7

# உணவு உற்பத்தியிலிருந்து உணவுப் பாதுகாப்பு வரை



படம் 7.1



தெளிந்த வானத்தின் கீழே பச்சை நிற கம்பளம் விரித்தது போன்று ஒரு வயல். தென்றல் காற்றில் நெல்மணிகள் மெதுவாகத் தலையசைத்து நிற்பதைப் பார்ப்பதற்கு எத்துனை அழகு! ... இன்று விடுமுறை ஆனதால் அப்பா அம்மாவுடன் நானும் அக்காவும் விவசாயம் செய்ய சென்றோம். நெல் மட்டும் அல்ல அருகில் காய்கறித் தோட்டமும் உண்டு. கத்தரி, பயறு, புடலை, வெண்டை, கீரை, சேனை, சேம்பு போன்ற அனைத்துவகை காய்கறிகளும் உள்ளன. அறுவடைக்குத் தயாராக நிற்கும் தோட்டத்தின் காட்சி என்னை ஆச்சரியப்பட வைத்தது. வழக்கத்திற்கு மாறாக அதிக அறுவடையுடன் நாங்கள் வீட்டுக்கு வந்தோம். வீட்டு பயன்பாட்டுக்குத் தேவையான உணவு வகைகளில் பெரும்பாலானவற்றைச் சொந்தமாக உற்பத்தி செய்து பயன்படுத்தும் பழக்கம் முன்பிருந்தே அப்பாவுக்கு உண்டு. அதிக அளவில் காய்கறிகள் கிடைத்ததால் அதில் சிறிதளவைக் கீர்த்தி அக்கா வீட்டிற்கும் மீதியைச் சந்தைக்கும் அம்மா கொண்டு சென்றார்.

நீங்கள் வாசித்தது நீதுவின் நாட்குறிப்பாகும்.

தினசரி பயன்பாட்டுக்குத் தேவையான என்னென்ன காய்கறிகளை இவர்கள் பயிர் செய்தனர்?

- 
- 
- 
- 
- 
- 

உற்பத்தியில் வரும் மீதியை எவ்வாறு பயன்படுத்தினர்?

- 
- 

இவ்வாறு பயிர் செய்வதால் ஏற்படும் நன்மைகள் எவை?

- 
- 

வேட்டையாடி வாழ்ந்த நமது முன்னோர்களிலிருந்து நவீன மனிதர்களின் வளர்ச்சியில் வேளாண்மைக்கு முக்கிய பங்கு உண்டு. வேளாண்மை செய்து வாழத் தொடங்கியதுடன் குடும்பம், கூட்டு வாழ்க்கை, கிராமம், நகரம் போன்ற சமூக வாழ்க்கை முறைக்குத் தேவையான அமைப்புகள் உருவாயின. தனது வாழ்வாதார அடிப்படையிலிருந்த வேளாண்மை முறையிலிருந்து படிப்படியாக மனிதன் வணிகத்தை அடிப்படியாகக் கொண்ட வேளாண் முறைக்கு மாறினான். இந்த மாற்றங்கள் எவையெனவும் அதற்காக மனிதன் உருவாக்கிய வேளாண் முறைகள் எவையெனவும் நாம் காணலாம்.

**வேளாண்மையின் தொடக்கம்**

நாடோடியாக வாழ்ந்த மனிதன் ஏறக்குறைய கி.மு. 7000 ம் ஆண்டுக்குப் பிறகு தான் வேளாண்மை செய்யத் தொடங்கினான். மெசப்பட்டோமியா, துருக்கி, எகிப்து, மேற்கு ஆசியா, ஐரோப்பா போன்ற நாடுகளில் பல்வேறு காலகட்டங்களில் மனிதன் வேளாண்மை செய்யத் தொடங்கினான்.

கி.மு. 3000–இல் சிந்துநதிக்கரை நாகரீகத்துடன் இந்தியாவில் வேளாண் கலாச்சாரம் வளரத் தொடங்கியது. சிந்துநதிக்கரையின் இரட்டை நகரங்களான மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பாவில் கோதுமை, பார்லி போன்ற தானியங்கள் பயிர் செய்யப்பட்டன. அதன் பின்னர் தென் இந்தியாவில் வேகுகாலத்திற்குப் பிறகுதான் வேளாண்மை தொடங்கப்பட்டது.

## வாழ்வாதார வேளாண்மை

இது விவசாயி தனது குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்குத் தேவையானவற்றை மட்டும் உற்பத்தி செய்ய பயன்படுத்திய முறையாகும். இலாபம் ஈட்டுவது இந்த விவசாய முறையின் அடிப்படை நோக்கமல்ல. ஆனால் சில நேரங்களில் மீதம் வரும் வேளாண் உற்பத்தி

பொருட்கள் பிற தேவைகளை நிறைவேற்றுவதற்காக விற்பனை செய்யப்பட்டன. பாரம்பரிய வேளாண் கருவிகளே இவ்வேளாண்முறையில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டன.

## கலப்பு வேளாண்மை

ஒரு குறிப்பிட்ட விவசாய நிலத்தில் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட பயிர்கள் பயிர் செய்வது கலப்பு வேளாண்மை எனப்படும். இத்துடன் கால் நடைகள், கோழி மற்றும் மீன் வளர்த்தல் போன்றவையும் ஒருங்கிணைத்து செய்யலாம். இவ்வாறு வேளாண்மை செய்வதால் ஏற்படும் நன்மைகள் எவை?



*படம் 7.2*

- கால்நடைகளுக்கு தேவையான உணவு விவசாயத்திலிருந்து கிடைக்கிறது.
- விவசாயத்திற்கு தேவையான உரம் கால்நடைகளிலிருந்து திரும்பக் கிடைக்கிறது.
- ஒப்பீட்டளவில் செலவு மிகவும் குறைவாக இருக்கும்
- 
- 

கூடுதல் தகவல்களைக் கண்டறிந்து நிரப்புக..

## தோட்டப்பயிர் வேளாண்மை



*படம் 7.3*

பாரம்பரிய முறையில் நெல்லையும் பிற உணவு தானியங்களையும் மட்டும் வேளாண்மை செய்து வந்த விவசாயிகள் ஆங்கிலேயர்களின் வருகைக்குப் பின் பரப்பளவு கூடிய பகுதிகளில் அதிக அளவில் தோட்டப் பயிர்களான தேயிலை, காப்பி, கிராம்பு, ஏலம், நல்லமிளகு போன்றவற்றைப் பயிர் செய்யத் தொடங்கினார்கள். தொழில் புரட்சியின் பயனாக பிரிட்டன் மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளுக்கு அதிக அளவில் வேளாண் கச்சா பொருட்கள் தேவைப்பட்டன. அதற்காக 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் காலனி நாடுகளில் அவர்கள் தோட்டப்பயிர் முறையை ஊக்குவித்தினர். நீண்ட காலத்திற்கு வருமானமும்

குறைவான உற்பத்திச் செலவும் இந்த வேளாண் முறையின் தனித்தன்மைகளாகும்.

## வணிக வேளாண்மை

வேளாண் விளை பொருட்களை வணிக அடிப்படையில் பெருமளவில் உற்பத்தி செய்வது வணிக வேளாண்மை எனப்படும். தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் வேளாண் கச்சாப் பொருட்களை விளைவிப்பதில் வணிக வேளாண்மை முக்கிய பங்கு வகிக்கிறது. இது உயர்ந்த மூலதன சேமிப்பும் நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாடும் தேவைப்படும் ஒரு வேளாண்மை முறையாகும். ரப்பர், கரும்பு, பருத்தி, சணல் போன்றவை வணிக வேளாண் விளைபொருட்கள் ஆகும்.



படம் 7.4

நமது நாட்டின் பல்வேறு வேளாண் முறைகளைப் பற்றி அறிந்துகொண்டீர்கள் அல்லவா? கூடுதல் சிறப்பம்சங்களைக் கண்டறிந்து அட்டவணையை விரிவுபடுத்தவும்.

| வாழ்வாதார வேளாண்மை | கலப்பு வேளாண்மை | தோட்ட வேளாண்மை | வணிக வேளாண்மை |
|---|---|---|---|
| • சொந்தத் தேவைகளுக்காகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.<br>• சிறிய இடங்களிலும் விவசாயம் செய்ய முடியும்<br>•<br>• | • ஒரே உரம் ஒன்றுக்கு அதிகமான பயிர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது<br>• உற்பத்திச் செலவு குறைகிறது<br>•<br>• | • ஒப்பிடுகையில் உற்பத்திச் செலவு குறைவு<br>• அதிக அளவில் உற்பத்தி நடைபெறுகிறது<br>•<br>• | • உயர்ந்த மூலதன சேமிப்பு<br>• கச்சாப் பொருட்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது<br>•<br>• |

## வேளாண்மை – உணவிற்கும் வருமானத்திற்கும்...

ST-501-13-SOC. SCI.-(T)7-VOL-1



*படங்கள் 7.5*

படங்களில் காண்பிக்கப்பட்டுள்ள வேளாண் விளை பொருட்களில் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் பயிர்கள் எவை?

- 
- 
- 

பிற பயிர்கள் எவை?

- 
- 
- 

வேளாண் விளை பொருட்களை உணவுப் பயிர்கள், பணப் பயிர்கள் என இரண்டாக வகைப்படுத்தியுள்ளனர். உணவுப் பொருட்களாகப் பயன்படுத்தும் பயிர் வகைகள் உணவுப் பயிர்கள் ஆகும். ஆனால் வணிகத் தொழில் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் பயிர்வகைகள் பண பயிர்கள் எனப்படும்.

நமது நாட்டின் வேளாண் விளை பொருட்களைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்பவும்.

| உணவுப் பயிர்கள் | பணப் பயிர்கள் |
|---|---|
| ● நெல் | ● பருத்தி |
| ● கோதுமை | ● ரப்பர் |
| ● | ● |
| ● | ● |
| ● | ● |




கீழே தரப்பட்டுள்ள அட்டவணையிலிருந்து ஒவ்வொரு விளை பொருட்களும் எந்தெந்த மாநிலங்களில் பயிர் செய்யப்படுகின்றன என்பதை அறியலாம் அல்லவா? அந்த மாநிலங்களை வரை படத்தில் கண்டுபிடித்து நிறம் கொடுக்கவும்.


| பயிர் | மாநிலங்கள் |
|---|---|
| கோதுமை | உத்திரப்பிரதேசம், பஞ்சாப், மத்தியப்பிரதேசம், ஹரியானா |
| பருத்தி | மகாராஷ்டிரம், குஜராத், தெலுங்கானா, ராஜஸ்தான் |
| நெல் | மேற்குவங்காளம், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், பீகார் |




கோதுமை




பருத்தி




நெல்

பலவேறுவகையான வேளாண் விளை பயிர்கள் பயிரிடப்படுவது இந்தியாவின் சிறப்பம்சம் ஆகும். பலவகையான வேளாண் விளைபொருட்கள் இந்தியாவில் பயிர் செய்யப்படுவதற்கு உகந்த புவியியல் காரணிகள் எவையென பார்ப்போம்.










நமது நாட்டின் வேளாண் காலங்களைப் பற்றி முந்தைய பாடத்தில் தெரிந்துகொண்டீர்கள் அல்லவா? அவை எவை?

- 
- 
- 

எல்லாப் பயிர்களையும் எல்லா இடங்களிலும் பயிர் செய்ய முடியுமா? எதனால்? குறிப்பு தயார் செய்யவும்

## வேளாண்மையும் வேளாண்மை சார்ந்த தொழில்களும்

வேளாண் உற்பத்தி பொருட்களைச் சார்ந்து செயல்படும் தொழில்கள் வேளாண்மை சார்ந்த தொழில்கள் ஆகும். வேளாண் விளை பொருளான பருத்தி, துணித்தொழிலின் கச்சாப் பொருளாகும். எனவே, துணித்தொழில் வேளாண் சார்ந்த தொழிலுக்கு எடுத்துக்காட்டாகும். அதுபோலவே ரப்பர், கரும்பு போன்ற வேளாண் விளைபொருட்கள் பலவகையான தொழில்களின் கச்சாப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. வேளாண் விளைபொருட்கள் கச்சாப் பொருட்களாகப் பயன்படுத்தப்படும் வேறுசில வேளாண்மை சார்ந்த தொழில்களைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்பவும்.

| வேளாண் விளைபொருட்கள் | தொழில்கள் |
|---|---|
| • பருத்தி | • துணித் தொழில் |
| • கரும்பு | • சர்க்கரைத் தொழில் |
| • | |
| • | |

## தாது செல்வங்கள் வாயிலாக ....





படங்கள் 7.6

தாதுக்களும் தாதுச் சுரங்கப்பகுதிகளின் படங்களும் மேலே தரப்பட்டுள்ளன.

- தாதுக்கள் என்றால் என்ன?
- தாதுக்கள் எங்கிருந்து கிடைக்கின்றன?
- தாதுக்களின் பயன்கள் யாவை? அதைப் பற்றிய தேடுதல் நடத்தலாமா?

புவி ஓட்டில் காணப்படும் உலோக, அலோக கலவை தாதுக்கள் எனப்படும்.

ஹேமடைட், மேக்னடைட், கலாமின், பாக்சைட், பாதரசத் தாது போன்றவை உலோக தாதுக்கள் ஆகும். இவற்றுள் பல உலோகத் தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படுகின்றன.

மைக்கா, வைரம், சிலிக்கா (மணல் துகள்) போன்றவை அலோக தாதுக்கள். நிலக்கரி, பெட்ரோலியம் என்பவை எரிபொருள் தாதுக்கள் ஆகும்.

தாதுக்களைச் சார்ந்த தொழில்களில் தாதுக்கள் முக்கிய கச்சாப் பொருட்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. நம்நாட்டில் மிகப்பெரிய தாது சார்ந்த தொழில் என்பது இரும்பு உருக்குத் தொழிலாகும். இது தொழில் துறையின் முதுகெலும்பு எனவும் முதன்மைத் தொழில் எனவும் அழைக்கப்படுகிறது.

நம்நாட்டில் முக்கிய தாதுசார்ந்த தொழில்கள்.

- இரும்பு உருக்குத் தொழில்
- செம்புத் தொழில்
- அலுமினியத் தொழில்
-
-

தரப்பட்டுள்ள தாதுக்கள் என்னென்ன தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன? கூடுதல் விவரங்களைக் கண்டறிந்து அட்டவணையை நிரப்பவும்.

| தாதுக்கள் | பயன்பாடு |
|---|---|
| ஹேமடைட் | இரும்பு உருக்கு தொழில் |
| சிலிக்கா (மணல் துகள்) | ● |
| பாக்சைட் | விமானம், மின் கருவிகள் |
| வைரம் | ● |
| நிலக்கரி | ரயில், இரும்பு தயாரித்தல் |
| பெட்ரோலியம் | ● |

## பசுமைப்புரட்சி

சுதந்திரத்திற்கு முன்பு ஆங்கிலேயரின் நிலவரிக்கொள்கை விவசாயிகளுக்குக் கடன் சுமையையும், உணவு விளைபொருட்கள் மீதுள்ள வெறுப்பையும் உணவுப் பற்றாக்குறையையும் ஏற்படுத்தியது. சுதந்திரத்திற்குப் பின் வேளாண் துறையில் அடிப்படை வசதிகளின் பற்றாக்குறையும் பழமையான தொழில்நுட்பங்களின் பயன்பாடும் வேளாண் உற்பத்தி குறையக் காரணமாயின.

ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலும் சுதந்திரத்திற்குப் பின்னரும் இந்திய வேளாண் துறை எதிர்கொண்ட சில பிரச்சினைகள் பற்றி நீங்கள் மேலே வாசித்தீர்கள் அல்லவா? இதன் காரணம் என்ன?

- ஆங்கிலேயர் நடைமுறைப்படுத்திய நிலவரிக்கொள்கை
- அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை
- 
- 

சுதந்திரப் போராட்டக் காலகட்டத்தில் இந்திய வேளாண் துறை பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டது. இவற்றைச் சரிசெய்ய சுதந்திர இந்தியாவில் நிலச்சீர்திருத்தம் பசுமைப்புரட்சி போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டன.

நிலசீர்த்திருத்தத்தின் படி தனிநபருக்கு நில உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டது. கூடுதல் உள்ள நிலத்தை அரசு கையகப்படுத்தியது. அந்த நிலப்பகுதி நிலமற்ற விவசாயிகளுக்கும் ஏழைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது. அதன் பயனாக வேளாண் உற்பத்தி பெருகியது. இந்தியாவில் முதன்முதலாக நிலச்சீர்திருத்த சட்டம் கேரளத்தில் தான் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதிக மகசூல் தரும் வீரிய ஒட்டு விதைகள், மேம்பட்ட உர வகைகள், பூச்சிக் கொல்லி மருந்துகள், புதிய தொழில் நுட்ப முறைகள், குறைந்த வட்டியில் கடன், அறிவியல் முறையிலான நீர்ப்பாசன வசதி போன்றவற்றைப் பயன்படுத்தி உணவுப் பொருட்களின் உற்பத்தியை அதிக அளவில் பெருகச் செய்த திட்டமே பசுமைப்புரட்சி. உணவு பொருட்களின் உற்பத்தியில் முதன்முதலாகக் கோதுமையில்தான் அதிக இலாபம் கிடைத்தது. எனவே இது "கோதுமை புரட்சி" எனவும் சிறப்பிக்கப்படுகிறது.



*படம் 7.7*
டாக்டர் எம். எஸ்.சுவாமிநாதன்

இந்தியப் பசுமைப்புரட்சியின் தந்தை என அறியப்படும் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் 1925 ஆம் ஆண்டு ஆகஸ்டு 7 ஆம் தேதி தமிழ்நாட்டில் கும்பகோணத்தில் பிறந்தார். இந்திய வேளாண் துறை ஆராய்ச்சிக் கழகத்தின் முதல் இயக்குனராகப் பணியாற்றினார். நாட்டின் 70% மக்களும் வேளாண் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் நாட்டில் உணவு தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. அதற்குத் தீர்வு காண்பதற்காக நார்மன் – இ – போர்லாகுவுடன் இணைந்து இந்திய வேளாண் துறையில் பசுமைப்புரட்சியில் பரிசோதனை நடத்தப்பட்டது. அதன் பலனாக உற்பத்தி முன்பைவிட ஐம்பது லட்சம் டன் கூடுதலாகக் கிடைத்தது. இதைத் தொடர்ந்து உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு பெற்றது. இத்தகைய வெற்றிக்குத் தலைமைப் பங்கு வகித்த இவரை இந்திய அரசு பத்மஸ்ரீ , பத்மபூஷன், பாரதரத்னா போன்ற விருதுகள் வழங்கி கவுரவித்தது. 2023 செப்டம்பர் 28–ல் இவர் சென்னையில் காலமானார்.

## பசுமைப்புரட்சியின் இரு பக்கங்கள்...

| நன்மைகள் | குறைபாடுகள் |
|---|---|
| உணவு பொருட்கள் உற்பத்தி அதிகரித்தது. | அதிக அளவிலான நீர் பயன்பாடு நிலத்தடி நீர் பெருமளவில் குறையக் காரணமானது |
| உணவு உற்பத்தியில் தன்னிறைவு உறுதி செய்யப்பட்டது. | இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லியின் கூடுதல் பயன்பாடு மண்ணின் வளத்தைப் பாதித்தது. |
| உணவு பொருட்களின் விலை குறைந்தது | |
| உணவு பொருட்களின் கருப்பு சந்தை மற்றும் பதுக்கல் குறைந்தன | |

**நாட்டில் உணவு பற்றாக்குறையும் வறுமையும் இல்லாமல் செய்வதற்குப் பசுமைப்புரட்சி எந்த அளவிற்குத் துணை புரிந்தது என்பதை கலந்துரையாடல் நடத்தி குறிப்பு தயார் செய்யவும்.**



*படம்7.8*
நார்மன் இ போர்லாக்

உலகெங்கும் உள்ள ஆயிரக்கணக்கான மக்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்றிய பசுமைப்புரட்சியின் தந்தை நார்மன்–இ–போர்லாக் ஆவார். 1914 மார்ச் 25 இல் அமெரிக்காவில் பிறந்த இவர் பட்டினியிலிருந்து மக்களை மீட்பதுதான் சமாதானத்தின் முதல்படி என்று நம்பினார். 1970 இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு இவருக்கு வழங்கப்பட்டது.

## வறுமை என்றால்...

தம் நண்பனைத் தேடி இரண்டு பேர் அவனது வீட்டிற்குச் சென்றனர். வீட்டில் அவனைக் காணவில்லை. அவன் எங்கே சென்றான்? என்று வீட்டில் உள்ளவர்களுக்கும் தெரியவில்லை. கடைசியாக அவனது அறைக்குள் சென்று தேடினார்கள். கட்டிலுக்கடியில் குனிந்து அமர்ந்து ஒரு சிலேட்டில் அவன் கணக்கு எழுதிக்கொண்டிருந்தான். அவர்கள் அவனிடம் இதைக் காகிதத்தில் எழுதக்கூடாதா எனக் கேட்டனர்.

" உணவு தருவதற்குக்கூட எங்களது தந்தை மிகவும் கஷ்டப்படுகிறார். பின் எவ்வாறு பணம் செலவழித்து காகிதம் வாங்கமுடியும்?" எனக் கேட்டான். அவனது பதிலைக் கேட்டு அந்த நண்பர்களுக்கு வேதனையாக இருந்தது.

(ஆதாரம் : சேப்பாடு பாஸ்கரன் நாயரின் பாரதிய சாஸ்திரக்ஜன்மார்)

'கணித மேதை' எனச் சிறப்பிக்கப்படும் இந்தியரான சீனிவாச இராமானுஜத்தின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஒரு பகுதியைத்தான் மேலே வாசித்தோம்.

சாதாரணத் தேவையைக் கூட நிறைவேற்ற இயலாத மக்கள் நம்முடைய சமூகத்தில் பலர் உள்ளனர். இத்தகைய சாதாரணத் தேவைகளைக் கூட நிறைவேற்ற இயலாத மக்களின் நிலையை எவ்வாறு அழைக்கலாம்?


- 

வறுமை என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வாழ்விடம், கல்வி மற்றும் நலவாழ்வு போன்றவை கிடைக்காத ஒருநிலையாகும். குறைந்த அளவு தேவையைக் கூட நிறைவேற்ற இயலாத வகையில் வருமானமோ, சொத்தோ சொந்தமாக இல்லாதவர்கள் ஏழைகள் எனப்படுவர்

**வறுமைக்கோடு**

ஒரு நாட்டின் மக்களை வறுமையில் வாடுபவர்கள் அல்லாதவர்கள் எனப் பிரிக்கும் கற்பனைக்கோடுதான் வறுமைக்கோடு.

ஒருவரின் வருமானம், உணவிலிருந்து கிடைக்கவேண்டிய ஆற்றல் இவற்றின் அடிப்படையில்தான் நம்முடைய நாட்டில் வறுமை கணக்கிடப்பட்டு வருகிறது நம்நாட்டு மக்களை வறுமைக்குக் கொண்டு செல்லும் காரணிகள் என்னவென்று நாம் பார்ப்போம்.




**இவற்றைத் தவிர வேறு என்னென்ன காரணிகள் வறுமைக்குக் காரணம் எனக் கண்டறிந்து சொற்சூரியனை பூர்த்தி செய்யவும்.**

## பல பரிமாண வறுமைக் குறியீடு (Multidimensional Poverty Index)


உலக அளவில் வறுமையைக் கணக்கிடுவதற்கு உருவாக்கப்பட்ட ஒரு புதிய முறை பல பரிமாண வறுமைக் குறியீடு (MPI) ஆக்ஸ் போர்டு வறுமை மற்றும் மனித மேம்பாட்டு முன் முயற்சியும் (OPHI) ஐக்கிய நாட்டு மேம்பாட்டுத் திட்டமும் (UNDP) இணைந்து தயார் செய்தது தான் இந்தக் குறியீடு. ஒரு குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் நலவாழ்வு, கல்வி, வாழ்க்கைத் தரம் போன்ற மூன்று நிலைகளில் 12 குறியீடுகளை மதிப்பீடு செய்து இந்தப் பல பரிமாண வறுமைக் குறியீடு நிர்ணயம் செய்யப்படுகிறது.

பல பரிமாண வறுமைக் குறியீடு கணக்கிடுவது வருமானத்தைமட்டும் வைத்து அல்ல என்று புரிந்ததல்லவா? ஆனால் ஆரோக்கியம், கல்வி, அடிப்படை வாழ்க்கைத் தரம் போன்றவை ஒவ்வொரு தனிமனிதனுக்கும் குடும்பத்திற்கும் எந்த அளவு கிடைக்கின்றன என்பதையும் கருத்தில் கொண்டு பல பரிமாண வறுமைக்கோடு கணக்கிடப்படுகிறது.

| ஆரோக்கியம் | கல்வி | வாழ்க்கைத் தரம் |
|---|---|---|
| • சத்தான உணவு<br>• குழந்தை இறப்பு விகிதம்<br>• தாய்மார்களின் ஆரோக்கியம் | • பள்ளிக் கல்வி<br>• பள்ளி வருகை நிலை | • சமையல் எரிபொருள்<br>• சுத்தம்<br>• குடிநீர்<br>• மின்சாரம்<br>• வீடு<br>• சொத்துக்கள்<br>• வங்கிக் கணக்குகள் |

நிதி ஆயோக் (NITI AAYOG) அங்கீகரித்துள்ள பல பரிமாண வறுமைக் குறியீடு அடிப்படையில் நம் நாட்டின் மாநிலங்கள் மற்றும் மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் 2015-16, 2019-21 ஆண்டுகளின் வறுமை நிலை போன்றவை கீழே உள்ள வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

ST-501-14-SOC. SCI.-(T)7-VOL-1




*படம் 7.9*

மேலே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தை உற்றுநோக்கவும்.

1. பல பரிமாண வறுமைக் குறியீடு அடிப்படையில் இந்திய மாநிலங்களில் கேரளத்தின் நிலையைக் கண்டுபிடிக்கவும்.

2. நமது மாநிலத்தின் வறுமை 2015 –16 ஐ விடவும் 2019–21 –இல் எந்த அளவு குறைந்துள்ளது என்பதைக் கண்டுபிடிக்கவும்.

3. கேரளம் இத்தகைய முன்னேற்றத்தை அடைவதற்கான முக்கிய காரணங்கள் எவை என்று கண்டுபிடித்து ஒரு குறிப்பு தயார் செய்யவும்.

## வறுமையிலிருந்து மீள்வதற்கு...

நமது நாட்டில் நிலவும் வறுமையை ஒழிக்க பலவகை வறுமை ஒழிப்புத் திட்டங்களை மத்திய மற்றும் மாநில அரசுகள் நடைமுறைப்படுத்தி வருகின்றன. இந்த திட்டங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

| திட்டம் | திட்டத்தின் பெயர் | திட்டத்தின் நோக்கங்கள் |
|---|---|---|
| | • மகாத்மா காந்தி தேசிய, கிராமியத் தொழில் உறுதித் திட்டம்<br>• பிரதம மந்திரி ரோஸ்கார் யோஜனா | குறைந்த வருமானம் உள்ள வயது வந்த குடும்ப உறுப்பினர்கள் வேலைவாய்ப்புகளையும் வருமானத்தையும் பெறுகிறார்கள் |
| சுயவேலை வாய்ப்பு – கூலி வேலை வாய்ப்பு திட்டங்கள் | • வாழ்வாதாரத் திட்டம் | குற்றப் பின்னணியில் மரணமடைந்தவர்களின் பொருளாதாரப் பின்னடைவிலுள்ள வாரிசுகளுக்கு வாழ்வாதாரம் வழங்குதல். |
|  | • அய்யங்காளி நகரத் தொழில் உறுதித் திட்டம் | நகரப் பகுதியிலுள்ள குடும்பங்களில் வாழும் எந்த வேலையும் செய்ய ஆர்வமுடைய வயது நிரம்பிய ஒருவருக்கு தொழில் வழங்கும் திட்டம். |
| உணவுப் பாதுகாப்பு திட்டங்கள் | • பொது விநியோக முறை | மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்தல் |
|  | • பிரதம மந்திரி போஷன் சக்தி நிர்மான்(PM-POSHAN) | 1 முதல் 8 ஆம்வகுப்பு வரை உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குதல் |

| | | |
|---|---|---|
| | • சுபிட்ஷா கேரளம் திட்டம் | கேரளத்தை உணவு தன்னிறைவு மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் நடைமுறைப் படுத்தப்பட்ட திட்டம் |
| சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள்  | • தேசிய சமூக உதவித் திட்டம்<br>• பிரதம மந்திரி பாதுகாப்புப் பீமா யோஜனா | ஆதரவற்ற முதியோர்களுக்கு ஓய்வூதியமும், காப்பீடும் மற்றும் பாதுகாப்பும் வழங்குதல் |
| | • ஊனமுற்றோர் நலவாழ்வு காப்பீடுத் திட்டம் | மாநிலத்தில் ஊனமுற்றவர்களுக்கு நல வாழ்வு மற்றும் காப்பீடு வழங்கும் திட்டம். |

இதைத் தவிர கேரளத்தில் வேறு சில திட்டங்களும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன..

சிநேகசாந்த்வனம், வயோமித்ரம், தீவிர வறுமை ஒழிப்பு, காருண்யா நல பாதுகாப்பு, தாலோலம், ஆசுவாச கிரணம், சினேகபூர்வம், புற்றுநோய் பாதுகாப்பு மற்றும் லைப் மிஷன் போன்றவை சில உதாரணங்களாகும்.

மேல் காணும் திட்டங்களின் பயன்பாடு உங்கள் பகுதியில் கிடைக்கப் பெறுபவர்கள் யார் யார் என்று கண்டறியவும். வேறு ஏதேனும் திட்டங்கள் தற்போது உள்ளனவா? என்பதைக் கண்டறிந்து குறிப்பு தயார் செய்யவும்

## குடும்பஸ்ரீயும் வறுமை ஒழிப்பும்

வறுமை ஒழிப்பு மற்றும் பெண்களின் பொருளாதார மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு 1998 மே 17 இல் தொடங்கப்பட்டதே குடும்பஸ்ரீ திட்டம். சமூக வாழ்க்கையில் எல்லா துறைகளிலும் இவ்வமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஷி ஸ்டார்ட்ஸ், மக்கள் உணவகம், கொச்சி மெட்ரோ சர்வீஸ், கேரளத்தின் முதல் வாட்டர் மெட்ரோ சர்வீஸ் போன்றவற்றில் குடும்பஸ்ரீ உறுப்பினர்கள் பணிபுரிகின்றனர். நாட்டின் பெரும்பாலான மாநிலங்களும் குடும்பஸ்ரீ மாதிரியைப் பின்பற்றி வருகின்றன. குடும்பஸ்ரீயின் அனுபவங்களும் சாதனைகளும் வறுமை ஒழிப்புக்கும், அறிவு பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதற்கும் சமூகச் சேமிப்பு பழக்கத்திற்கும் துணைபுரிகின்றன.

வறுமை ஒழிப்பில் குடும்பஸ்ரீயின் செயல்பாடுகள் எந்த அளவுக்கு உதவி புரிந்துள்ளன என்பதை அறிந்துகொள்ள உங்கள் பகுதியில் உள்ள குடும்பஸ்ரீ யூனிட் உறுப்பினர்களுடன் நேர்காணல் நடத்த தேவையான வினா நிரல்களை தயாரிக்கவும்.

## உணவுப் பாதுகாப்பு

உணவுப் பாதுகாப்பு என்பது ஒரு சமூகத்தில் வாழும் அனைவருக்கும் எல்லா காலத்திலும் தேவையான அளவில் பாதுகாப்பான சத்துள்ள உணவு கிடைக்கச் செய்வதும் அவற்றை பெற்றுக்கொள்ள தேவையானச் சூழ்நிலையை உறுதி செய்வதும் ஆகும்..

## உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய இயலாததன் காரணம் என்ன?

| | |
|---|---|
| காலநிலை மாற்றம் | தொழில் மயமாதல் |
| வருமானம் குறைவு | விலை உயர்வு |
| உணவுப் பற்றாக்குறை | விநியோகத்தில் பாகுபாடு |
| | |
| | |
| | |



மானியம் அடிப்படையில் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யும் அரசு நிறுவனங்கள் எவை? கூடுதல் தகவல்களைச் சேகரித்து அட்டவணையில் சேர்க்கவும்.

- சிவில் சப்ளைஸ்
- திரிவேணி சூப்பர் மார்க்கெட்
-
-
-
-

## பசி இல்லாத கேரளம்

பட்டினி இல்லாமல் கேரளத்தை ஒரு பசியில்லாத மாநிலமாக மாற்றுவதே பசி இல்லாத கேரளம் என்ற திட்டத்தின் நோக்கமாகும். 2017-18 முதல் குடும்பஸ்ரீ மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களின் உதவியுடன் இத்தகைய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இத்தகைய புதிய திட்டங்கள் மூலம் அனைவருக்கும் தேவையான உணவை உறுதி செய்வதன் வழியாக உணவுப் பாதுகாப்பில் தன்னிறைவு பெறுவதுதான் இதன் நோக்கமாகும்.

ஆரோக்கியமான வாழ்விற்குச் சத்து நிறைந்த உணவு போதுமான அளவில் தேவையாகும். உணவுப் பாதுகாப்பின்மை பொதுவாகச் சமூகத்தில் வருமானத்தில் பின்தங்கியவர்களை பாதிக்கிறது. ஆனால் நிலநடுக்கம், வறட்சி, வெள்ளப்பெருக்கு, சுனாமி, கொடிய நோய்கள் போன்றவை நிகழும்போது நாட்டின் பிற மக்களையும் உணவுப் பாதுகாப்பின்மை பாதிக்கிறது. பொதுவிநியோயாகத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்படும்போது உணவுப் பற்றாக்குறையை ஓரளவிற்கு நிவர்த்தி செய்யமுடியும்.

## தொடர் செயல்பாடுகள்

- பாரம்பரிய வேளாண் முறையிலிருந்து மாறுபட்டு நவீனத் தொழில்நுட்ப அறிவை பயன்படுத்தி நடைபெறும் வேளாண் முறைகளைக் கண்டறிந்து கட்டுரை தயார் செய்யவும்.
- "வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் வறுமை ஒழிப்பு" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்க அறிக்கை தயார் செய்யவும்.
- குடும்ப ஸ்ரீயின் செயல்பாடுகள் பற்றி அதன் உறுப்பினர்களுடன் ஒரு நேர்காணலுக்கு ஏற்பாடு செய்யவும்.
- மகாத்மா காந்தி தேசிய கிராமியத் தொழில் உறுதித் திட்டத்தின் சிறப்பம்சங்கள் எவை என கேட்டறிந்து கீழே தரப்பட்டுள்ள வினாத் தொகுப்பிற்கு விடை கண்டுபிடிக்கவும்.

| | | |
|---|---|---|
| 1 | திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு | |
| 2 | திட்டத்தின் நோக்கம் | |
| 3 | கேரளத்தில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்திய முதல் இரண்டு மாவட்டங்கள். | |
| 4 | உறுதி செய்யப்பட்ட வேலை நாட்களின் எண்ணிக்கை | |
| 5 | தற்போதைய தினக்கூலி | |
| 6 | திட்டத்தில் உட்படுத்தி செய்யப்படும் செயல்பாடுகள் எவை? | |

# இந்திய அரசியலமைப்புச் சட்டம்

## பாகம் 4 அ

### இந்தியக் குடிமக்களின் அடிப்படைக் கடமைகள்

51 அ  பிரிவுக்கூறு

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்துக்கு இணங்கி ஒழுகுதலும், அதன் உயரிய நோக்கங்களையும் நிறுவனங்களையும் மற்றும் தேசியக் கொடியையும் தேசிய கீதத்தையும் மதித்தலும்;

(ஆ) நம் நாட்டின் விடுதலைப் போராட்டத்திற்கு எழுச்சியூட்டிய உயர்ந்த எண்ணங்களை நெஞ்சில் நிறுத்திப் பின்பற்றுதல்;

(இ) இந்தியாவின் இறையாண்மையையும் ஒற்றுமையையும் நேர்மையையும் நிலைநிறுத்திக் காப்பாற்றுதல்;

(ஈ) இந்திய அரசு வேண்டும்போது நாட்டைப் பாதுகாக்கவும் நாட்டுக்காகத் தொண்டு புரியவும் தயாராயிருத்தல்;

(உ) சமயம், மொழி, வட்டாரம், இன வேற்றுமைகள் வரம்பு மீறுகிற நிலையில் அதற்கு எதிராக எல்லா இந்திய மக்களிடையேயும் நல்லிணக்கத்தையும், பொதுவான உடன்பிறப்பு உணர்வையும் வளர்த்தல்; பெண்மையின் மதிப்புக்கு இழிவு ஏற்படுத்தும் செயல்களை விட்டொழித்தல்;

(ஊ) நமது கலவைப் பண்பாட்டின் உயர்ந்த மரபை மதித்துப் பேணுதல்;

(எ) காடுகள், ஏரிகள், ஆறுகள், வனவிலங்குகள் உள்ளிட்ட இயற்கையான சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து மேம்படுத்தலும், வாழும் உயிர்கள் மீது இரக்கம் கொள்ளுதலும்;

(ஏ) அறிவியல் சார்ந்த மனப்பாங்கு, மனிதநேயம், விசாரித்து அறியும் உள்ளறிவுத்திறம், சீர்திருத்தத்திறம் ஆகியவற்றை வளர்த்தல்.

(ஐ) பொது உடைமைகளைப் பாதுகாத்தலும் வன்முறையை விட்டொழித்தலும்;

(ஒ) பெரும் முயற்சிகள் சாதனைகளின் உயர்ந்த படிகளை நோக்கி இடைவிடாமல் முன்னேறத்தக்க வகையில் தனிமனித கூட்டு நடவடிக்கையின் எல்லாப் பரப்புகளிலும் முதன்மை நிலை எய்த முயலுதல்;

(ஓ) ஆறு வயதிற்கும் பதிநான்கு வயதிற்கும் இடைப்பட்ட பருவமுள்ள தன் குழந்தைக்கு, அதன் பெற்றோர் அல்லது பாதுகாவலர் கல்விக்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்தல்;

ஆகிய இவையனைத்தும் ஒவ்வொரு இந்தியக் குடிமகனின் அடிப்படைக் கடமைகளாகும்.

# குழந்தைகளின் உரிமைகள்

*அன்பார்ந்த குழந்தைகளே,*

*உங்கள் உரிமைகள் எவையென்று தெரியவேண்டாமா? உங்கள் உரிமைகளைப் பாதுகாக்கத் தற்போது ஓர் ஆணையம் செயல்பட்டு வருகிறது. அதன் பெயர் கேரள மாநிலப் பாலர் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் என்பதாகும். உரிமைகள் பற்றிய அறிவு, உங்கள் பங்கேற்பு, பாதுகாப்பு, சமூகநீதி போன்றவற்றை உறுதிப்படுத்த ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிறது இவ்வாணையம். உங்கள் உரிமைகள் எவையென்று பார்ப்போம்.*

- பேசுவதற்கும்கருத்து வெளியீட்டிற்குமான சுதந்திரம்.
- தனிநபர் சுதந்திரம் மற்றும் உயிர் பாதுகாப்பு உரிமை.
- வாழ்வதற்கும் வளர்வதற்குமான உரிமை.
- ஜாதி-மத-இன-நிற சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு மதிப்பதற்கும் அங்கீகரிப் பதற்குமான உரிமை.
- உடல், உள, பால் பலாத்காரங்களிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கும் பராமரிப்பதற் குமான உரிமை.
- பங்கேற்பிற்கான உரிமை.
- குழந்தைத் தொழில் மற்றும் ஆபத்தான தொழில்களிலிருந்து விடுதலை.
- குழந்தைத்திருமணத்திலிருந்து பாதுகாப்பு.
- தமது பண்பாட்டை அறிந்து அதற்கேற்ப வாழ் வதற்கான உரிமை.
- புறக்கணிப்புகளிலிருந்து பாதுகாப்பு.
- இலவச - கட்டாயக் கல்விக்கான உரிமை.
- விளையாடுவதற்கும் கற்பதற்குமான உரிமை.
- அன்பும் பாதுகாப்பும் நிறைந்த குடும்பத்தையும் சமூகத்தையும் பெறுவதற்கான உரிமை

## *சில கடமைகள்*

- பள்ளிக்கூடம், பொதுஇடங்கள் ஆகியவற்றை அழியாமல் பாதுகாக்க வேண்டும்.
- பள்ளிக்கூடத்திலும் கற்றல் செயல்பாடு களிலும் ஒழுக்கத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
- பள்ளிக்கூட அதிகாரிகள், ஆசிரியர், பெற்றோர், உடன் பயில்வோரை மதிக்கவும் அங்கீகரிக் கவும் வேண்டும்.
- ஜாதி-மத-இன-நிறச் சிந்தனைகளுக்கு அப்பாற் பட்டு எல்லோரையும் மதித்து அங்கீகரிப்பதற் கான மன நிலையை அடையவேண்டும்

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

**கேரளமாநிலக் குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு மையம்**
சமூக நீதித்துறை இயக்ககம், அனெக்ஸ் பில்டிங்,
பூஜப்புரை, திருவனந்தபுரம் - 12, தொலைபேசி எண் : 0471 - 2326603
இ-மெயில் : childrights.cpcr@kerala.gov.in, rte.cpcr@kerala.gov.in
www.kescpcr.kerala.gov.in

**சைல்டு ஹெல்ப் லைன்-1098, கிரைம் ஸ்டோப்பர்-1090, நிர்பயா-1800 425 1400**
**கேரள போலீஸ் ஹெல்ப் லைன் - 0471-324300/44000/45000**

*Online* ***R. T. E Monitoring*** *: www.nireekshana.org.in*